இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 166 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 28 வியாழக்கிழமை 11.05.2017

## அமைச்சரவை மாற்றம் குறித்து பேசவில்லை

### கூறுகிறார் ராஜித

கொழும்பு, மே 11
அமைச்சரவை மாற்றம் தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்படவில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகக் கடந்த சில நாள்களாகச் செய்திகள் தொடர்ச்சியாக வெளிவந்திருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பத்திரிகையாளர் சந்திப்பில், மகிந்த அமரவீரவும் இதனை உறுதிப்படுத்தி >> 25

முச்சந்தி முரளி



விருந்தினராக மட்டும் வந்து போகாம... தமிழினம் பற்றியும் பேசவேண்டும் சேர்...

# யாழ்ப்பாணத்துக்கும் செல்லவேண்டும் மோடி

## வலியுறுத்துகிறார் பழ. நெடுமாறன்

சென்னை, மே 11
இலங்கை செல்லும் தலைமை அமைச்சர் மோடி யாழ்ப்பாணத்துக்கு சென்று அங்குள்ள தமிழர்களின் நிலையை நேரில் கண்டறிய வேண்டும் என்று தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், வெசாக்கில் கலந்துகொள்ள கொழும்பு செல்லவிருக்கும் மோடி யாழ்ப்பாணத்துக்கும் சென்று அங்குள்ள தமிழர்களின் நிலையை நேரில் கண்டறியவேண்டும்.
2012 ஆம் ஆண்டில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட >> 06

# இன்று வருகிறார் மோடி



யாழ்ப்பாணம், மே 11
பன்னாட்டு வெசாக் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகிறார். அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் கொழும்பிலும் கண்டியிலும் உச்ச அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அவற்றுக்கு மேலாக மோடியின் பாதுகாப்புப் பிரிவி லுள்ள எம்.ஐ.17 ரக தாக்குதல் வானூர் >> 23



வரலாற்றுச் சிறப்புமிக்க வல்வெட்டித்துறை சிறி முத்து மாரி அம்மன் ஆலய இந்திர விழா நேற்றிரவு வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இம்முறை 50ஆவது ஆண்டாகக் கொண்டாடப்பட்ட இந்த விழாவில் ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர். (விரிவு பக். 04)

# கூட்டமைப்பின் எதிர்ப்பையும் மீறி வடக்கு–கிழக்கில் 6000 பொருத்து வீடு

## அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, மே 11
வடக்கு கிழக்கில் முன் நிர்மாணிக்கப்பட்ட பொருத்து வீட்டை அமைப்பதற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தலா 15 லட்சம் ரூபா செலவில் 6 ஆயிரம் வீடுகள் இதற்கு அமைவாக அமைக்கப்படவுள்ளன.
முன்நிர்மாணிக்கப்பட்ட பொருத்து வீட்டை, வடக்கு கிழக்கில் அமைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. வடக்கு மாகாண சபையும் இதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. இவற்றைப் புறமொதுக்கி, முன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை அமைப்பதற்குக் கொழும்பு அரசின் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் >> 25

## மீண்டும் மாபெரும் பணிப்புறக்கணிப்பு

### மருத்துவர் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 11
அரசு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் சைட்டம் தொடர்பில் உரிய தீர்வை முன்வைக்காவிடின் மாபெரும் பணிப்புறக்க >> 06

## ஒரே மேடையில் நாளை திகாம்பரம், தொண்டா

கொழும்பு, மே 11
மலையக அரசியல் களத்தில் இரு துருவங்களாக வலம்வரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமானும், தொழிலாளர் >> 25

## சிவில் வானூர்தி நிலையமாக பலாலியை மாற்றவேண்டும்

### விரைந்து நடவடிக்கை எடுக்க கூட்டமைப்பிடம் கோருகின்றது யாழ்ப்பாண வணிகர் கழகம்

யாழ்ப்பாணம், மே 11
பலாலி வானூர்தி நிலையத்தையும் காங்கேசன்துறை துறைமுகத்தையும் மிக விரைவில் சீரமைத்துப் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு ஏற்றதாக மாற்றியமையுங்கள். இதற்கான நடவடிக்கைகளை உடன் >> 25

## பொலிஸ் அதிகாரிகள் மீது சூடு; பொலிஸ்மா அதிபரிடம் விளக்கம் கோரும் சாகல

கொழும்பு, மே 11
பிலியந்தலையில் அரச வங்கிக்கு அருகில் சுற்றிவளைப்புக்காகச் சென்ற பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் குழு மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் >> 23

## புதிய பயங்கரவாதச் சட்டத்தால் அரசுக்குப் பன்னாட்டு அழுத்தம்

### திருத்தம் கொண்டு வருமாறு வலியுறுத்தல்

கொழும்பு, மே 11
அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு, பன் >> 25

## நெதர்லாந்துக் கப்பல்களுக்கு இலங்கைப் படை பாதுகாப்பு

### ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து

கொழும்பு, மே 11
சோமாலியக் கடற்கொள்ளையர்களிடமிருந்து நெதர்லாந்து வணிகக் கப்பல்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக >> 25

### அரசியல்வாதிகளின் கால்களில் வீழ்ந்துதான் பதவி பெற்றார் என

## ஆயர் கூறியது ஆதாரமில்லாத குற்றச்சாட்டு புதிய துணைவேந்தர் விக்னேஸ்வரன் பதில்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியை நான் அரசியல்வாதிகளின் காலில் வீழ்ந்துதான் பெற்றுக் கொண்டேன் என்று யாழ். ஆயர் கூறியிருப்பது ஆதாரமில்லாத குற்றச்சாட்டு என்று நிராகரித்திருக்கிறார் புதிய துணைவேந்தர் ஆர்.விக்னேஸ்வரன். ஆயரின் இதைத் தான் வன்மையாகக் கண்டிக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார். புலனாய்வுப் பிரிவின் அறிக்கையின் அடிப்படையிலேயே பேராசிரியர் சிறி சற்குணராஜாவுக்கு துணைவேந்தர் பதவியை அரச தலைவர் மைத் >> 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி முதியவரின் உயிரிழப்பில் சந்தேகம்

அச்சுவேலி, மே 11

அச்சுவேலியில் கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்ட வயோதிபர் சண்முகம் சிவகுருநாதனின். (வயது77) இறப்பு தொடர்பாகச் சந்தேகம் நிலவுவதாக அவரது உறவினர்கள் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட வயோதிபரின் விலா எலும்பு முறிந்த நிலையில் காணப்பட்டமை, அவர் அணிந்திருந்த மோதிரம் மற்றும் துவிச்சக்கரவண்டி ஆகியன காணாமற்போயுள்ளமை, சடலம் இருந்த இடம் மக்கள் நடமாட்டமற்ற பகுதியாக இருந்தமை ஆகிய காரணங்களால் அவரது இறப்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக உறவினர்கள் கூறியுள்ளனர்.

அச்சுவேலி தெற்கு காளி கோயிலடியைச் சேர்ந்த சண்முகம் சிவகுருநாதன் கடந்த 4 ஆம் திகதி வீட்டில் இருந்து புறப்பட்டு அச்சுவேலி நகரத்துக்குச் சென்று வருவாகக் கூறிச் சென்றிருந்தார். செல்லும்போது கைச்செலவுக்கு வீட்டில் 150 ரூபா பணமும் பெற்றுச் சென்றிருந்தார். அவர் தினசரி இவ்வாறு செல்வது வழமை. உரிய நேரத்துக்கு அவர் வீடுதிரும்பாமையால் உறவினர்கள் தேடியதோடு அச்சுவேலிப் பொலிஸிலும் முறைப்பாடு செய்திருந்தனர். கடந்த சனிக்கிழமை அச்சுவேலி மத்தி நரசிங்க வைரவர் கோயிலுக்குப் பின்புறமாக உள்ள வெற்றுக் காணியில் இருந்து அவர் உடலமாக மீட்கப்பட்டிருந்தார். (த-11)

# வடக்குப் பாடசாலைகளுக்கு தகுதியற்ற அதிபர் நியமனம்

## முதலமைச்சருக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், மே 11

வடக்கில் வழங்கப்பட்டுள்ள முறையற்ற அதிபர் நியமனங்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு அந்தப் பாடசாலைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுத் தகுதியானவர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு கோரி வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அதிபர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட காசிப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி அ.த.க.பாடசாலை, கலட்டி அ.மி.த.க. பாடசாலை, பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் அ.மி.த.க்.பாடசாலை, பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம் தீவகம் கல்விவலயத்துக்குட்பட்ட அல்லைப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை தென்மராட்சி கல்விவலயத்துக்குட்பட்ட வரணி வடக்கு சைவப்பிரகாச பாடசாலை, போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை வடமராட்சி கல்விவலயத்துக்குட்பட்ட வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட தர்மகேணி அ.த.க.பாடசாலை, முகாவில் அ.த.க.பாடசாலை ஆகியவற்றுக்கு அதிபர்களை நியமிக்க விண்ணப்பம் கோரப்பட்டிருக்கவில்லை.

பல புதிய தகுதியான அதிபர்களுக்குப் பொருத்தமான பாடசாலைகள் வழங்கப்படவில்லை. அதிபர் தரத்தில் உள்ளவர்கள் ஒரே பாடசாலையில் மூன்றுக்கும் அதிகமான பதில் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளன்ர். கல்வியமைச்சின் சுற்றறிக்கைகளை மீறி ஆசிரியர் தரத்தில் உள்ளவர்களுக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை எமது சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தரம் 3 போட்டிப் பரீட்சையில் - வடக்கு மாகாணத்தில் 389 பேர் அதிபர்களாக நியமனம் பெற்று தகுதியான பயிற்சிகளை மேற்கொண்டு வெளியேறியுள்ள நிலையில் அவர்களுக்குப் பொருத்தமான பாடசாலைகளை வழங்காமல் புதிய அதிபர் நிய்மனம் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரத்தையும் மீறி ஆசிரியர் தரத்தில் உள்ளவர்களுக்கு அதிபர் பதிவி வழங்கப்பட்டுள்ளமை மிகப் பெரும் முறைகேடு. ஒரு பாடசாலையில் அதிபர் வெற்றிடம் உருவாகுமானால் சுற்றறிக் கைக்கமைய ஊடகங்கள் வாயிலாக விண்ணப்பம் கோரப்பட்டு தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்குவதே சட்ட வரையறைக்குட்பட்டதும் நீதியானதுமான செயற்பாடு - என்றுள்ளது. (த-4)

# அரியாலையில் பகலிலும் பகிரங்க மணல் கொள்ளை

## தடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் இரவுவேளைகளில் இடம்பெற்று வந்த மணல் கொள்ளை தற்போது பட்டப்பகலிலும் பகிரங்கமாக இடம்பெறுகின்றது. ஆயினும் பொலிஸார் இதனைக் கண்டுகொள்வதில்லை எனப் பிரதேச மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

அரியாலை உதயபுரம் கிழக்கு, மணிப்புரிப் பகுதிகளில் இரவில் மட்டும் நடைபெற்று வரும் மணல் கொள்ளையைத் தடுப்பதற்கு அதிகாரிகளோ, பொலிஸாரோ இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் பகல் வேளைகளிலும் இப்போது மணல் கொள்ளை பகிரங்கமாக நடப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

மக்கள் வசிக்காத பகுதிகளில் இவ்வாறு மணல் அகழப்படுவதால் இதனை அண்டிய பகுதிகளுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம் கானப்படுகின்றது. குறித்த பிரதேசத்துக்குள் நுழையும் உழவு இயந்திரங்கள் தொடர்ச்சியாக மணலை அள்ளிச் செல்கின்றன.

இவ்வாறு அள்ளிச் செல்லப்படும் மணல் மக்கள் குடியிருப்பை அண்டிய பகுதிகளில் வைத்துப் பார ஊர்திகளுக்கு மாற்றப்பட்டு ஏனைய பகுதிகளுக்குக் கடத்தப்படுவதாகப் பிரதேச மக்கள் மேலும் கூறினர். (த-101)





# நாடு முழுவதிலும் வெசாக் வலயங்கள்

## அலங்காரங்களைப் பார்வையிட பெருந்திரளான மக்கள் படையெடுப்பு

கொழும்பு, மே 11

ஐ.நா. வெசாக் தினம் இலங்கையில் கொண்டாடப்படுகின்றமையால் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் வெசாக் தினக் கொண்டாட்டங்கள் களை கட்டியுள்ளன.

பன்னாட்டு வெசாக் கொண்டாடத்தை முன்னிட்டு நாளையும், நாளை மறுதினமும் நாடெங்கும் வைபவங்கள் நடைபெறுவதுடன் பிரதான வைபவம் கண்டி தலதா மாளிகையில் நடைபெறவுள்ளது.

பன்னாட்டு வெசாக் தினத்தை முன்னிட்டு 85 நாடுகளைச் சேர்ந்த பௌத்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என ஐ.நா. குறிப்பிட்டுள்ளது. கடந்த வருடம் பன்னாட்டு வெசாக் பௌர்ணமி தினம் தாய்லாந்து நாட்டில் நடைபெற்றிருந்தது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து கொழும்பில் வடிவமைக்கப்பட்டுள்ள வெசாக் அலங்காரங்களைப் பார்வையிட பெருந்திரளாக மக்கள் வருகின்றனர். உலகில் முதன் முறையாக நவீன லேசர் தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்ட வெசாக் கண்காட்சியும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் காலி முகத்திடலில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சி தொடர்ச்சியாக ஒரு வாரம் இடம்பெறவுள்ளது. கொழும்பைச் சூழவுள்ள அனைத்துப்பிரதேசங்களிலும் இம்முறை வெசாக் வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. பௌத்த தர்மத்தின்படி தன்சல் எனப்படும் சாப்பாடு பரிமாறும் நிகழ்வுகளும் நாட்டின் அனைத்து நகர் மற்றும் கிராமப் புறங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# பௌத்தத்துக்கு அரசமைப்பில் முதன்மை இடம்

## அரச தலைவர் மைத்திரி உறுதி

கொழும்பு, மே 11

அரசமைப்பில் பௌத்த சமயத்துக்குரிய முதன்மை இடம் பாதுகாக்கப்படும். அதேபோல் சமயங்களுக்கும் நியாயத்தை வழங்குவதே அரசின் நிகழ்ச்சித் திட்டமாகும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பத்தரமுல்லை அபேகம வளாகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற படையினருக்கு வீடுகள் மற்றும் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த தத்துவத்தின் உன்னத செய்தியை உலகுக்கு எடுத்துச் செல்லும் நோக்கிலேயே வெசாக் தின நிகழ்வுகள் இலங்கையில் நடைபெறுகின்றன. நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் படையினர் மேற்கொண்ட பணிகளை ஒருபோதும் மறந்துவிட முடியாது. அவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் சலுகைகள் மேலும் அதிகரிக்கப்படும். அவர்களின் நலன்களைப் பாதுகாக்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றார்.

பாதுகாப்புத்தரப்பினரின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 90 வீடுகளுக்கான உரிமைப் பத்திரங்கள் அரச தலைவரினால் வழங்கி வைக்கப்பட்டன.

'சத்விரு சங்ஹி' திட்டத்தின் கீழ் வீடமைப்புக்காக 503 இராணுவத்தினருக்கு தலா ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டது. (த-5)



# வேகமாக வெப்பமுறும் இந்தியப் பெருங்கடல்

கொழும்பு, மே 11

ஏனைய எல்லா பெருங் கடல்களையும் விட இந்தியப் பெருங்கடல் வேகமாக வெப்பமடைந்து வருவதாக அன்டாட்டிக் மற்றும் பெருங்கடல் ஆய்வுக்கான தேசிய நிலையத்தின் பணிப்பாளர் ரவிச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

'ஏனைய பெருங்கடல்களை விட இந்தியப் பெருங்கடல் வேகமாக வெப்பமடைந்து வருகிறது. இது கூடுதலான கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஏன் இப்படி நடக்கிறது என்ற கேள்விக்கு எம்மிடம் பதில் இல்லை. வெப்பமடையும் காலநிலையுடன் வைத்துப் பார்க்கும் போது, இந்தியப் பெருங்கடல் வெப்பமாதல் வேகமாக இருக்கிறது. செய்மதிக் கண்காணிப்புகள், வெப்பநிலை அட்டவணைகள், ஏனைய தரவுகளில் இருந்து இந்த முடிவுக்கு வர முடிகிறது' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகத்துக்கு இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் பயணம்

கொழும்பு, மே 11
இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் பாதுகாப்பு ஏற்பாடுகள், முன்னேற்பாடுகள் குறித்துக் கண்டறிவதற்காக இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து மற்றும் இந்தியப் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஆகியோர் நேற்றுக் காலை ஹற்றன் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தியா அரசின் நிதி உதவியால் புனரமைக்கப்பட்ட டிக்கோயா வைத்தியசாலைக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி மலையகத்துக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# உலகின் முதன்மை மதம் இந்து சமயமே

## பதுளை மாவட்டச் செயலர் நிமால் அபயசிறி தெரிவிப்பு

பதுளை, மே11
இந்து சமயமே உலகில் முதன்முதலாகத் தோன்றிய மதமாகும். 2600 வருடங்களுக்கு முன்னர் புத்தபிரான் வருவதற்கு முன்பிருந்தே இந்துசமயம் இருந்துள்ளது. அந்தச்சமயத்தைப் போற்றிப் புகழ வேண்டியது இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய சமயத்தவர்களினதும் கடமையுமாகும்.
இவ்வாறு பதுளை மாவட்ட மாவட்டச் செயலர் நிமால் அபயசிறி தெரிவித்தார்.
ஊவா சக்தி அமைப்பினால் பதுளை ரிவர் சைட் விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மலையக மக்களின் சமூக சீரமைப்பு விடயமான கொள்கைப் பிரகடனம் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
இருநூறு வருட வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை முறை இன்னமும் மேம்படவில்லை என்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.
தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை ஒருவர் ஒரு கிலோ தேயிலைத் தளிர்களைக் கொய்வதற்கு இரு விரல்களில் எழுநூறு அல்லது எண்ணூறு முறை கிள்ளவேண்டும். அப்படியாயின் ஒருநாள்சம்பளத்திற்கான 20 கிலோ நிறையுடைய தளிர்களைக் கொய்வதற்கு 16ஆயிரம் அல்லது 18ஆயிரம் முறை கிள்ளவேண்டும். எனினும் இப்படி உழைக்கும் பணத்தின் பெரும்பகுதி, மது பாவனைக்குப் பயன்படுத்தப் படுவது கவலைக்குரியதே.
அரசியல்வாதிகளும், இந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடிய விடயங்களில் பெரியளவில் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. அந்த நிலை முற்றுமுழுதாக மாற்றமடைய வேண்டும்.
பதுளை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம் பாடசாலைகள் சிலவற்றில் உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் பாடங்கள் புகட்டப்படுகின்றன. ஆனால், தமிழ் மொழிப்பாடசாலைகளில் உயர்தரங்களில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்க பாட ரீதியிலான ஆசிரியர்கள் இல்லாதுள்ளனர்.
இதனால், உயர்தர தமிழ் மாணவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றார். (கு-ய-43)

## கீதா குமாரசிங்க பதவி நீக்கம்; நடவடிக்கை எதுவும் இல்லை

### தேர்தல்கள் ஆணையகத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 11
காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமார சிங்கவின் உறுப்புரிமை நீக்கப்பட்டிருப்பதாக நாடா ளுமன்றத்தின் செயலாளர் தனக்கு அறிவித்துள்ளபோதிலும் அது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எது வும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று தேர்தல்கள் ஆணையகத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருக்கிறார்.
தனது நாடாளுமன்ற உறுப்புரிமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராக ரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தான் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருப்பதாகக் கீதா குமாரசிங்க நேற்றுமுன்தினம் தனக்கும் கடிதம் மூலம் அறிவித்திருப்பதாகவும் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (கு-5)

## புதியவர்களுடன் அடுத்த அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, மே 11
அடுத்து நடக்கவுள்ள அமைச்சரவைக் கூட்டம் அநேகமாக புதிய அமைச்சரவையாக இருக்கலாம் என்று அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
அமைச்சரவைக் கூட்டமொன்று நடந்து முடிந்ததும் அடுத்த கூட்டத்துக்கான திகதியும் நேரமும் அறிவிக்கப்படுவது சம்பிரதாயமாகும். எனினும், இறுதியாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த கூட்டத்தில் அடுத்த கூட்டத்துக்கான திகதியும் நேரமும் அறிவிக்கப்படாததால் அடுத்த கூட்டம் அநேகமாக மாற்றம் செய்யப்பட்ட அமைச்சரவையின் கூட்டமாக இருக்கலாம் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் 8 ஆவது சரத்தின் கீழ் தலைமை அமைச்சரின் தலையீடு இல்லாமலே அரச தலைவருக்கு அமைச்சரவையை மாற்றுவதற்கான அதிகாரம் உள்ளது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச தலைவர் வெகுவிரைவில் அமைச்சரவையில் மாற்றமொன்றைச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (கு-5)

## பிணைமுறி மோசடி விவகாரம்: மத்திய வங்கி ரகசிய அறிக்கை கசிந்தமை குறித்து விசாரணை

கொழும்பு, மே 11
பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் இரகசிய அறிக்கை வெளியானது தொடர்பில் உள்ளக விசாணைகளை நடத்த ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.
வங்கியின் இரகசிய அறிக்கை வெளியானது தொடர்பில் முதலில் உள்ளக விசாரணையொன்று நடத்தப்படும் எனவும் அதன்பின் வெளியக விசாரணையொன்று நடத்தப்படலாம் எனவும் அதனைத் தொடர்ந்து இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (கு-5)

# காடழிப்பைக் குறைக்கும் ஐ.நா செயற்றிட்டம் மைத்திரியிடம்



கொழும்பு, மே 11
காடழிப்பைக் குறைப்பதன் மூலம் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டம், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்ப ட்டுள்ளது.
பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் வைத்து நேற்று முன்தினம் இந்தச் செயற்றிட்டம் கையளிக்கப்பட்டதாக அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
அதில் கூறப்பட்டுள்ளதாவது:
ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஊனா மெக்கோலி இந்தச்செயற்றிட்டத்தை அரச தலைவரிடம் வழங்கினார்.
இது வனப் பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய செயற்றிட்டமாகும். அரச மற்றும் அரசசாரா துறைகளின் ஒத்துழைப்புடன் இலங்கையின் காடழிப்பைக் குறைத்து வனப் பரம்பலை அதிகரிப்பதற்கான அணுகுமுறையை ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.
போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் சக்திவலு துறைகளிலிருந்து பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்காகக் காடுகளை அதிகரிப்பதற்கான செயற்றிட்டத்தில் இலங்கையும் இணைந்துள்ளது.
இந்த நிகழ்வில் அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, வன பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர சத்தரசிங்க உள்ளிட்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்என்றுள்ளது. (கு-10)

## இலங்கைப் பொருளாதாரம் 2017 இல் சிறிதளவே வளரும்

### ஐ.நா. பொருளாதார ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, மே 11
இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டில் மிகச் சிறிய வளர்ச்சியையே எட்டும் என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான ஐ.நா பொருளாதார சமூக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
ஆசிய பசுபிக்கிற்கான ஐ.நா பொருளாதார சமூக ஆணைக்குழுவின் ஆய்வு அறிக்கை 2017 கொழும்பில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.
இதில் 2016ஆம் ஆண்டு 4.4 வீதமாக இருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, இந்த ஆண்டில் 4.8 வீதமாக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
2018ஆம் ஆண்டில், இது 4.9 வீதமாக இருக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.
இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டில், 5 வீத பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று கணித்திருந்த போதிலும், அதனை விடச் சற்றுக் குறைவான வளர்ச்சியே ஏற்படும் என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான ஐ.நா பொருளாதார சமூக ஆணைக்குழு கணித்துள்ளது. (கு-5)

# நீதிமன்றத்தின் கட்டளை கிழிப்பு; விசாரணை மேலதிக நீதிவானிடம்

திருமலை, மே11
திருகோணமலையில் பட்டதாரிகளின் போராட்டத்தின்போது நீதிமன்றக் கட்டளை கிழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை திருகோணமலை மேலதிக நீதிவானுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.
தமது கட்டளை மீறப்பட்டமை குறித்து தாமே விசாரணை செய்வது நீதிக்குப் புறம்பானது எனத் திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா தெரிவித்தார்.
இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் திருகோணமலை பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வேலைதேடும் பட்டதாரிகள் கிழக்கு மாகாணசபைக்கு முன்னால் கடந்த மாதம் 25ஆம் திகதி போராட்டம் நடத்தினர்.
இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்துகொள்ளவேண்டிய நடைமுறைகள் தொடர்பான கட்டளையொன்றைத் திருகோணமலை பிரதம நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா பிறப்பித்திருந்தார்.
இந்தக் கட்டளையைத் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கையளித்தபோது அவர்கள் அதனைக் கிழித்துக் கீழே போட்டு மிதித்ததுடன் தகாத வார்த்தைகளால் பேசினர் எனப் பொலிஸாரால் வழக்கு கோவையிடப்பட்டிருந்தது.
இந்த நிலையில் இந்த வழக்கு திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தினால் நகர்த்தல் பத்திரம் மூலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் பிடியாணை பிறப்பிக்குமாறும் சட்டத்தரணிகள் சார்பில் கோரப்பட்டிருந்தது.
இந்த நிலையில் திருகோணமலை பிரதம நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா, நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையைக் கிழித்துக் காலால் மிதிக்கும்போது பொலிஸார் பார்த்துக் கொண்டிருந்தனர் என்றும், அதே வேளை இவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருக்கலாம் என்றும் பொலிஸாருக்குத் தெரிவித்தார். பிடியாணை தேவையில்லை என்றும், அவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறும் அல்லது சந்தேகநபர்களை நேரடியாக வந்து நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் நீதிவான் தெரிவித்தார்.
இந்த வழக்கு தற்போது விசாரணைக்காகத் திருகோணமலை மேலதிக நீதிவானுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். (ய-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடியகாடு இளைஞர்கள் தயாரித்த பரசூட் வல்வை இந்திர விழாவில் நேற்றுச் சிறப்பு



யாழ்ப்பாணம், மே 11
வருடாந்தம் வெகு விமர்சையாக நடைபெறும் வடமராட்சி வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தின் இந்திர விழாவில் நெடியகாடு பிரதேச இளைஞர்கள் தயாரித்துப் பறக்கவிட்ட பரசூட் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.
வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தின் இந்திர விழா வருடாந்தம் சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று நடைபெறும். வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் ஆலய சூழலில் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறும். இரவு ஆரம்பமாகும் கலை நிகழ்வுகள் அதிகாலை வரை நடைபெறும்.
விழாவைச் சிறப்புக்கும் வண்ணம் ஆலயத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள் வர்ண மின் குமிழ்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன.
வல்வெட்டித்துறை துறை நெடிய காடு இளைஞர்கள் நெடியகாடு பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 50 அடி நீளமான பரசூட்டை நேற்றுப் பறக்கவிட்டனர்.
நெருப்பு வெப்பத்தின் மேற்காவுகை ஓட்டத்தைப் பயபடுத்தி இந்த மிகப் பெரிய பரசூட் ஆலய வளாகத்தில் இருந்து அவர்கள் பறக்க விட்டனர்.
இது பார்ப்பவர்களை மகிழ்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தி இருந்தது. நெடியகாடு இளைஞர்கள் ஒவ்வொரு வருடமும் இந்திர விழாவின் போதும் பார்ப்பவர்களை ஆச்சரியப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவது வழக்கம் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
(வ-ரி)

## வட மத்திய மாகாண அமைச்சர் ரஞ்சித் நேற்றுப் பதவி துறப்பு

கொழும்பு, மே 11
வட மத்திய மாகாண சபையில் தான் வகித்து வந்த அமைச்சுப் பதவி உட்பட அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் விலகுவதாக வட மத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய போக்குவரத்து, விளையாட்டு, வர்த்தகம், கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரஅமைச்சருமான எஸ்.எம். ரஞ்ஜித் தெரிவித்தார்.
வட மத்திய மாகாண அமைச்சர் கே.எச். நந்தசேன முன்னறிவிப்பின்றி நேற்றுப் பதவி விலக்கப்பட்டார். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தானும் பதவி விலகியதாக ரஞ்சித் தெரிவித்தார்.
இதேவேளை, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் இருப்பதுவே எனது அமைச்சுப் பதவி பறிக்கப்படுவதற்கு காரணம் என்றும் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டமைக்கு தான் கவலைப்படவில்லையென்றும் பதவி நீக்கப்பட்ட வட மத்திய மாகாண அமைச்சர் கே.எச். நந்தசேன தெரிவித்தார்.
"எந்தவித முன்னறிவித்தலும் இன்றி என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கியுள்ளனர். அது தனிப்பட்ட தேவைக்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்று.
அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருப்பதை இன்று (நேற்று) காலையில்தான் அறிந்து கொண்டேன்" என்று நந்தசேன செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தார்.
(வ-4)

## இலங்கை வழியாக லிபியாவுக்கு கடத்திய மாத்திரைகள் சிக்கின

### இத்தாலிப் பொலிஸார் தெரிவிப்பு

லண்டன், மே 11
'இலங்கை ஊடாக லிபியாவுக்கு கடத்தப்பட்ட கொக்கேய்ன் கலந்த வலி நிவாரணி மாத்திரைகள் ஜெனோவா துறைமுகத்தில் கைப்பற்றப்பட்டன. அவை ஐஎஸ் தீவிரவாதிகளுக்கு விற்பனை செய்வதற்காகவே கடத்தப்பட்டன' என்று இத்தாலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இதுதொடர்பில் ரைம்ஸ் ஒவ் லண்டன் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
37 மில்லியன் வலி நிவாரணி மாத்திரைகள் இத்தாலியின் ஜெனோவா துறைமுகத்தில் வைத்து இத்தாலிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. லிபியாவில் போர் நடத்தும் ஐஎஸ் தீவிரவாதிகள் பயன்படுத்தும் மாத்திரைகளே இவை என்று சந்தேகிக்கப்படுகிறது.
சில வலி கொண்ட நோய்களுக்காக பயன்படுத்தப்படும் இந்த மாத்திரிகைகளில் கொக்கேய்ன் கலந்துள்ளது. இவை ஐஎஸ் தீவிரவாதிகளுக்கு 2 டொலருக்கு விற்கப்படும் என்று சந்தேகிக்கப்படுகிறது.
ஜெனோவா துறைமுகத்தில் 3 கொள்கலன்களில் இந்த மாத்திரைகள் மறைத்துவைக்கப் பட்டிருந்தன. அந்தக் கொள்கலன்களில் சம்போ ஒன்றின் பெயருடன் லிபியா என எழுதப்பட்டிருந்தன. டுபாய் இறக்குமதியாளர் ஒருவர் 2 லட்சத்து 50 ஆயிரம் டொலருக்கு இந்த மாத்திரைகளை விற்பனை செய்ததாகக் கூறப்படுகிறது என்றுள்ளது. (வ-5)

## இணைப்பேச்சாளராக தயாசிறி சு.க. கூட்டத்தில் முடிவாகியது

கொழும்பு, மே 11
அமைச்சரவை இணைப் பேச்சாளராக சிறி லங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநித்துவப்படுத்தி விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவை நியமிக்கக் கட்சியின் அனுமதி கிடைத்துள்ளது.
முன்னதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவின் பெயர் முன்மொழியப் பட்டிருந்தபோதும், அவர் அந்தப் பதவியை நிராகரித்துள்ளார் என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.
தற்போது அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாக அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, கயந்த கருணாதில ஆகியோர் கடமையாற்றுகின்றனர். சிறி லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சர் தயாசிறி ஜயசேகரா நியமிக்கப்படவுள்ளார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போதும் சிறி லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஒரு அமைச்சரவை பேச்சாளர் நியமிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மற்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோரின் அனுமதி கிடைக்கப்பட்டதன் பின்னர் தயாசிறி ஜயசேகராவின் பெயர் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்மொழியப் படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற - 4)

## யாழ். சிறைச்சாலையிலிருந்து தப்பிக்க முயன்ற கைதி காயம்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சுற்றுச் சுவர் ஏறிப் பாய்ந்து தப்பியோட முற்பட்ட கைதி சுவரிலிருந்து தவறி விழுந்து இடுப்பில் பாதிப்பு ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுற்பகல் இடம்பெற்றது. மகிந்தன் என்றழைக்கப்படும் குறித்த கைதிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றங்களில் திருட்டு மற்றும் கொள்ளை உள்ளிட்ட 21 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று சிறைச்சாலைத் தரப்புத் தெரிவித்தது.
"சிறைச்சாலையின் சுற்றுச் சுவர் மிக உயரமாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு வழியில் அவர் சுவரின் குறிப்பிட்ட உயரத்துக்கு ஏறிய நிலையில் தவறி விழுந்தார். அதனால் அவர் இடுப்பில் மிகமோசமாசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் கதறினார். சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அவரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்" என்று சிறைச்சாலைத் தரப்பு மேலும் தெரிவித்தது.
(வ-4, 101)

## மேல் நீதிமன்ற நீதிபதிகளை 85ஆக அதிகரிக்கத் தீர்மானம்

### ஒப்புதல் வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, மே 11
மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 85ஆக அதிகரிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது என்று நீதி அமைச்சுத் தெரிவித்தது.
நீதிமன்ற ஒழுங்கமைப்பு சட்டத்தைத் திருத்துவதற்கு சட்ட வரைவு தொகுப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
நீதிமன்ற ஒழுங்கமைப்பு சட்டத்தில் 75 மேல் நீதிமன்ற நீதிபதிகளே நியமிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நாட்டில் தற்போது 75 மேல் நீதிமன்ற நீதிபதிகளே கடமையாற்றுகின்றனர். எனினும் மேல் நீதிமன்றங்களில் தீர்வு காணப்படாத வழக்குகள் பெருமளவில் உள்ளன. அவற்றுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கும் பொருட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நீதி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.
கடந்த மார்ச் மாதம் வரை குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றங்களில் 5 ஆயிரத்து 749 வழக்குகளும், வர்த்தக மேல் நீதிமன்றங்களில் 5 ஆயிரத்து 580 வழக்குகளும், மேல் நீதிமன்றங்களில் 16 ஆயிரத்து 574 வழக்குகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## வெசாக்கை முன்னிட்டு 575 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், மே 11
வெசாக் பண்டிகையை முன்னிட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 575 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலை கள் ஆணையாளர் தெரிவித்தார்.
தண்டப் பணத்தைச் செலுத்த தவறியோர், 75 வயதுக்கு மேற்பட்ட 10 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தோர் மற்றும் சிறுகுற்றம் புரிந்த கைதிகளுமே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.
இவர்களில் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 கைதிகளும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் என்று யாழ்ப்பாணச் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். பி பெரேரா தெரிவித்தார். வருடாந்தம் வெசாக், சுதந்திர தினம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நாள்களையொட்டி அரச தலைவரின் பரிந்துரைக்கு அமைவாக கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர்.
(வ-4, 106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு மாற்றம் தமிழரின் அடிமை சாசனமல்ல

## சிவமோகன் எம்.பி. சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, மே 11
தமிழ் பேசும் மக்களுடன் உரிமைகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள ஆணை கேட்டது கூட்டு அரசு. இப்போது அரமைப்பு மாற்றத்தைப் பேரினவாத நரித் தந்திரங்கள் மூலம் உருக்குலைத்து தமிழருக்கு அடிமைச்சாசனம் எழுத முற்படுவதை ஏற்க முடியாது.
இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் ஊடகக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவித்ததாவது
கிடைப்பதைப் பெற்று அடிமையாக வாழ்வதை விட தமிழினம் போராடி வாழ்வதே மேல். விடுதலை வேண்டிப் போராடியவர்கள் உலகில் என்றும் தோற்றதில்லை. . தென்சூடான், கிழக்குத்திமோர், மொண்டிநீக்குரோ கொசோவோ போன்ற நாடுகள் இனப்படுகொலைகளின் விளிம்புகளில் வெற்றி கொண்ட நாடுகள்.
பழைய வரலாற்றை சிங்கள தேசமும் பேரினவாத அரசுகளும் மீட்டிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் தமிழர் தமது உரிமைகளை சமமாக அனுபவிக்க உரித்துடையவர்கள்.
தமது பாதுகாப்பு, தமது காணி உரிமை, தமது அபிவிருத்தி ஆகியவற்றை உறுதிப்படுத்திய தம்மை தாமே ஆழும் உரிமை தமிழ் பேசும் முஸ்லீம்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டிய காலம் வந்து விட்டது. என்றார். (ற-21)

## இளங்கோ அடிகளாரின் நினைவு வவுனியாவில்



வவுனியா, மே 11
தமிழ் விருட்சம் அமைப்பு. கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், நகர வரியிப்பாளர்கள் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த இளங்கோ அடிகளாரின் நினைவு தினம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கோவிற்குளம் சிவன் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு முன்னால் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் முன்னாள் நகர பிதா சந்திரகுலசிங்கம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வ. பிரதீபன். மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், சுகாதார அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் அமைப்பாளர் வ.பிரதீபன் மற்றும் அரச உத்தியோகத்த்கள், சமூக ஆர்வலர்கள், சிவன் கோவில் அன்பகச் சிறுவர்கள் எனப் பல ரும் கலந்துகொண்டனர்.
அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதுடன் தமிழ்மணி அகளங்கனின் உரையும் இடம்பெற்றது. (த)

## வவுனியா விபத்தில் ஒருவர் காயம்



வவுனியா, மே 11
வவுனியாவில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.
வவுனியா பொது வைத்தியசாலைக்கு முன்பாக முற்பகல் 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
வவுனியாவிலிருந்து ஏ-9 வீதியூடாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது அதே பாதையில் பயணித்த சொகுசு வாகனம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.
விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதியே காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (து-21)

## வவுனியா கலை இலக்கிய வட்டம் நடத்திய முழுநிலாக் கருத்தாடல்

வவுனியா, மே 11
வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வவுனியா ஆங்கிலச் சங்கத்தடன் இணைந்து நடத்தும் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு நேற்றுக் முற்பகல் 10.00 மணியளவில் வவுனியா சுத்தானந்த இந்த இளைஞர் சங்க மண்டபத்தில் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்றது.
முன்னாள் ஆங்கிலச் சங்க இணைச் செயலாளர் அமரர் சு. சிவபாலனின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் அனுஸ்டிக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசன் தலைமையில் ஆங்கிலச் சங்கத்தின் வெளியீடான பாலைவனச் சோலை இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது.





இந்த நிகழ்வின் ஒரு அங்கமாக இலங்கைத் தீவைச் சைக்கிளில் சுற்றி வந்து 1515 கிலோ மீற்றர் சாதனைப் பயணம் மேற்கொண்ட தர்மலிங்கம் பிரதாபனைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.
வவுனியா மத்திய மகாவித்தியலாய மாணவர்கள், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவிகள், மாற்றவலுவுள்ளோருக்கான வலுவூட்டல் அமைய மாணவர்கள், மாற்றாற்றல் உடைய மாணவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.
புத்திஜீவிகள், அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (த)



## தேரில் எழுந்தருளினார் கனகாம்பிகை அம்மன்

கிளிநொச்சி, மே 11
கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.
இரணைமடுக்குளத்தின் மேற்குக் கரையில் யோகர் சுவாமிகளால் உருவாக்கப்பட்ட கனகாம்பிகை அம்மன் ஆலயம் கிளிநொச்சி மக்களுக்கு முக்கியமாக இரணைமடுக் குளத்தின் கீழான விவசாயிகளுக்கு மிகவும் நம்பிக்கை தரும் ஆலயமாக விளங்கி வருகிறது.
ஆயிரக்கணக்கான பக்கதர்கள் சூழ கனகாம்பிகை அம்மன், முருகன், பிள்ளையார் சகிதம் வீதி உலா வந்து அருட்காட்சியளித்தார். (து-35)

## இந்தியாவிலிருந்து நேற்று 16 அகதிகள் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 11
இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த 16 தமிழ் அகதிகள் நேற்று நாடு திரும்பியுள்ளனர் எனச் சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.
கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் வைத்து மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் இவர்களைவரவேற்றனர்.கடந்த இரண்டு வாரங்களில், இந்தியாவில் இருந்து 56 இலங்கை அகதிக்ள் நாடு திரும்பியுள்ளனர். (து-10)

# 5000 ரூபா தாளில் மகேந்திரனின் கையொப்பம் இருப்பது தவறல்ல

## கூறுகிறார் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித்

கொழும்பு, மே 11
இலங்கையின் 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீனமகேந்திரனின் கையொப்பம் இருப்பதில் தவறில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.
மத்திய வங்கியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
மத்திய வங்கியின் ஆளுநராக இலங்கைக் குடிமகன் ஒருவரே இருக்க வேண்டும் எனும் சட்டவரையறைகள் இல்லை. சிங்கப்பூர் குடியுரிமையுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் கையொப்பம் சட்ட ரீதியற்றது எனப் பலரும் குறிப்பிடுகின்றனர்.
இலங்கையின் முதலாவது மத்திய வங்கி ஆளுநர் ஒரு ஐக்கிய அமெரிக்கக் குடிமகன். 5ஆயிரம் ரூபா நாணயத் தாளில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன மகேந்திரனின் கையெழுத்திருப்பதில் தவறில்லை. இதனால் மக்கள் குழப்பமடையத் தேவையில்லைஎன்றார்.
முன்னாள் ஆளுநரின் கையொப்பமிடப்பட்டுள்ள நாணயத்தாள்களின் சட்டபூர்வத் தன்மை தொடர்பாக அறிந்து கொள்ள உயர் நீதிமன்றம் செல்லவுள்ளதாக ஒன்றிணைந்த பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன அண்மையில் தெரிவித்திருந்தார்.
தற்போது பயன்படுத்தப்படும் 5 ஆயிரம் மற்றும் 100 ரூபா நாணயத்தாள்களில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன மகேந்திரனின் கையொப்பம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மரக் கிளை வீழ்ந்து ஓட்டோ முற்றாகச் சேதம்






## சாரதி படுகாயம்

யாழ்ப்பாணம், மே 11

சாலையால் சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டி மீது சாலையோரம் நின்ற அரச மரத்தின் பெரிய கிளையொன்று முறிந்து விழுந்தமையால் அது முற்றாகச் சேதத்துக்குள்ளாகியது.

முச்சக்கரவண்டியில் சாரதி மட்டுமே பயணித்தார். அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் சாலையால் முச்சக்கர வண்டி நேற்று அதிகாலை 4.30 மணியளவில் பயணித்த போது, ஆனைக்கோட்டை புளியங்கன்று பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக )(வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்துக்கு அருகாமையில்) முதன்மை சாலையில் நின்ற அரச மரத்தின் பெரிய கிளையொன்று அதன் மீது முறிந்து விழுந்தது. அதனால் முச்சக்கர வண்டி முற்றாகச் சேதமடைந்தது. முச்சக்கர வண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். விபத்துக் குறித்த விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (வ-10-115)



யாழ்ப்பாண நகரில் நேற்று நடைபெற்ற வெசாக் கொண்டாட்டங்களை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார். வழமை போல் இராணுவத்தினரால் அலங்கார வேலைப்பாடுகள் பண்ணையை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டதுடன் இரவு வேளை உணவும் நிகழ்வில் கலந்து கொண்ட வர்களுக்கு வழங்கப்பட்டது. (வ-ரி)

# மரக்கறி வகைகளின் விலைகள் யாழ். குடாநாட்டில் திடீர் ஏற்றம்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் நேற்றுச் சடுதியாக அதிகரித்துக் காணப்பட்டன.

சித்திரைப் பௌர்ணமி மற்றும் ஆலயங்களில் இடம்பெறும் வருடாந்தத் திருவிழாக்களால் மக்கள் கூடுதலாக மரக்கறி பாவனையிலேயே ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணத்தால் சித்திரைப் பௌர்ணமி தினமான நேற்று மரக்கறி வகைகள் சடுதியாக அதிகரித்தன.

திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம், சங்கானை போன்ற சந்தைகளில் மரக்கறி வகைகள் போதியளவு வந்தாலும் அவை உடனடியாக விற்று தீர்ந்தன.

சகல மரக்கறி வகைகளும் கிலோ 150 ரூபாவுக்கு மேல் விற்கப்பட்டன. இந்த மரக்கறி விலை அதிகரிப்பால் நுகர்வோர் பாதிக்கப்பட்டனர். அனேகமான இடங்களில் மரக்கறி வகைகளுக்குப் பற்றாக்குறையும் நிலவின. கூடுதலாக பயிற்றங்காய், பாவற்காய்க்கு இந்த பற்றாக்குறை ஏற்பட்டுக் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)



யாழ்ப்பாணம், நீராவியடி, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியின் இயல் இசை நாடக அரங்கு நேற்று ஆரம்பமானது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் அ.பௌநந்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலய ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் நாட்டிய வாரிதி ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா கலந்து கொண்டார். கலை நிகழ்வுகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளன. (வ-12)



சித்திரைப் பௌர்ணமி தினமான நேற்று இந்து ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. சிறப்பாக ஆலயங்களில் சித்திரைக் கஞ்சி அடியவர்களுக்கு வழங்கப்பட்டது. (வ-ரி)

# சிறு குளங்கள் சீரமைப்புக்கு 2 கோடி 40 லட்சம் நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று கமநலச் சேவை நிலையங்களின் கீழ் உள்ள சிறு குளங்களின் சீரமைப்புக்காக 2 கோடி 40 இலட்சம ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் தெரிவித்தார். இடர்முகாமைத்துவ அமைச்சுக்கு ஒதுக்கப் பட்ட நிதியில் ஒட்டுசுட்டான், முள்ளியவளை, மாங்குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள சிறு குளங்களே சீரமைக்கப்பட உள்ளன. ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்தின் கீழ் உள்ள நல்விமுறிப்புக்குளத்துக்கு 61 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் சின்னக்குளத்துக்கு 27 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த-500)

## முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்...

### *மீண்டும்...*

ணிப்புப் போராட்டத்தை மீண்டும் மேற்கொள்வதற்கான திகதியை அறிவிப்போம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மருத்துவர் நலிந்த ஹேரத்,

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியான சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 5 ஆம் திகதி நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதற்கு ஆசிரியர் சங்கத்தினர், ரயில்வே ஊழியர்கள் சங்கம், இலங்கைப் போக்குவரத்துச் சபை என்று பல்வேறு அமைப்பினரும் ஆதரவைத் தெரிவித்தனர்.

அரசு இதற்குப் பின்னரும் நடவடிக்கை எடுக்காவிடின், எதிர்வரும் 29 ஆம் திகதி மிகப் பெரிய பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடத்தப்படும் என்றார். (த-5)

### *யாழ்ப்பாண...*

பிரிட்டன் தலைமை அமைச்சர், யாழ்ப்பாணம் சென்று தமிழர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து இலங்கை அரச தலைவரிடம் தனது கண்டனத்தை நேரில் தெரிவித்தார்.

அதைப்போல மோடியும் ஈழத் தமிழர்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நேரில் கேட்டறிந்து இலங்கை அரசிடம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வற்புறுத்தவேண்டும். இலங்கை நட்புறவுக்காக அங்கிருக்கும் தமிழர்களைப் பலிக்கடாக்களாக ஆக்கக் கூடாது.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சுடுவதையும் தாக்குவதையும் உடனடியாக நிறுத்துமாறு கண்டிப்பாகக் கூறவேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு இலங்கை அரசு முன்வராவிட்டால் அந்த நாட்டிற்கு எத்தகைய பொருளாதார மற்றும் ராணுவ ரீதியான உதவிகளையும் இந்திய அரசு செய்யக் கூடாது என்று சுட்டிக் காட்டியுள்ளார். (த-5)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | பருத்தித்துறை | |
|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 |
| நண்டு | 400 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 |
| பாரை | 600 | 700 | – |
| சுறா | 500 | 800 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 |
| விளை | 500 | 500 | 400 |
| முரல் | 400 | 400 | 400 |
| கும்பிளா | 350 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | 600 | – |
| ஓரா | 300 | 450 | – |
| திரளி | 200 | 300 | 300 |
| நகரை | 200 | 400 | – |
| சூடை | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 300 | – |
| திருக்கை | 300 | 80 | 400 |
| மதனம் | 250 | 300 | 200 |
| கொய் | 200 | 80 | – |
| [illegible] | 300 | 600 | [illegible] |
| வாழை | 200 | 400 | 400 |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 60 | 120 | 80 |
| கத்தரி | 80 | 120 | 140 | 120 |
| கரட் | 140 | 200 | 300 | 160 |
| மரவள்ளி | 80 | 60 | 60 | 50 |
| பயிற்றை | 60 | 250 | 200 | 100 |
| பாகல் | 100 | 240 | 250 | 160 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 90 |
| சி.வெங்காயம் | 80 | 180 | 270 | 180 |
| பூசணி | 40 | 60 | 60 | 100 |
| தக்காளி | 90 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 | 50 |
| கீரை | 30 | 15 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 25 |
| பச்சை மிளகாய் | 130 | 160 | 160 | 100 |
| புடோல் | 80 | 100 | 160 | 80 |
| கோவா | 100 | 180 | 160 | 140 |
| வெண்டி | 80 | 80 | 80 | 120 |
| போஞ்சி | 140 | 140 | 160 | 180 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 100 |
| தேங்காய் | 80 | 60 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 |
| தேசிக்காய் | 50 | 80 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 15 | 15 | 20 |
| கறிமிளகாய் | 100 | 160 | 150 | 140 |
| இராசவள்ளி | 200 | 250 | 220 | 180 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 100 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் தொண்டர்களை சந்திக்க மறுத்த முதலமைச்சர்

## ஏமாற்றத்துடன் அவர்கள் திரும்பிச் சென்றனர்

வவுனியா, மே 11

தமது நிரந்தர நியமனம் தொடர்பான கோரிக்கைகளுடன் வடக்கு முதலமைச்சரைச் சந்திக்கச் சென்ற வவுனியாவைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் அவரைச் சந்திக்காததால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று வவுனியாவைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்கள் யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்களை இணைத்து நேற்றுமுன்தினம் வடக்கு முதலமைச்சரைச் சந்திக்கச் சென்றனர்.



"நாம் சென்ற போது முதலமைச்சரின் அலுவலகத்துக்கு முன்பாக வேலை தேடும் பட்டதாரிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் முதலமைச்சரை அலுவலகத்துக்குச் செல்ல விடாது தடுத்ததால் அவர் திரும்பிச் சென்றார். முதலமைச்சரை வாயிலில் வைத்துச் சந்தித்தோம்.

அவர் எமது மனுவைப் பெற்றுக் கொள்ளாது அனைத்துப் பிரச்சினைகளையும் ஒரே தடவையில் என்னால் பார்க்க முடியாது. என்னை விடுங்கள் என்று கூறி விட்டுச் சென்று விட்டார்.

பின்பு வடக்குச் சுகாதார அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினோம். நியமனம் பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என்று அவர் கூறினார். கொழும்பு அமைச்சருக்கே அதிகாரம் உண்டு. இது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடுகின்றேன். எதிர்வரும் 17ஆம் திகதி ஆளுநர் தலைமையில் அனைத்து அமைச்சர்களையும் அழைத்து கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

உங்கள் அனைவரையும் நான் அறிவேன். நான் சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிய போது போர்க் காலத்தில் அனைவரும் ஒத்துழைப்புடன் பணியாற்றினீர்கள் எமைக் குறிப்பிட்டார்" என்று சுகாதாரத் தொண் டர்கள் தெரிவித்தனர். (ற-21)




# கிரவல் இல்லாததால் வீதி அபிவிருத்தியில் தடங்கல் நிலமை

யாழ்ப்பாணம், மே 11

வடக்கு மாகாணத்தில் கிரவலைப் பயன்படுத்த முடியாதுள்ளது. 'ஐ' திட்டம் ஊடான வீதி அபிவிருத்திப் பணிகளைத் தொடர முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவயோகன் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 92 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உறுப்பினர் தியாகராஜா வடக்கில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் கனியவளங்களை பெறமுடியாத நிலமை காணப்படுகின்றது. அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பிரேரணை ஒன்றை வழிமொழிந்தார். அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே சிவயோகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது,

வடக்கு போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம். தற்போது பல அபிவருத்தித் திட்டங்கள், மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் போன்றன முன்னெடுக்கப்படுகின்றன. கனிய வளங்களைப் பெற முடியாத நிலமை காணப்படுவதால் அவை தாமதமடைகின்றன.

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களங்களின் அபிவிருத்திப் பணிகள் மிகவும் பாதிப்படைகின்றன. என்றார்.

"பூநகரி, கௌதாரிமுனை பிரதேசங்களில் பெரும் மணல் குன்றுகள் காணப்பட்டன. அவை இப்போது இல்லை. அவற்றை எடுத்தவர்கள் யார்?. யாரிடம் இது தொடர்பாக முறையிடுவது?. அந்தளவுக்கு மணலைப் பயன்படுத்துமளவு வடக்கில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டனவா?." என்று வடக்குக் கல்வி அமைச்சர் குருகுலராஜா கேள்வி எழுப்பினார்.

"வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு கனியவளங்கள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வடக்கு மாகாண சபையின் ஊடாகக் கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்." என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-8)

# இராமர் அணையில் தங்கி மீன்பிடிக்க கடற்படை தடை

மன்னார், மே 11

தலைமன்னார், இராமர் அணையில் (மணல் திட்டுக்கள்) தங்கித் தொழில் செய்வதற்குக் கடற்படை இப்போது தடை விதித்துள்ளது. தலை மன்னார் மீனவர்கள் இதனால் பெரும் வாழ்வாதாரப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு தலைமன்னார் மீனவர்கள் விரக்தியுடன் தெரிவித்தனர்.

"மன்னார் மாவட்டம் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் கோட்டை மன்னார், தலை மன்னார் என இரு பிரிவுகளாக்க ப்பட்டிருந்தது. தலை மன்னர் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு எனப் பிரிக்கப்பட்ட பெரும் நிலப்பரப்பாகும். இங்கு வாழும் 90 வீதமானவர்கள் மீனவர்கள்.

தலை மன்னாருக்கும், தனுஸ்கோடிக்கும் இடையேயான 32 கிலோ மீற்றர் பகுதியில் இராமர் அணை (மணல் திட்டுக்கள்) உள்ளது. அவற்றில் 15 சிறு தீவுகள் இலங்கைக்குச் சொந்தமானவை. அங்கு 500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எமது முன்னோர்கள் தொழில் செய்கின்றனர்.

அவர்கள் தமது குடும்பத்தினருடன் அந்தத் தீவுகளில் குடிசை அமைத்துத் தொழில் செய்தனர். சனிக்கிழமைகள் தோறும் கருவாடுகளுடன் கரை வந்து அவற்றை விற்று வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொண்டனர்.

கட்டுமரத் தொழில், அடசல் வலை, விடுவலை, பாச்சுவலை, வலைச்சல்வலை போன்ற தொழில்களையும், தரித்து நின்று வலைகளை உலர்த்துதல், கிழிந்த வலைகளைப் பொத்துதல்,. வலைகளைத் துப்புரவு செய்தல், இயந்திரங்களைத் திருத்துதல், ஓய்வெடுத்தல், மீன்பிடிக்காகக் காத்திருத்தல் போன்றவற்றையும் அந்த மணல் திட்டுக்களில் எமது முன்னோர்கள் செய்தனர்.

மன்னார் கண்டமேடைப் பகுதி வட கடல் மற்றும் தென் கடல் இணையும் பகுதியாகும். அங்கு கடல் நீரோட்டம் அதிகமாக இருக்கும். அப்போது மீனவர்கள் எவரும் வலைகளை வீசுவதில்லை. மீன்கள் ஆழ்கடலுக்கு வரும். கரையில் காத்திருந்தே வலைகள் வீசுவர்.

அதனால் இராமர் அணை எமக்கு முக்கியம் வாய்ததாகக் காணப்பட்டது.

தற்போது இராமர் அணைக்கு அண்மையில் தங்கி நின்று தொழில் செய்யக் கடற்படை தடை விதித்துள்ளது. எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தினமும் இராமர் அணைக்குச் சென்று வருவதானால் எரிபொருள் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது. பொருத்தமான நேரத்தில் மீன்பிடியில் ஈடுபட முடியாது போகும். எமது தொழில் உபகரணங்களை (வலைச்சல் வலை, பாச்சு வலை, அடசல்வலை) இழக்க நேரிடும்.

அடசல் வலையில் மீன்பிடியில் ஈடுபட 25 பேர் தேவை. இராமர் அணையின் அருகில் மீன்கள் இருந்தாலும் அணையில் இறங்கி வலை இழுத்து மீன்பிடிக்க முடியாத நிலமை ஏற்படும். இதனால் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். 100இற்கு மேற்பட்ட தெப்பத் தொழிலாளிகள், 5 அடசல் வலைத் தொழிலாளிகள், 400 இற்கும் மேற்பட்ட பிளாஸ்ரிக் படகு உரிமையாளர்கள் இந்த அணையையே நம்பியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மறைமாவட்டக் குருக்கள், மீனவர் சங்கங்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"கடற்படையினரின் தடை உத்தரவு தொடர்பாக எழுத்து மூலமாகவோ, வேறு வழியிலோ எந்த விதமான முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி, கொழும்பு மீன் பிடி அமைச்சுடன்தொடர்புகொண்டுதீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்."என்றுவடக்குமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். (ற-20)

# இலங்கையின் வரலாற்றைக்கூறும் சுவடிகளை பாதுகாக்கக்கோரிக்கை

கொழும்பு, மே 11

இலங்கைவரலாற்றைக்கூறும் புராதன மரபுரிமைகளும், தேசிய வளமும் ஆன ஓலைச்சுவடிகளை அடுத்த தலைமுறையினருக்காகப் பாதுகாப்பதற்கு அரசு முன்னெடுக்கும் செயற்றிட்டத்துக்குத் தேவையான வழிகாட்டல்களையும், ஒத்துழைப்பையும் வழங்குமாறு மகா சங்கத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

புனித தந்த தாது எழுந்தருளியுள்ள அஸ்கிரிய மகாவிகாரை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட அஸ்கிரிய மாசாய சைத்தியத்தின் கலசத்தை திரைநீக்கம் செய்யும்புண்ணியநிகழ்வுஅரச தலைவர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார் என அரச தலைவரின் ஊடகப்பிரிவினால் அனுப்பப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது,

அழிவடைந்துவரும் ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்காக அரசுபரந்தசெயற்றிட்டத்தைத் திட்டமிட்டுள்ளது. அதற்குத் தேவையான நிதியொதுக்கீடு மற்றும் ஏனைய வளங்களை வழங்குமாறுஉரியபிரிவுகளுக்குஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு வெசாக் வாரத்தை முன்னிட்டு பௌத்த கோட்பாடுகளை உலகெங்கும் கொண்டு செல்வதற்கானபலசெயற்றிட்டங்கள்நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அனைத்துசெயற்பாடுகளிலும் பௌத்த தேரர்களின் வழிகாட்டல்எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டிநகரின்உயர்ந்தஇடத்தில் நிர்மாணிக் கப்பட்டுள்ள சைத்தியம் 145 அடி உயரமானதாகும். பரப்பளவு 65 அடியாகும். நூதன சாலைமற்றும்தியானபீடத்துடன் அழகிய பௌத்த சிற்பங்களைக் கொண்டதாதுகோபுரமும்சைத்தியத்தில் அமைந்துள்ளது. இரண்டாவது மாடி தேரர்களும் பக்தர்களும் தியானம் செய்யும் மண்டபமாகும். நவீன விஞ்ஞான முறையிலான தியான முறைகளுடன் அங்கு தியானத்தில்ஈடுபடக்கூடியவசதிகள்உள்ளன. அஸ்கிரிமகாவிகாரையின் வண. நாரம் பனாவே ஆனந்த தேரரின் ஆலோசனையில் ஏழு ஆண்டுகளாகநாட்டிலுள்ளமிகச் சிறந்த கலைஞர்களால் இந்த சைத்தியம்நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வறக்காகொட ஞானரதன தேரர், வண. நியங்கொட விஜித சிறி தேரர் உள்ளிட்ட பௌத்த தேரர்களும், அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, எஸ்.பி. திசாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர்நிலூக்காஏக்கநாயக்க, முதலமைச்சர்சரத்ஏக்கநாயக்க ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் - என்றுள்ளது. (ஐ-10)

# பொருளாதார மத்திய நிலையமாக பேருந்து நிலையத்தை மாற்றுக

## வவுனியா வர்த்தகர் சங்கம் கோரிக்கை

பேருந்து நிலையத்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகஅமைத்துதிறந்து வைக்கப்பட்ட பேருந்து நிலையத்தை பொருளாதார மத்திய நிலையமாக மாற்ற வேண்டும் என்று வவுனியா வர்த்தகர் சங்கம்கோரிக்கைவிடுத்துள்ளது.

வடமாகாண போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு வர்த்தகர் சங்கம் அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டதாவது:

மக்களுக்கு மிகச் சிறந்த இலகுவான செலவு குறைவான போக்குவரத்துச் சேவையை வழங்க வேண்டியது அரசின் தலையாய கடமையாகும். போக்குவரத்து சேவை நிலையத்தை நகருக்கு அப்பால் அமைத்து மக்களுக்கு மேலதிக செலவையும் சிரமத்தையும் ஏற்படுத்துகின்றது. அது அனைவரும் உணர்ந்து நகருக்குள்ளேயே இயங்க வேண்டும். இலங்கையின் தெற்கு ப்பகுதியான அம்பாந்தோட்டடையில் பல இலட்சம் கோடி ரூபா செலவு செய்து துறைமுகம், விமானநிலையம் அமைக்கப்பட்டு திறந்து துவைக்கப்பட்டது. அவை மக்கள் பாவனைக்கு அற்றவைகளென மக்களால் நிராகரிக்கப்பட்டு தற்போது மூடப்பட்ட நிலையில் இருக்கின்றது. அரசும் அதிகாரிகளும் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய செயல் திட்டங்களை செய்யவேண்டும். வவுனியா காவல் நிலையத்துக்கு அருகிலுள்ள நகர சபைக்குச் சொந்தமான இடத்தில் தனியார் பேருந்து நிலையத்தை அமைக்க. புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலைய கட்டடத்தை பொருளாதார மத்திய நிலையமாக மாற்ற வேண்டும். என்றுள்ளது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களுக்கு கூழாமுறிப்பில் வீட்டுத் திட்டம்

இன்று அடிக்கல் நடும் நிகழ்வு என அறிவிப்பு

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் கூழாமுறிப்பில் உள்ள வனப் பிரதேசத்தில் 150 ஏக்கரில் 300 முஸ்லிம் மக்களுக்கான வீடுகள் வழங்கப்படவுள்ளன. வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது என்று தக லறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 182 தமிழ் மக்களுக்கும், 907 முஸ்லிம் மக்களுக்கும் காணிகள் இல்லை என்று இனங் காணப்பட்டுள்ளது. அனைவருக்கும் ஒரே சமயத்தில் நிலம் வழங்குவதற்குக் கடந்த ஆண்டு இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது முஸ்லிம் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்று தெரியவருகின்றது. முதற்கட்டமாக 150 வீடுகள் தலா 15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன என்றும், வீட்டுத் திட்டத்துக்கு அரபு நாட்டு செல்வந்தர் நிதி வழங்குகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று மு.ப. 9 மணிக்கு அமைச்சர் ஒருவரின் தலைமையில் நடைபெறவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. "அந்தக் காணிகள் மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அபிவிருத்திப் பணிகள் ஏதும் இதுவரை நடைபெறவில்லை." என்று முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ந-9,101)



# வெசாக்கை முன்னிட்டு கைதிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 11

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறு குற்றம் புரிந்து யாழ். சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகள் 4 பேர் பொது மன்னிப்பில் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

சிறு குற்றங்கள் புரிந்து தண்டப் பணம் செலுத்த முடியாது சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர்களே விடுவிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.பி.பெரேரா அவர்களை விடுவித்தார். வவுனியா சிறைச்சாலையில் சிறைத் தண்டனை அனுபவித்த 12 கைதிகள் வெசாக் தினத்தை முன்னிட்டு விடுவிக்கப்பட்டனர். (ந-21)

# முல்லைத்தீவில் மொத்தக் கொள்வனவு நிலையம் அமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தக் கொள்வனவு நிலையம் ஒன்று முக்கியமாக அமைக்கப்பட வேண்டும் என்று உப உணவுச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

மரக்கறிகள், தேசிக்காய், வாழைக்குலை என்பனவற்றைச் சந்தைப்படுத்த முடியாதுள்ளது. சந்தைப்படுத்தினாலும் தகுந்த விலையைப் பெறமுடியாதுள்ளது. இங்குள்ள செய்கையாளர்கள் செய்கையில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டனர்.

இங்கு தென்பகுதியிலிருந்து மரக்கறிகள் வருவதால் எமது மரக்கறிகள், வாழைக்குலை என்பனவற்றைக் கொண்டு சென்றாலும் வேண்டாமென்றே கூறுகின்றனர்.

பணம் செலவழித்து செய்கைகளை மேற்கொண்ட போதும் அதற்குரிய பயனை அடைய முடியாதுள்ளது.

எமது மாவட்டத்துக்கு மொத்தக் கொள்வனவு நிலையம் வேண்டும் என பலதடவைகள் கூறியிருந்தோம். எவரும் செவிசாய்க்கவில்லை. எமது மரக்கறிகள், வாழைக்குலை, தேங்காய், நிலக்கடலை போன்ற பலபயிர்களின் பயன்களை தகுந்த விலையில் விற்கவும் அதனை மறுக்காது வாங்கவும் மொத்தக் கொள்வனவு நிலையம் ஒன்றை எமது மாவட்டத்தில் அமைத்துத்தர வேண்டும் - என்றனர். (ந-500)

# 80 நாள்கள்

வவுனியா, மே 11

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 80 ஆவது நாளை எட்டியது. தமது உறவுகளைக் காணும் ஏக்கத்துடன், தளராத உறுதியுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களையும், இராணுவத்தினடம் கையளிக்கப்பட்டவர்களையும் விடுவிக்க வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை எனப் பரவலடைந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்தும் போராட்டத்துக்குப் பல தரப்பினர் ஆதரவு வழங்குகின்றனர். மக்கள் தொடர்ந்தும் பேராதரவு வழங்கினாலே அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்று போராட்டம் நடத்தும் உறவுகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போராட்டங்கள் ஆரம்பமாகி இரு மாதங்களைக் கடந்து தொடர்கின்றபோதும் அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அரசு மௌனம் சாதித்து வருகின்றது. அவர்களுக்குப் பொறுப்பு வாய்ந்த பதில் வழங்குவதையும் தட்டிக் கழித்து வருகின்றது.

> “எம் பிள்ளைகள் இன்று வருவார்கள், நாளை வருவார்கள் என்று காத்திருந்தோம். எங்கள் பிள்ளைகள் வரவே இல்லை. எமக்குப் பதில் சொல்ல வேண்டிய அரசு மௌனமாக இருக்கின்றது. எமது பிள்ளைகள் எமக்கு வேண்டும்.

தமது கோரிக்கைளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டங்களைக் கைவிடப் போவதில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தீர்க்கமாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போராட்டம் நடத்தும் மக்கள் இன்னும் இரு வாரங்களுக்குள் உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தமது போராட்டம் பரவலடையும் என்று தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 76ஆவது நாளாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 64 ஆவது நாளாகவும், யாழ்ப்பாண மாவட்டம் மருதங்கேணியில் 58 ஆவது நாளாகவும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் 68 ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. (ந-21)

# கொடி வாரம்

யாழ்ப்பாணம், மே 11

இந்து இளைஞர் பேரவையின் கொடி வாரம் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதிவரை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

கொடிவாரம் 1970ஆம் ஆண்டு முதல் வருடாவருடம் இலங்கை இந்து இளைஞர் பேரவை, மாவட்டப்பேரவை என்பவற்றால் நடத்தப்படுகின்றது. மாவட்டப் பேரவையால் சேர்க்கப்படும் இந்துநிதி அறநெறிப்பாடசாலைகளுக்கும் சமூக சேவைகளுக்கும் மன்றத்தால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந)

# போக்குவரத்து விதிமுறைத் தட்டிகள் யாழ். நகர் பகுதிகளில்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.நகரப் பகுதிகளில் போக்குவரத்து விதிமுறை அறிவுறுத்தல் காட்சித் தட்டுக்கள் பொலிஸாரால் நேற்றுக் காட்சிப்படுத்தப்பட்டன.

யாழ். நகர் முதலாம் குறுக்குச் சந்தியில் (நீதிமன்ற கட்டட தொகுதிக்கு அண்மையில்) நேற்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண காட்சித் தட்டு காட்சிப்படுத்தும் நிகழ்வை ஆரம்பித்தார்.

காட்சித்தட்டுக்கள் யாழ். நகரப்பகுதிகளில் பிரதான வீதி, மற்றும் ஏனைய நகரப்பகுதிகளிலும் பொலிஸாரால் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

“விபத்துக்கள் அதிகரித்து உயிரிழப்புக்கள் ஏற்படுகின்ற காரணத்தால் பொலிஸ் திணைக்களத்தின் ஊடாக போக்குவரத்து விதிமுறைகளை மக்கள் தெரிந்துகொள்வதற்காகவும், வீதிகளில் அவதானமாக செல்வதற்காகவும், மக்களின் பாதுகாப்பிற்காகவும், இவ்வாறான அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கும் நோக்கில் காட்சித் தட்டைத் தொங்கவிடும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு யாழ்.நகரப்பகுதிகளில் முன்னெடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன தெரிவித்தார். (ந-106)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இலங்கையில் வெசாக் மிகச் சிறப்பு வாய்ந்தது

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, மே 11

இலங்கையில் வெசாக் தினக் கொண்டாட்டங்கள் மிகச் சிறப்புமிக்கவை என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி தெரிவித்தார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பன்னாட்டு வெசாக் தினத்தில் இலங்கையில் பங்களிப்பு பாராட்டத்தக்க ஒன்றாக உள்ளது. மனித உரிமைகள், நல்லாட்சி, மரியாதை அளித்தல் போன்ற பல்வேறு நல்ல விட யங்களைப் பௌத்தம் போதிக்கின்றது. இந்த முறை வெசாக் தின நிகழ்வுக்ள் 'சமூக நீதி மற்றும் நீடித்து நிலைக்கும் சமாதானம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (த - 10)

# பெண் பொலிஸ் ஊழியரை கடத்த முயற்சித்தவர் கைது

கொழும்பு, மே 11

கடமைக்குச் சென்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தரைக் கடத்தித் துஸ்பிரயோகம் செய்ய முயன்றவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லேவல பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தரையே துஷ்பிரயோகத்துக்குள்ளாக்க முயற்சி நடந்துள்ளது.

குறித்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் கடமைக்குச் சென்று கொண்டிருந்தவேளை கார் ஒன்றில் வந்த நபர் அவரைக் காரில் ஏறுமாறு வற்புறுத்தியுள்ளார். அதனைப் அந்தப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் நிராகரிக்கவே அவரைப் பலாத்காரமாக இழுத்துக் காரில் கடத்திச் செல்ல முயன்றுள்ளார்.

எனினும் இதிலிருந்து தப்பியுள்ள பெண் பொலிஸ் உத்தியோகத்தர் விடயத்தைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடாகப் பதிவு செய்த நிலையில், உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த -10)

# போருக்கான காரணத்தை கண்டறிந்து சீர் செய்வோம்

## கிழக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, மே 11

போர் என்பது வேண்டாம். போருக்கான காரணத்தை அறிந்து வேறு வழியில் சீர் செய்து கொள்வோம். சமாதானம்என்றபோர்வைக்குச் செல்வோம் எனக் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

தேவிலாமுனையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கூத்தரங்கேற்ற ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் என்பது மனிதனுக்குத் தேவையற்ற ஆனால் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்ற விடயமாகும். மகாபாரதத்திலே போர் நடைபெற்றது. போரினால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி அதிலே கூறப்படுகின்றன. அவையெல்லாம் ஏன் கூறப்படுகின்றதென்றால் போர் என்பது வேண்டாம். போருக்கான காரணத்தை அறிந்து வேறு வழியில் சீர்செய்து கொள்வோம். சமாதானம் என்ற போர்வைக்கு செல்வோம் என்பதனையே விளக்குகின்றது.

மட்டக்களப்பின் தமிழ் மிகச்சிறந்த தமிழ். இதனைச் சங்கத்தமிழ் என வீ.சி. கந்தையா குறிப்பிடுவார். தமிழின் பழைமைச் சொற்களை எல்லாம் நாங்கள்தான் வைத்திருக்கின்றோம் - என்றார். (த - 10)


# மணிவிழா நாயகனுக்கான வாழ்த்து



**திரு. செபமாலை மரியதாஸ்**
(Junior Executive officer-Bank of Ceylon-Manipay)
இன்று 11.05.2017 இல் தனது 60 ஆவது அகவையினைக் கொண்டாடும்
**திரு. செபமாலை மரியதாஸ்** அவர்களை மென்மேலும் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீறும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:-
சிரேஷ்ட முகாமையாளர், ஊழியர்கள்
இலங்கை வங்கி, மானிப்பாய்.

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் Hamers Avenue வில் நாள். கிழமை வாடகைக்கு 1.2.3.6 அறைகளுடன் கூடிய தனிவீடு Luxury House சகல வசதிகளுடன் A/C, Fridge,Washing Machine, Hot Water, Cable TV. Kitchen உபகரணங்கள் (Car Park) வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் சுப காரியத்திற்கும் மணமகன். மணமகள் வீடாக பாவிப்பதற்கு மிக உகந்தது. வெள்ளவத்தை Market, Bus Stand க்கு மிக அண்மையில் உள்ளது.
077 766 7511/ 011 250 3552(சத்தியா)

வெள்ளவத்தையில் குறைந்த நாள் வாடகைக்கு அறைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள் (800-3500 வரை)
UTHAYA REST / THAAS REST
58,Hamers Avnue Wellawatte T.P: 250 3552, 236 1242, 236 0243
391/6,Galle Road. Wellawatte T.P: 236 0515, 236 2586
Hotline: [illegible]
வெள்ளவத்தையில் Station Bustand, Market Hospital ஆகிய இடங்களுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளது.

## வீடு விற்பனைக்கு
உரும்பிராய் சந்திக்கு அண்மையில் மருதனார்மடம் வீதியில் 3 பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு.
076 697 2287

## வேப்பம்பூ தேவை
சுத்தமான, தரமான பூவிற்கு சிறந்த விலை கொடுக்கப்படும்.
077 967 5599, 077 545 4460

## காணி விற்பனைக்கு
வரணி பிரதான வீதியில் அமைந்துள்ள 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. பாடசாலை.வைத்தியசாலை.சந்தைக்கருகில்
077 986 7414

## வீட்டுப்பணிப்பெண் தேவை
32 வயதுடைய பெண் ஒருவருக்கு உதவியாக வீட்டுவேலை செய்யக்கூடியவர். (வயது 30 - 45) தேவை. உணவு. தங்குமிடம் இலவசம்.குடும்பத்தில் ஒருவர் போலக் கவனிக்கப்படுவார்.
சம்பளம் - 12,000/= - 14,000/= வரை
076 562 4967, 021 320 0811

## சாரதி தேவை
AB வாகன அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
பருத்தித்துறை வீதி, வில்லுமதவடி, கோப்பாய், யாழ்ப்பாணம்.
077 789 0398

## கட்டடம் வாடகைக்கு
யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதிக்கு முன்பாக கட்டடம் வாடகைக்கு விடப்படும்- வைத்தியநிலையம். Lap, Office, Store ஆக பாவிக்கலாம்.
077 365 5824

## வேலையாள்கள் தேவை
Natural flower center இற்கு பெண் வேலையாள் தேவை.
077 400 5023, 021 492 8622

## SUPER LUXURY BUS FOR HIRE



Call
076 822 7522
076 822 7515
076 822 7523
29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi
581, K.K.S ROAD, JAFFNA.

## COMPUTER COURSES
Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling
Advanced Diploma in **Hardware & Networking**
C++, JAVA
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Hotline:0777 173517
DMI COMPUTER EDUCATION
முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel:.021 222 4403 |
| நெல்லியடி | M. M. V வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) Tel:.021 226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, சாவகச்சேரி.(HNB அருகில்) Tel:.021 227 0775 |
| சுன்னாகம் | No.130, K.K.S வீதி, சுன்னாகம்.(NSB அருகில்) Tel:.021 224 1970 |
| கிளிநொச்சி | No.19 ஆனந்தபுரம், (மத்திய கல்லூரி முன்பாக) Tel:.021 228 5655 |

## சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சை 2017
வவுனியாவில் நடைபெறும் செமினார்.
இடம் :- வவுனியா புகையிரத நிலையத்துக்கு முன்னால் உள்ள விவசாய திணைக்கள ஒன்று கூடல் மண்டபம்.
திகதி :- 13.05.2017 - சனிக்கிழமை
நேரம் :- 9 -3 மணிவரை.
சகல பாடங்களும் நடைபெறும்.
077 670 5511

## இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கு - 2017

### இரண்டாம் நாள் வியாழக்கிழமை (11.05.2017)

தலைவர்
**திரு.பா.பாலகணேசன்**
(விரிவுரையாளர் - தேசிய கல்வியற்-கல்லூரி. யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர்
**பேராசிரியர் R.விக்னேஸ்வரன்**
(உப வேந்தர். யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.)

- சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினர் வழங்கும் மங்கல இசை

நாதஸ்வரம்: திரு.p.சித்தார்த்தன், திரு.p.பிரதித்தன்
தவில்: திரு.சு.விபூஷணன், மானிப்பாய் அமரன்

- மங்கல விளக்கேற்றல்
- திருமுறை ஓதுதல் : செல்வன் கண்ணதாஸ் தழிழ் வேந்தன் (ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மன்ற மாணவன்)
- ஆசியுரை : அருட்திரு. ஜெரோ செல்வநாயகம் (அதிபர் சென்பற்றிஸ் கல்லூரி. நிர்வாக இயக்குனர். திருமறைக்கலாமன்றம்)
- வாழ்த்துரை : " இசைவாணர் " எம்.கண்ணன் (மூத்த இசையமைப்பாளர்)

சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவ சிறுவர் இல்ல " மாணவர்கள் வழங்கும்
**கோலாட்டம்**
நட்டுவாங்கம் : திருமதி யாழினி ரதீஸ்வரன்
பாட்டு : திருமதி வத்சலா கருணாகரன்
வயலின் : திருமதி இந்துமதி தயாபரன்
மிருதங்கம் : திரு.T. சிவகுமார்

**கவிதை மழை**
அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராஜா வழங்கும் "முத்தமிழ் இனிமை"

- **இசை விருந்து**
பாட்டு : திரு.N.பரந்தாமன், திரு.S.சிவமைந்தன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு.நல்லை க. கண்ணதாஸ்
கெஞ்சிரா : திரு.ஞா.வசந்
முகர்சிங் : திரு.சதீஸ்குமார்

- " தொன்மம் " கலைக்குழுவினர் வழங்கும் பறை இசை நடனம்

- " நிருத்திய கீதாலயம் " மாணவிகள் வழங்கும்
**நிருத்தியாஞ்சலி**
நட்டுவாங்கம் : திருமதி அகல்யா ராஜபாரதி
பாட்டு : திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு.S. துரைராஜா

- இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியினர் வழங்கும்
**மாமிக்கு வாச்ச மருமகள்** (நகைச்சுவை நாடகம்)

- கலைஞர்கள் கௌரவிப்பு
- பிரதம விருந்தினர் உரை
- வசந்தம் வில்லிசைக்குழுவினர் வழங்கும் " நாவலர் இன்று இருந்திருந்தால் "
வில்லு : திரு.S.K.N.தவராசா
நன்றியுரை பக்கப்பாட்டு : திரு.K.சுரேஸ்மோகன்
ஆர்மோனியம் : திரு.S.சண்முகலிங்கம்
தபேலா : திரு.S.நிமலன்
கடம் : திரு.K.றஜீவன்

- நன்றியுரை

அனுசரணை: அன்பொளி கல்வி நிலையம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பைப் பிடித்தவர் கையில் கடியுண்டார்

கொழும்பு. மே 11

புடையன் பாம்பு தீண்டி குடும்பத் தலைவர் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த 44 வயதுடையவரே பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளார். இரவு 11 மணியளவில் குடியிருப்புக்குள் புடையன் பாம்பு புகுந்துள்ளது. அதை கையால் பிடித்தபோது அது தீண்டியது என்று என்று தெரிவிக்கப்பட்டது. நஞ்சேறிய நிலையில் குறித்த நபர் நேற்று அதிகாலை 12 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-4, 101)


## 4ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
17
11
1935



உதிர்வு
26
04
2013

திதி : சித்திரை அபரபக்க பிரதமை

அமரர் செல்லம்மா உலகநாதன்
(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை)

வள்ளுவனின் வாசுகி போல
இல்லத்தரசியாக இனிதாக வாழ்ந்த தாயே!
மூத்த மகளாகப் பிறந்து மூத்த மருமகளாக வாழ்ந்து
பிறந்த குடும்பத்தையும் புகுந்த குடும்பத்தையும்
எங்களையும் இன்பமாய் வாழ வைத்தீர்களே!
உங்களை நாம் இழந்து நாலாண்டுகள் கழிந்தனவே
எங்கள் எண்ணத்தில் என்றென்றும் வாழ்வீர்கள்...

குடும்பத்தினர்
"உதயகிரி", பலாலி தெற்கு, வயாவிளான்



## மரண அறிவித்தல்

திருமதி இராசம்மா மார்க்கண்டு



காரைநகர் களபூமி கல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், இல. 83/9, தஞ்சி ஒழுங்கை அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா மார்க்கண்டு (09.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு (வையாபுரி) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் மார்க்கண்டு அவர்களின் அன்புமனைவியும் காலஞ் சென்ற பரமு - பார்வதி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர் களான பாக்கியம், கனகரட்ணம், விஜயரட்ணம் மற்றும் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான, இலட்சுமிப் பிள்ளை, பூபாலசிங்கம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் சகோதரியும் மங்கையற்கரசி, சிறீநாதன், மகேஸ்வரி, தனலட்சுமி, சரஸ்வதி, சிறீதரன், விஜயகலா ஆகியோரின் அன்புத்தாயும் தில்லைநாதன் காலஞ்சென்ற கங்காதேவி மற்றும் கௌரிதேவி, கிருபானந்தம், யோகநாதன் காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் சுதன், ஷர்மினா, நிவாசினி, பவதாரணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சேஷ்தரெனின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, திருமதி மங்கையற்கரசி, திருமதி சரஸ்வதிஅம்மா, பரமசாமி, தம்பிப்பிள்ளை, கணேசபிள்ளை மற்றும் திருமதி சிவஞானம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. மார்க்கண்டு (கணவர்)
தொ.பே - 021 222 1983


# நிறைவேற்றமுடியாத விடயங்களை பிரேரணையாகக் கொண்டு வராதீர்கள்

## வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் காட்டம்

யாழ்ப்பாணம், மே 11

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடமாகியும் தொல்பொருள்கள் தொடர்பிலோ அல்லது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பான நியதிச் சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. பெயரளவில் பிரேரணையால் மட்டும் கொண்டு வரப்படுகின்றன. நிறைவேற்ற முடியாத விடயங்களை எல்லாம் சபையில் பிரேரணையாகக் கொண்டுவந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில் வடக்கு மாகாணத்துக்கு என அருங்காட்சியகமொன்றை அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

"இலங்கையில் நீண்டகால வரலாற்றை கொண்டிருக்கின்ற வடக்கு மாகாணத்தில் தொல்பொருள் மூலாதாரங்கள் பல கண்டெடுக்கப்பட்டு இருக்கின்ற போதிலும் அவற்றை முறையாக பாதுகாக்கின்ற அருங்காட்சியம் வடக்கில் காணப்படாமை பெரும் குறைபாடாக உள்ளது. ஏனைய மாகாண சபைகள் தத்தமது மாகாணத்துக்கான அருங்காட்சியகங்களை நிர்வகிக்கின்றன. வடக்கு மாகாணத்துக்கான அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு மாகாணப் பகுதிகளில் இடம்பெறுகின்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளில் வடக்கு மாகாண சபை தனது அவதானங்களையும் பங்களிப்புக்களையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இவ் அகழ்வாராய்ச்சிகள் இடம்பெறுவதற்கு வழிவகை செய்யப்படவேண்டும். என்று அவர் த்னது பிரேரணையை முன்மொழிந்தார்.

அது தொடர்பாக வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

"தொல்பொருள் அருங்காட்சியகம் அமைப்பது வரவேற்கத்தக்க விடயம். இதனை பிரேரணையால் மட்டும் நிறைவேற்ற முடியாது. அதற்கான நியதிச் சட்டங்களை உருவாக்க வேண்டும். 3 வருடங்களுக்கு முன்னர் செய்ய வேண்டிய வேலைகளை இப்போது தான் செய்யப் போகின்றீர்களா? என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரேரரைண நீக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு அடுத்த அமர்வில் எடுக்கப்படும் என அவைத் தலைவர் அறிவித்தார். (ற-8)


## நெஞ்சகலா ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு
19
11
1929



இறப்பு
22
04
2016

திருமதி தர்மதேவி இராஜசுந்தரம்
திதி: பிரதமை (11.05.2017)

அன்னைக்கு அன்னையாய் ஆருயிர்த் தந்தையாய்
தன்னைக் கரைத்து எனது உயர்வுக்காய்
தன்னை அர்ப்பணித்த எம் குலதெய்வமே
நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆகிற்றோ
தங்கள் பிரிவை எப்படி தாங்குவது என் தாயே!
எங்கே உம்மை காண்பேன்? சொல்லொண்ணா துயரத்தில்

சம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை.

அன்பு மகள்
கி.தர்மசுந்தரி



## முதலாம் ஆண்டு நினைவு



திருமதி
சிவபாக்கியம் ஐயாத்துரை
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

தோற்றம் 02.02.1927
மறைவு 22.05.2016

திதி: அபரபக்க பிரதமை (11.05.2017)

பாரில் அம்மா எங்கள் அப்பம்மா சீரில் திகழ்ந்த எங்கள் அம்மம்மா
நேரில் சென்றே எங்கள் பள்ளிக்கு படித்து வந்தால் வாசற்படி தன்னிலே
திடமாய் நிற்பாய் வந்து புன்முறுவலுடன் இன்றோ காண்பது உங்கள் நினைவுகளை
நன்றே வாழ்ந்தோம் வளர்ந்தோம் – பாசம்
படிந்தே மகிழ்ந்தோம் உங்கள் அரவணைப்பாலே சாலப் பரிந்து எம்மை வளர்த்திட்டு
காலப் பிடியில் கை நழுவிப் போவானேனோ சொல்லம்மா
நாங்கள் கைவலு இழந்து மெல்லக் கழிந்தது ஓர் ஆண்டின்று!
கண்ணீர் மல்க நாமெல்லாம் உம்மை விண்ணில் தெரியக் காண்போம் தெய்வமாய்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

23, உடுவில் வீதி,
மானிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


# சிறுமியை கொழும்புக்கு அழைத்துச் சென்ற இளைஞருக்கு மறியல்

தென்மராட்சி மே 10

15 வயதுச் சிறுமியை கொழும்புக்கு அழைத்துச் சென்று 21 நாள்கள் அழைத்துச் சென்று வீடு திரும்பிய 20 வயது இளைஞனையும் சிறுமியையும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார் தாயொருவர்.

பொலிஸார் இளைஞனையும் சிறுமியையும் நீதிமன்றில் முற்படுத்தியபோது இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுமியை சான்று பெற்ற பாடசாலையில் முற்படுத்தி கல்வியைத் தொடர அனுமதிக்குமாறும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட 20 வயது இளைஞன் அதே இடத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமியை அழைத்துக் கொண்டு கொழும்புக்குச் சென்று அங்கு 21 நாள்கள் தங்கியிருந்து பின்னர் நேற்றுமுன்தினம் காலை தனது வீட்டுக்குச் சிறுமியுடன் சென்றுள்ளார் இளைஞன்.

பால்ய வயது சிறுமியை திருமணம் செய்யும் நோக்குடன் அழைத்து வந்தால் வீடு கொடுப்போருக்கு தண்டனை வழங்கப்படும் என்று நீதிமன்றால் விடுக்கப்பட்ட கட்டளையை அறிந்திருந்த இளைஞனின் தாயார் தனது மகனையும் சிறுமியையும்சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்.

பொலிஸார் இளைஞனையும் சிறுமியையும் நேற்று மாலை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியிருந்தனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கர வண்டி சேவைகளுக்கு விரைவில் சட்ட விதிமுறைகள்

மன்னார், மே 11
வடக்கு மாகாணத்தில் பேருந்து சேவைக்கு அடுத்த படியாக முச்சக்கரவண்டி சேவையையே மக்கள் நம்பியிருக்கின்றனர். அந்தச் சேவை தரமானதாக வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகின்றது. ஒரு சில முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மேற்கொள்ளுகின்ற அடாவடித்தனங்களும் சட்டமுரணான செயற்பாடுகளுமே அதற்குக் காரணம்.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரனின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

கடந்த திங்கட்கிழமை மன்னார் நகரசபைக்குட்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்களில் ஒரு பகுதியினர் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை அடிகளார், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் செயலாளர் ஆகியோரைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

முச்சக்கரவண்டி தொடர்பான ஒருங்குவிதிகள் தற்போது தயார் நிலையில் உள்ளன என்றும், முச்சக்கர வண்டிகள் தொடர்பாக வடமாகாணம் சார்ந்து காணப்படுகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுடன், ஒரு தரமான முச்சக்கரவண்டி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்டு முச்சக்கரவண்டி சேவைகள் விரைவில் சட்டவிதிகளுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்படும் என்று அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மன்னார் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகச் சுட்டிக்காட்டினர். நீண்ட காலமாக முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் ஒன்று செயற்படாமையால் பல அசௌகரியங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர். அதற்கு தீர்வு வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்:

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அல்லது புதுப்பிக்கப்பட்டு அச்சங்கங்கள் எதிர்காலத்தில் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக வடமாகாண போக்குவரத்து அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். வருடாவருடம் அந்தச் சங்கங்களின் நிதிதொடர்பான விடயங்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும். கணக்காய்வின்போது மோசடிகள் கண்டுபிடிக்கப்படுமாயின் அந்தச் சங்கத்தின்மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒழுங்குபடுத்தலின் முதற்கட்டமாக மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறும். பொதுக் கூட்டதுக்கு ஏற்கனவே விவரங்கள் சேகரிக்கப்பட்டு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிசெய்யப்பட்ட உரிமையாளர்கள் மாத்திரம் முச்சக்கரவண்டி பதிவுப் புத்தகத்தோடும் தமது தேசிய அடையாள அட்டையோடும் அல்லது அற்றோனித்தத்துவ பத்திரத்தோடு சமுகமளிக்க வேண்டும். ஆவணங்களோடு சமுகமளிக்காத எவரும் எக்காரணம்கொண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பொதுக்கூட்டத்தின்போது சங்கத்தை கொண்டுநடத்தக் கூடிய யாப்புவிதிகள் உருவாக்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. உரிமையாளர்கள் அது தொடர்பில் ஆயத்தமாக வருகை தரவேண்டும்.

தங்களது ஆலோசனைகளை எதிர்பார்க்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். என்றுள்ளது. (ந-21)



கடந்த சில மாதங்களாகக் தடும் வெப்பமான காலநிலை காணப்பட்ட நிலையில் நேற்று யாழ்ப்பாணத்தில் சில மணி நேரம் மழை பொழிந்தது. (ந-21)

# இரணைதீவை மீட்கும் வரை போராட்டத்தைக் கைவிடோம்

## தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் உறுதி




கிளிநொச்சி, மே 11
இரணைதீவு மண்ணை மீட்கும் வரை போராட்டம் ஓயாது என்று தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இரணைதீவு மக்கள் உறுதியுடன் தெரிவித்தனர்.

இரணைதீவில் பாக்கு நீரிணையை கண்காணிக்கும் ராடார் தளங்களை நிறுவும் இலங்கை அரசின் நடவடிக்கையை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடற்படையால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீக நிலத்தில் குடியமர அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்து கிளிநொச்சி, பூநகரி இரணைதீவு மக்கள் நடத்தும் தொடர் போராட்டம் நேற்று 10ஆவது நாளாகத் தொடர்ந்தது.

"தனித்தீவில் சுதந்திரமாக வசித்து வந்தோம். அரசு எங்களை கையேந்தும் நிலைக்கு ஆளாக்கியுள்ளது. எமது உயிர் போனாலும் பாரம்பரியமாக தொழில் செய்துவந்த பூர்வீக நிலத்தை கடற்படையினருக்கோ அல்லது வேறு எந்தத் தேவைகளுக்கோ விட்டுக்கொடுக்கப் போவதில்லை. வளமாகவும் ஆரோக்கியமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்த ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டு 24 வருடங்கள் ஆகின்றன எங்களை மீண்டும் ஊருக்குச் செல்ல விடுங்கள்" என்று அவர்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர். (ந-21,35)

# மாகாண அமைச்சர் பதவி நீக்கப்பட்டார்

கொழும்பு, மே 11
வட மத்திய மாகாண சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சர் கே.எச். நந்தசேன பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பதவிக்கு மாகாண சபை உறுப்பினர் எம். ஹேரத் பண்டா நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எம்.ஹேரத் நேற்று ஆளுநர் பி.பீ. திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். நந்தசேன பதவி நீக்கப்பட்டதற்கான காரணம் கூறப்படவில்லை. (4)




வெசாக் தினத்தை முன்னிட்டு அரச தலைவர் செயலகத்தின் ஏற்பாட்டுக்கமைவாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டது. (ய)

# ஊடகவியலாளர் உதவியால் சிக்கிக் கொண்ட திருட்டு நபர்

வவுனியா, மே 11
புதுக்குடியிருப்பு தொழிற்சாலையொன்றில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற திருட்டுச்சம்பத்துடன் தொடர்புடையவரை ஊடகவியலாளர்கள் இனம் கண்டு பொலிஸாரின் உதவியுடன் மடக்கிப்பிடித்த சம்பவம் நேற்று வவுனியாவில் நடந்துள்ளது.

கடந்த முதலாம் திகதி புதுக்குடியிருப்பு தொழிற்சாலையொன்றில் பணியாற்றி வந்த நபரொருவர் தொழிற்சாலையில் எவரும் இல்லாத நிலையில் அங்கிருந்த அலுவலத்தில் பணம் வைக்கப்பட்டிருந்த பெட்டியை உடைத்து திருடியுள்ளார். அங்கிருந்த சீசீரீவி கமராவில் பதிவு செய்யப்பட்ட குறித்த நபர் பணம் திருடும் வீடியோ சில இணையத்தளங்களில் வெளியாகிருந்தது.

அந்த நபர் வவுனியா நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் நடமாடுவதை அவதானித்த ஊடகவியலாளர்கள் குழு தொழிற்சாலையின் உரிமையாளருடன் தொடர்புகொண்டு திருடர் தொடர்பான மேலதிக விவரங்களை கோரி அந்த நபரே திருடன் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். எனினும் அந்த நபர் ஊடகவியலாளர்களின் அவதானிப்பில் இருந்து தலைமறைவாகியிருந்தார். வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு ஊடகவியலாளர்கள் தகவல் வழங்கியிருந்தனர். இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர். பொலிஸருக்கு உதவியாக ஊடகவியலாளர்களும் தலைமறைவாகிய நபரை வர்த்தக நிலையங்கள், பேருந்துகள், விடுதிகளில் தேடியிருந்தனர். வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் இருந்த விடுதியொன்றில் அந்த நபர் இருப்பது கண்டறியப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

தற்போது அவர் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர். (ந-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சொந்த நிலங்கள் விடுவிக்கப்பட்டும் ஆலயத்தில் முள்ளிக்குளம் மக்கள்

மன்னார், மே 11
முள்ளிக்குளம் மக்களின் தொடர் போராட்டத்தின் பின்னர் அவர்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு 10 தினங்கள் கடந்துள்ளபோதும் அவர்கள் தமது நிலங்களில் குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது என்று தெரிவித்தார் முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரன் தவராசா.
அவர் தெரிவித்ததாவது:
முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையால் விடுவிக்கப்பட்ட இடங்களில் இரண்டு நாள்களின் பிற்பாடு குடியமர முடியும் என கூறப்பட்டிருந்தது. 10 நாள்களாகியும் தாமதமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை மக்களுக்கு நம்பிக்கை அற்ற தன்மையை உருவாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.
தற்போது அந்த மக்கள் முள்ளிக்குளம் ஆலயத்தில் இருக்கின்றார்கள். தமது சாதாரண வாழ்க்கையை வாழ முடியாத நிலையில் அந்த மக்கள் உள்ளனர். மக்களுக்கு போதிய அளவு மலசல கூட வசதிகள் , குடி நீர் வசதிகள் உட்பட எவ்வித தேவைகளும் இது வரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.
அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக அவர்களின் காணிகளில் குடியமர்வதற்கு உடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முள்ளிக்குளம் மக்கள் வசித்து வந்த மலங்காடு கிராமத்துக்கு செல்வதற்கு சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை கடந்த 10 நாள்களுக்கு மேலாகக் காணப்படுகின்றது.
இது தொடர்பில் உயர் அதிகாரிகள் துரித கதியில் செயற்பட்டு ஆவன செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்களின் மகிழ்ச்சியான மீள் குடியமர்வுக்கு ஆவன செய்ய வேண்டும். என்றார். (ற-56)

## தண்டனையை குறைக்குமாறு அரச தலைவருக்கு கருணை மனு

கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் ஆயுட் காலச் சிறைத் தண்டனையும் அதற்கு மேலதிகமாக 50வருட கடூழிய சிறைத் தண்டனையையும் அனுபவித்து வரும் சிறைக் கைதி ஒருவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தனது ஆயுள் கால சிறைத் தண்டனையை சாதாரண சிறைத்தண்டனையாக குறைக்க வேண்டும் என்ற கருணை மனுக் கடிதம் அனுப்பியுள்ளார்.
அதில் உள்ளதாவது:
1993ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அறியாத ஒரு குற்றத்துக்காக கடந்த 24 வருடங்கள் சிறை வைக்கப்பட்டுள்ளேன். தயவு கூர்ந்து எனது இந்தக்கருணை வேண்டுகோளைப் பரிசீலித்து நானுமொரு சாதாரண குடிமகனாக வாழ சந்தர்ப்பமளிக்குமாறு தயவுடன் வேண்டுகின்றேன்.
1993.09.27அன்று வந்தாறுமூலை மக்கள் குடியிருப்பு பிரதேசத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு 1994ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஆயுள்கால சிறைத்தண்டனையும் அதற்கு மேலதிகமாக 50வருட கடூழிய சிறை தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.
கருணை உள்ளம் கொண்ட அரச தலைவர் எனது 43 வயதில் 24 வருட சிறைவாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருப்பதை கருத்திற் கொண்டு நிறைவேற்று அதிகாரம் மிக்க அரச தலைவரான தங்களுக்கு அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கமைவாக எனது ஆயுட்கால சிறைத்தண்டனையை சாதாரண சிறைத்தண்டனையாக குறைக்க வேண்டும். எனது வாழ்க்கையின் சத்தான இளமைக்காலம் கடந்துவிட்ட நிலையில் மிகுதி வாழ்வுக்கேனும் ஒளியேற்ற உதவ வேண்டும். என்றுள்ளது. (ற-21)

## வெசாக் வழிபாட்டில் குளவி கொட்டி 50 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 11
விகாரையில், வெசாக் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 50 பேர் குளவித் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.
முத்தலம், விஜயகடுபத, ஸ்ரீ விஜயா விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீதே குளவி கொட்டியுள்ளது.
பாதிக்கப்பட்டவர்களில் 40 பேர் சிலாபம் வைத்தியசாலையிலும், 10 பேர் ஆனைவிழுந்தான் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.
சம்பவத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளே அதிகளவு பாதிக்கப்பட்டனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ற)



*மன்னார், மதவாச்சி பிரதான வீதி முருங்கள் 11 ஆம் கட்டையில் நேற்று கார் விபத்துக்குள்ளானது. அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. வேகமாகப் பயணித்த கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக் குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-56)*

# மலையக மக்களின் இருப்புக்கு ஆபத்து

## பிரச்சினைகளைப் பட்டியலிட்டு மோடிக்கு சிவில் அமைப்புகள் மனு

கொழும்பு, மே 11
இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் (மலையக மக்கள்) எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், அவர்களுக்கான அரசியல் ரீதியான உரிமைகள் சம்பந்தமாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மனு ஒன்றை மலையக சிவில் அமைப்புகள் நேற்றுக் கையளித்துள்ளன.
கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்ட மனுவை பிரதமர் மோடியிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை 11 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். இலங்கை அரசின் அழைப்பின் பேரில் சர்வதேச வெசாக் தின ஆரம்ப நிகழ்வில் பங்கேற்க வரும் அவர், இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப் பட்ட ஹற்றன், கிளங்டன் வைத்தியசாலையையும் திறந்து வைக்கவுள்ளார்.
இந்த நிலையில், மலையக சமூக ஆய்வு மையத்தின் தலைமையில் மலையகத்திலுள்ள சிவில் அமைப்பு செயற்பாட்டாளர்கள் மனுவைக் கையளித்துள்ளனர். மலையக உரிமைக்குரல் அமைப்பின் பிரதிநிதிகளும் உடனிருந்தனர்.
மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவன:
பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது பல்வேறு தேவைகளுக்காக (குறிப்பாக பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களாக) தமிழகத்தின் தென் மாவட்டங்களிலிருந்து பல இலட்சம் தமிழர்கள் குறிப்பாக இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பிரதேசத்தில் குடியமர்த்த ப்பட்டனர். இன்றுஇந்த மக்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 7 வீதமாக உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஒரு காலத்தில் 13 வீதமாக காணப்பட்டனர்)
1817 முதல் அமைந்த இந்த மக்களின் வருகையானது தொடர்ச்சியாக 1956 வரை இடம்பெற்றது. இந்த மக்களின் அயராத உழைப்பினாலேயே இலங்கையின் பெருந்தோட்டத்துறை வளம் கொழிக்கும் பூமியாக மாறியது. இன்றும் இலங்கையின் பெருமளவு அந்நியச் செலாவணியை உழைத்துக் கொடுக்கும் மக்கள் பிரிவினராக இந்த மக்களே உள்ளனர்
1963 வரை இந்த மக்களே இலங்கையின் இரண்டாவது பெரிய சனத்தொகையைக் கொண்ட இனமாகக் காணப்பட்டனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக 1964இல் மேற்கொள்ளப்பட்ட சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலமும், 1974இல் மேற்கொள்ளப்பட்ட சிறிமாவோ - இந்திரா ஒப்பந்தத்தின் மூல்மும் இந்த மக்களில் சரி அரைவாசிப் பேர் அவர்களின் விருப்பமின்றியே இந்தியாவுக்குக் குடிபெயர்த் தப்பட்டனர்.
இவ்வாறு இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்ட மக்களில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் தமிழகத்திலும் (குறிப்பாக நீலகிரி மாவட்டம்) அண்டை மாநிலங்களிலும் இன்று சொல்லில் அடங்கா துன்பங்களை அனுபவிப்பதை அறியக்கூடியதாக உள்ளது.
மலையகப் பிரதேசங்களிலும், தெற்கிலும் வாழும் இந்த மக்களின் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் பல்வேறு நெருக்கடிகளை அன்றாடம் சந்தித்து வருகின்றனர். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்த மக்கள் மத்தியில் தொடர்ச்சியாகத் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கருத்தடை காரணமாக இந்த மக்களின் இன விகிதாசாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 30 வருடங்களில் இலங்கையின் சராசரி குடிசன அதிகரிப்பானது 37.13 வீதமாக இருக்கும் நிலையில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் அதிகரிப்பானது 2.55 வீதமாக மட்டுமே உள்ளது. (இதேவேளை முஸ்லிம்களின் அதிகரிப்பானது 80.78 வீதமாக அதி உச்சத்தில் உள்ளது)
மலையகத் தமிழருக்குச் சொந்தமாகக்காணி கிடையாது. கடந்த இரு நூறு வருடங்களாக இந்த மக்கள் காணி உரிமை அற்றவர்களாகவே உள்ளனர்.
மலையகத் தமிழர்கள் செறிவாக வாழும் பிரதேசங்க ளில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட குடியேற்ற ங்கள் மூலம் இந்த மக்களின் செறிவுத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது.
மலையகத் தமிழர்கள் ஐதாக வாழும் தென் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டம் போன்ற இடங்களில் இந்த மக்கள் திட்டமிட்ட வகையில் இன மாற்றத்திற்கு குறிப்பாக சிங்கள - பௌத்தர்களாக மாற்றப்பட்டுக் கொண்டுள்ளனர். (இங்கு தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் அரிதாகக் காணப்படுவதால் சிங்கள மொழி மூலம் கல்வி கற்று தங்கள் இனத்துவ அடையாளங்களை இழந்து வருகின்றனர்)
படித்த இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகள் இந்த மக்கள் வாழும் பிரதேசங்க ளில் உருவாக்கப்படுவதில்லை.
இதனால் இவர்கள் வேலை தேடி கட்டாயமாக வேறு நகர் பகுதிகளுக்கு இடம்பெயர வேண்டியுள்ளது. இதனாலும் இந்த மக்கள் சிதறடிக்கப்பட்டு செறிவாக வாழும் நிலையை இழந்துகொண்டு வருகின்றார்கள்.
தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ப ஊதியம் வழங்கப்படுவதில்லை. மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகின்றது.
நாம் உங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வந்த மேற்சொன்ன விடயங்களை யிட்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து இந்த மக்களின் எதிர்கால இருப்புக்கு உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்" என்றுள்ளது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெசாக் தினத்தில் வீரவன்ஸவிடம் மிருகக் கொள்கை

## சாடுகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, மே 11
ஒரு மனிதன் மிருகமாவதும் பிராமணனாவதும் பிறப்பால் அல்ல அவனது கொள்கைகளால் ஆகும். புண்ணியமான போயா தினத்தில் கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்துவது விமல் வீரவன்சவின் மிருகக் கொள்கைகளையே வெளிப்படுத்துகின்றது எனக் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முழு உலகமே பௌத்த தர்மத்தை நினைவு கூரும் தினமே வெசாக் தினமாகும். அனைத்து போயாக்களையும்விட வெசாக்போயா புனிதமானது. அவ்வாறானதொரு புண்ணிய தினத்தில் கறுப்புக் கொடிகளை பறக்க விடுமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்ததன் மூலம் விமல் வீரவன்ச பௌத்த தர்மத்தை அவமதித்துள்ளார்.

ஆனால் இவர்கள் ஊடகங்களின் முன்னிலையில் தேசப்பற்றாளர்களாகவும், பௌத்த தர்மத்தின் பாதுகாவலர்களாகவுமே நடிக்கின்றனர். ஒரு மனிதன் மிருகமாவதும் பிராமணனாவதும் பிறப்பால் அல்ல அவனது கொள்கைகளாலே ஆகும்.

வரலாற்றில் எவரும் கூறாத கருத்தை விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இது பௌத்த தர்மத்தையே அவமதிக்கும் செயலாகும். எனவே இது மிருகத்தனமான கொள்கையாகும் - என்றார்.

(த - 10)

# நல்லிணக்கம் மூலமே தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம்

## கூறுகிறார் சந்திரிகா குமாரதுங்க



கொழும்பு, மே 11
நல்லிணக்கம் மாத்திரமே, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர், தலைமை அமைச்சர், முப்படைகளின் தளபதிகள் உள்ளிட்டோரைக் கொண்ட தேசிய பாதுகாப்புச் சபை தொடர்ச்சியாக கூடி பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்தும், கட்சிகள் மற்றும் தரப்புகளின் அறிக்கைகள் தொடர்பாகவும் விவா திக்கின்றது.

தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்களை நல்லிணக்கத்தின் மூலமே தடுக்க முடியும். இதனை இப்போது நாம் செய்யாவிட்டால், எதிர்காலத்தில் இன்னொரு போரை எதிர்கொள்ள நேரிடலாம். நல்லிணக்கம் மட்டுமே இன்னொரு ஈழக் கோரிக்கையைத் தடுக்கும்.

போரில் பங்களித்ததற்காக எந்த இராணுவத்தினரும் கைது செய்யப்படவில்லை. முன்னைய ஆட்சிக் காலத்தில் நடந்த நீதிக்குப் புறம்பான ஊடகவியலாளர்கள், அரசியல் எதிரிகளின் படுகொலைகளில் தொடர்புபட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தான் கைது செய்யப்பட்டுள்ளனர். தமக்கு எதிரானவர்களை இலக்கு வைப்பதற்கு சில அதிகாரிகள் இந்தப் படையினரைப் பயன்படுத்தியுள்ளனர் - என்றார்.

(த -5)

# இந்தியக் ஹெலிகளால் ஹற்றனில் வீடுகள் சேதம்



கொழும்பு, மே 11
இந்திய உலங்குவானூர்திகளால் ஹற்றன் பகுதியில் ஐந்து வீடுகள் சேதமாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் வருகையை முன்னிட்டு ஹற்றன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் பரீட்சார்த்த தரையிறக்க நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய உலங்குவானூர்திகளே இத்தகைய சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையின் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்க இந்தியத் தலைமை அமைச்சர் வருகை தரவுள்ளார். இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் ஒத்திகை இடம்பெற்றது.



இந்திய உலங்கு வானூர்திகள் இரண்டு பரீட்சார்த்தமாக தரையிறக்கப்பட்டபோதே டன்பார் மைதானத்தைச் சுற்றியுள்ள ஐந்து குடியி ருப்புகளின் கூரைகள் உடைந்து பறந்தன. அதிகவலுவுடைய குறித்த உலங்குவானூர்தியின் விசிறிகளினால் அதிக காற்று வீசியதாலே குடியிருப்புக் கூரைப் பகுதிகள் காற்றில் தூக்கி வீசப் பட்டன. இதையடுத்து, உலங்குவானூர்திதரையிறங்கும்போது அதிக காற்று அழுத்தம் ஏற்படும் என்பதால் மைதானத்தைச் சூழவுள்ள குடியிருப்புகளின் கூரைகளில் மணல் மூடைகளை வைக்குமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த - 10)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
09
.
11
.
1950

விண்ணில்
14
.
04
.
2017

கடந்த 14.04.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் அருணாசலம் சரவணபவானந்தம்

(ஓய்வு பெற்ற இ.போ.ச.சாரதி - பருத்தித்துறை)

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் கூறி எங்கள் துயரில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலியினை தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் பேரன்போடு எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (12.05.2017) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அந்தியேட்டிக்கிரியைகள் நடைபெற்று அஸ்திகரைக்கப்பட்டும் வீட்டுக்கிரியைகள் 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தினையிலும் பங்கேற்று தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.
குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
12
.
06
.
1973

விண்ணில்
17
.
05
.
2011

### அமரர் சீவரத்தினம் சீவறஞ்சன்

(றெஜி றெஸ்ரோரன்ஸ் - உரிமையாளர்)

திதி: பிரதமை (11.05.2017)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதிந்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஆறு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாதம் போற்றியே பணிந்திடுவோம்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

றெஜி றெஸ்ரோரன்ஸ்,
[illegible] வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசூல் பாடசாலை அரச படையின் கட்டுக்குள்

## ஐ.எஸ்.வசமிருந்து மீட்பு

பக்தாத், மே 11
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் மேற்கு மோசூலில் உச்சம் தொட்டுள்ள நிலையில் அந்த நகரில் உள்ள முக்கியப் பாடசாலை ஒன்று அரச படையின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் உள்ள ஈராக்கின் முக்கிய நகர்களில் ஒன்றே மோசூல். இதன்கிழக்குப்பகுதி ஏற்கனவே கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது.

ஆளுநர் மாளிகை, பல்கலைக்கழகம், முக்கிய மசூதிகள், அரச அலுவலகங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்கள் ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்ட நிலையில் குறித்த பகுதியில் உள்ள இஸ்லாமியப் பாடசாலைகளில் ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப் பட்டுள்ளது என்று ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அது தொடர்பிலான ஒளிப்படங்களும் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. (ம)



## பிரான்சுக்கு உதவுகிறது ஜேர்மனி

பெர்லின், மே 11
வேலையில்லா திண்டாட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பிரான்சுக்கு உதவத் தயாராக உள்ளதாக ஜேர்மனி தெரிவித்தது.

பிரான்சின் அதிபர் தேல்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வலது சாரியைச் சேர்ந்த மரின் லி பென்னைத் தோற்கடித்து மக்ரோன் வெற்றி பெற்றார்.





பிரான்சில் உள்ள வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை 9 சதவீதம் என்பதில் இருந்து 6 சதவீதம் என்றாக்கப்படும் என்று மக்ரோன் தனது தேர்தல் பரப்புரையில் தெரிவித்திருந்தார். மக்ரோனின் வெற்றியை அடுத்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்த ஜேர்மனின் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் பிரான்சின் வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஜேர்மனி உதவும் என்று தெரிவித்தார்.


"மக்ரோன் இலட்சக்கணக்கான பிரான்ஸ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார். அதே போல ஜேர்மனியிலும், ஐரோப்பா முழுவதிலும் ஆதரவினைப் பெற்றுள்ளார். மக்ரோன் துணிச்சலாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஆதரவான பரப்புரையை மேற்கொண்டார், வெளிப்படையான உலகத்துக்காகக் குரல் கொடுக்கிறார். இத்தோடு சமத்துவ சந்தை பொருளாதாரத்தை வளர்ப்பதாக உறுதியளித்துள்ளார். பிரான்ஸ் - ஜேர்மன் ஒத்துழைப்பு என்பது ஜேர்மனியின் அயலுறவு கொள்கையின் முக்கியப் பகுதி. அதே சமயத்தில் மக்ரோனின் வெற்றியினால் ஜேர்மன் தனது பொருளாதாரப் போக்கினை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவையில்லை" என மெர்க்கல் தனது வாழ்த்துக் குறிப்பில் குறிப்பிட்டார். (ம)



இரண்டாம் உலகப் போரின் 72ஆவது வெற்றி தினம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், இரண்டாம் உலகப் தளபதிகள் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். ரஷ்யாவின் இராணுவ வலிமையைப் பறைசாற்றும் விதத்தில் மிகப்பெரும் அணிவகுப்புக்களும் இடம்பெற்றன.

# ரஷ்யாவுக்கு ஆபத்து என்றால் இராணுவ ரீதியில் சந்திப்போம்

## புடின் எச்சரிக்கை



மொஸ்கோ, மே 11
ரஷ்யாவின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டால் அதை இராணுவ ரீதியில் சந்திப்போம் என்று அந்த நாட்டின் தலைவர் விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்தார்.

இரண்டாம் உலகப்போரின் வெற்றித் தினம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் கௌ்ண்டாடப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே புடின் இவ்வாறு தெரிவித்தார்.

"உலகின் தலையெழுத்தை நாங்கள் தான் தீர்மானிப்போம் என்று ஜேர்மனியின் நாஜிக்கள் நினைத்ததால் இரண்டாம் உலகப்போர் வெடித்தது. அப்போது பல்வேறு நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட பிரிவினையும் உலகப் போருக்கு வித்திட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற போர்களைத் தவிர்க்க உலக நாடுகள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். உலகம் முழுவதும் அமைதி நிலவ வேண்டும்என்றே ரஷ்யா விரும்புகிறது. அதேநேரம் ரஷ்யாவின் இறையாண்மைக்கும் தேசிய பாதுகாப்புக்கும் ஆபத்து ஏற்பட்டால் அதை ராணுவ ரீதியில் எதிர்கொள்வோம். இன்றைய சூழ்நிலையில் உலகம் முழுவதும் தீவிரவாதம் மிகப் பெரும் பிரச்சினையாக எழுந்துள்ளது. அதற்கு எதிராக உலக நாடுகள் ஓரணியில் திரள வேண்டும்" என புடின் மேலும் தெரிவித்தார். (ம)

## சுரங்கப் பாதையில் விபத்து; 11 பள்ளிச் சிறார்கள் சாவு

### சீனாவில் துயரம்

சீனாவில் சுரங்கப்பாதையில் சென்றுகொண்டிருந்த பள்ளிப்பேருந்து விபத்தில் சிக்கி தீப்பிடித்ததில் 11 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சாண்டாங் மாகாணத்தின் வெய்ஹாய் நகரில் உள்ள பன்னாட்டு மழலையர் பள்ளிக்கு குழந்தைகளை ஏற்றிக்கொண்டு சென்ற பேருந்தே சுரங்கப் பாதையில் அவ்வாறு விபத்துக்குள்ளானது. விபத்தை அடுத்து பேருந்து தீப்பற்றி எரிந்தது என்று சொல்லப்படுகிறது. 11 மாணவர்கள் உயிரிழந்தனர். அவர்களில் தென்கொரியாவைச் சேர்ந்த ஐந்து மாணவர்களும், சீனாவைச் சேர்ந்த ஆறு மாணவர்களும் உள்ளடங்குகின்றனர் என்று சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

விபத்துக்கான காரணம் தொடர்பில் துல்லியத் தகவல் எதுவும் வெளியிடப் படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ம)

# ஜனநாயகக் கட்சியின் மூன் தென்கொரிய அதிபரானார்



சியோல், மே 11
தென்கொரிய அதிபர் தேர்தலில் கொரிய ஜனநாயகக் கட்சியின் மூன் ஜய இன் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப் பட்டது.

தென்கொரியாவின் அதிபராக இருந்த பார்க் கியூன் ஹை, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைதானதை அடுத்து அதிபர் பதவிக்கான தேர்தல் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. வாக்களிப்புக்கு முந்திய கருத்துக்கணிப்புக்களின் படி மூன் ஜன இன் அதிபராவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி அவர், 41.4 சதவீத வாக்குகள் பெற்று அதிபரானார். ஹொங் ஜுன்பியோ 23.3 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

தனது தேர்தல் பரப்புரையில் வடகொரியாவுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை மூன் அடிக்கடி வலியுறுத்தினார். கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் ஏற்படக்கூடாது என்பது அவரது கருத்தாக அமைந்தது.

இந்த வெற்றியை அடுத்து அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் மூனுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம் உலகப்போரில் பங்கெடுத்த சிப்பாய்கள், பற்றன. (ம)

# ஏமனில் கொலராத் தாக்கம்; 34 பேர் பரிதாப உயிரிழப்பு

சனா, மே 11

ஏமனில் கொலரா நோயின் தாக்கம் தற்போது தீவிரமாக உள்ளது. இந்த நோயின் தாக்கத்தால் கடந்த இரு வாரங்களில் மட்டும் 34 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

'கொலரா நோய் தாக்கி கடந்த இரு வாரங்களில் 34 பேர் உயிரிழந்துள்ளனர். 9 மாகாணங்களில் 2 ஆயிரத்து 22 பேர் வயிற்றுப் போக்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஏப்ரல் 27 முதல் மே 7 ஆம் திகதி வரை நோயின் தாக்கம் தீவிரமாக வுள்ளது.



இந்த ஆண்டில் மட்டும் இரண்டாவது முறையாக கொலரா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. போர் காரணமாக மருத்துவமனைகள் அழிக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் உணவு மற்றும் தூய்மை யான குடிதண்ணீர் கிடைக்கப் பெறாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். உலக அளவில் சிரியா, தெற்கு சூடான், நைஜீரியா மற்றும்ஈராக்நாடுகளைபோல் மனிதாபிமான அவசர நிலை உள்ள நாடாக ஏமன் உள்ளது" என்று உலக சுகாதார நிறுவனத்தின் நேற்று முன்தின அறிக்கை ஒன்று குறிப்பிட்டு நிற்கிறது. (ம)



## சோமாலியாவில் தாக்குதல்; சிப்பாய்கள் பலர் உயிரிழப்பு

சோமாலியாவில் இராணுவ தளத்தின் மீது அல் சபாப் ஆயுததாரிகள் நேற்று நடத்திய தாக்குதலில் சிப்பாய்கள் பலர் உயிரிழந்தனர் என்று முதல் கட்டத் தகவல் வெளியாகியது.

சோமாலிய அரசை வீழ்த்துவதற் அல் சபாப் ஆயுததாரிகள் தொடர்ந்து போராடி வருகின்றன. பல்வேறு நகர்ப்புறங்களில் ஆதிக்கம் செலுத்திய அல் சபாப் ஆயுததாரிகளை சோமாலிப் படைகள் விரட்டியடித்துள்ளன. ஆனால், சிறிய மற்றும் தொலைதூர கிராமப் புறங்களை அவர்களிடம் இருந்து பாதுகாக்க போராடி வருகின்றன.

தலைநகர் மொகடிசூவில் இருந்து சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சோமாலிய இராணுவ தளத்தின் மீது அல் சபாப் ஆயுததாரிகள் நேற்று திடீரெனத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஏராளமா சிப்பாய்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

# சக்கர நாற்காலியிலும் சாகசம்

சிட்னி, மே 11

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 43 வயதுப் பெண் சாரா ஜேன். கயிற்றைக் கட்டிக் கொண்டு மலையேற்றம் செய்யும் வீராங்கனை, பயிற்சியாளர்.

2013ஆம் ஆண்டு காலில் ஏற்பட்ட வலியால் ஓர் சிறிய அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டார். அந்தச் சிகிச்சை இவரது இயக்கத்தையே முடக்கிவிட்டது. இடுப்புக்குக் கீழே முற்றிலும் செயலிழந்துவிட்டது.

"எனக்கு சாகசங்களில் அளவு கடந்த ஆர்வம். உலகின் பல்வேறு மலைகளிலும் ஏறியிருக்கிறேன். ஆனால் ஒரு சிறிய சிகிச்சை முடக்கிவிட்டதில் மிகையாக மனமுடைந்தேன். அப்போது எனது மகனுக்கு ஐந்து வயது. நான் முடங்கியதால் அவன்தான் மிகவும் பாதிக்கப்பட்டான். அவனை அழைத்துக்கொண்டு எவ்வளவோ சாகசங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கற்பனை செய்திருந்தேன். அத்தனையும் வீணாகிவிட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒளிப்படக் கலைஞர்கள் சிலர் எனது கனவை நிறைவேற்றுவதாகச் சொன்னார்கள். எனக்கு நம்பிக்கை வந்தது. நான் விரும்பிய விதத்தில் ஒளிப்படங்கள் எடுப்பதற்காக ஒரு குழுவினர் கடுமையாக உழைத்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு சக்கர நாற்காலியோடு கயிற்றில் தொங்கியதும் என் மகனுடன் ஒளிப்படங்கள் எடுத்ததும் என்னை மகிழ்ச்சியின் எல்லைக்கே கொண்டு சென்றுவிட்டது. என் மகனும் அவ்வளவு மகிழ்ச்சியடைந்தான். சக்கர நாற்காலிக்காரர்களாலும் இதுபோன்ற செயல்களைச் செய்ய முடியும் என்பதைக் காட்டுவதற்காக இந்தப் ஒளிப்படங்களைப் பயன்படுத்த இருக்கிறேன்" - என்கிறார் சாரா. (ம)



# நெஞ்சை விட்டகலா நினைவுகளில் ஒன்பதாம் ஆண்டு



திருமதி

## ஸ்ரீ நகுலமீரா சிதம்பரநாதன்

திதி : அபரபக்க பிரதமை

அன்னையின் கரத்தில் 16.05.1947

ஆண்டவன் தாளில் 21.04.2008

அம்மா என்பது
அனைவரின் தேவை
இழந்தோம் அதனை ஒன்பது ஆண்டுகளாய்
காலங்கள் கடுகதியாய் கரைந்தே போனாலும்
இழப்போ இன்று போல் தெரிகிறதே அம்மா !

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

ியை
ிக்கா,
நாடு
தமது
தெரி
(ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# உடனடி நடவடிக்கையில் இறங்குவது அவசியம்

கணித, விஞ்ஞானபாட ஆசிரியர்களுக்குஇலங்கையில், அதுவும்குறிப்பாகத்தமிழ்மக்கள்வாழும்பகுதிகளில் ஏற்பட்டிருக்கக்கூடியபற்றாக்குறைகவலையளிக்கும் நிலையை அடைந்துள்ளது. இந்த ஆளணிகளை நிரப்புவதற்குத் தேவையான ஆள்கள்இல்லை என்றுகூறப்படுவதற்கு அப்பால், இதனை நிவர்த்திக்கக் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ, இத்தகைய பிரச்சினை ஒன்றை எதிர்கொள்வதற்கான கொள்கை ரீதியான தீர்வுப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டதாகவோ தகவல்கள் ஏதும் இல்லை என்பதும் கவலைக்குரியது.

நிலமையின்விபரீதத்தை,கல்விக்கானஇராஜாங்கஅமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் விடுத்துள்ள சவால் உள்ளங் கை நெல்லிக்கனியாக வெளிப்படுத்துகிறது. ''முடிந்தால் அறிக்கை விடாமல் உயர்தரக் கணித, விஞ்ஞான மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூடிய பட்டதாரிகளைக் கொண்டு வந்து தாருங்கள்'' என்று அவர் சவால் விடுத்திருக்கிறார்.

மலையகத்தில் கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக்குறை தொடர்பிலேயே அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். எனினும் வடக்கு கிழக்கிலும் இதேபிரச்சினைஇருக்கத்தான்செய்கிறது. குறிப்பாகவன்னி மாவட்டங்களிலும், ஏனைய பின்தங்கிய இடங்களிலும் கணித, விஞ்ஞான, ஆங்கிலபாட ஆசிரியர்களுக்குத்கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது.

அண்மையில்வடக்குமாகாணத்தில்கணித, விஞ்ஞான ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 418 ஆசிரியர்களை நியமிப்பதற்கு கொழும்பு அனுமதி வழங்கியிருந்தது. அதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது 400க்கும் மேற்பட்ட வேண்டுகைகள் கிடைக்கப் பெற்றன. ஆனால் அவற்றைப் பரிசீலித்தபோது, பல விண்ணப்பங்கள் ஒருவரே இரு பாடங்களுக்கும் தனித்தனியாக விண்ணப்பத்திருப்பது தெரியவந்தது. அதனடிப்படையில் 284 பேருடைய உண்மை விண்ணப்பங்களே கிடைத்திருப்பது அறியப்பட்டது.

போதியவிண்ணப்பங்கள்இல்லாதமையால்விண்ணப்பிப்பதற்கானகாலஎல்லைமேலும்ஒருமாதத்திற்குநீடிக்கப்பட்டது. அந்தக்காலப்பகுதியிலும்68பேருடையவிண்ணப்பங்களே மேலதிகமாகக்கிடைக்கப்பெற்றுள்ளன. ஆகமொத்தம்352 விண்ணப்பங்களே கிடைக்கப் பெற்றிருக்கின்றன. வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவை போதுமானவையல்ல.

வடக்குகிழக்கில்ஒருகாலத்தில்உயர்தரத்தில்மாணவர்களை கணிதம் அல்லது விஞ்ஞான பாடங்களையே படிக்கும்படி பெற்றோர்கள்அனைவரும்வலியுறுத்தியிருக்கின்றனர். இது ஒருமோசமானகலாசாரம்என்றுகண்டிக்கப்பட்டநிலைமை மாறி இப்போது கணித, விஞ்ஞான பாடங்களில் போதிய பட்டதாரிகள்இல்லைஎன்கிறநிலையைநாம்அடைந்திருப்பது மிகக் கவலைக்குரியது.

ஒரு புறத்தில் தமக்கு அரச வேலை தரும்படி கேட்டு பட்டதாரிகள் போராடிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் இருக்கும் அரச வேலைகளைச் செய்யக்கூடிய பட்டதாரிகள் இல்லை என்கிற நிலை தோன்றியிருக்கிறது. இவ்வாறு சமூகம் சமநிலை இழந்து போயிருப்பதற்கு அரசுகளின் சமச்சீரற்ற கல்விக் கொள்கையும் ஒரு மிகப் பெரிய காரணம். முறையான தேவை ஆய்வுகளின் அடிப்படையிலான பொருத்தமான காலங்களில் பொருத்தமானகல்விக் கொள்கைகள் உருவாக்கப்படாமையும்கூட இதற்கான பொறுப்பு.

ஒரு நாட்டின் சமூகத்தின் அனைத்துப் பகுதிகளும் சீராகத் தேவைக்கேற்பவளரத்தக்கமுறையில்கொள்கைவகுப்புகள் செய்யப்படவேண்டியது அவசியம். அப்போதுதான் அந்தச் சமூகம் ஆரோக்கியமானதாக இருக்க முடியும். அத்தகைய சமச்சீரான வளர்ச்சியின்றி ஒரு பகுதி மட்டும் அளவுக்கதிகமாகவளர்வதும்,மற்றொருபகுதிநலிந்துபோவதும்சமூகத்தை நோய்வாய்ப்பட்டதாக்கிவிடும்.தற்போதையநிலைஅதுவே.

அமைச்சர்ராதாகிருஷ்ணன்சொல்வதைப்போன்றுதமிழகத்தில் இருந்து ஆசிரியர்களை வரவழைக்கும் தீர்வு தற்காலிகமானதாகவே இருக்கமுடியும். நிரந்தரமான ஒருதீர்வையும், முறையான கல்விக் கொள்கையையும் உருவாக்குவதற்கு நாட்டின் கற்றறிந்த சமூகமும், அரசியல் தலைமைகளும் முழு மூச்சாக உழைக்கவேண்டும். அதுவும் உடனடியாக அந்தக் காரியத்தில் இறங்கியாக வேண்டும்.

# அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, பொன்சேகாவின் கருத்துக்களால் இரு கட்சிகளிடையே முரண்பாடு

## காலிமுகத்திடல் சனசமுத்திரம் ஆளும்கட்சிக்கு அதிர்ச்சி

## மக்கள் மனங்களை மீண்டும் வென்றெடுப்பது குறித்து அரசுத்தலைவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்த ரெங்கன்

கொழும்பு காலிமுகத்திடலில் பிரதான எதிர்க்கட்சியான கூட்டு எதிர்க்கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு இந்த அளவுக்கும் மக்கள் திரள்வார்கள் என்று ஆளும் கட்சித்தலைவர்களும் நினைக்கவில்லை; எதிர்க்கட்சியினரும் எதிர்பார்த்திருக்கவில்லை. நாட்டின் சமீபகால அரசியல் வரலாற்றில் இது ஒரு பிர மிப்பைத் தரும் சாதனையாகும்.

இத்தகைய விதத்தில் பெரும் அளவில் மக்கள் திரள்வார்கள் என்று எதிர்பார்க்காததால், அந்த மிக விசாலமான மைதானத்தைக் கூட்டு எதிரணியினர்களுக்கு வழங்குவ தற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஏற்பாடு செய்திருந்தார். அந்த ஏற்பாட்டுக்குத் தாமே பணிப்புரை வழங்கியிருந்தார் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் பின்னர் தெரிவித்திருந்தார். இருவருமே இவ்வளவு பெரிய மனித வெள்ளம் அந்தக்கூட்டத்துக்குத் திரளும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால் சமீபகாலத்தில் அரசின் தவறானசெயற்பாடுகள், செயற்றிறன் இன்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவைகளுடன் பரவலான ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் எதிர்த்தரப்பினருக்குச்சாதகமான பரப்புரைவாய்ப்புக்கிடைத்துள்ளது. ராஜபக்ச ஆட்சியின் போது இருந்ததை விட இப்போது அந்த வகையில் அதிக செயற்பாடுகள் காணப்படுவதாக அரசுதரப்பு புலனாய்வுப் பிரிவுகளின் தலைவர்கள் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். உயர்நிலை வழக்குகள் பலவும் நடவடிக்கை எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்படிருப்பதானது, சம்பந்தப்பட்டவர்கள் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதாக மக்கள் கருத இடமளித்துள்ளது.

குற்றச்சாட்டுகள் வெறும் பரப்புரைக்காக செய்யப்பட்டவை என்ற வகையில் மக்கள் கருதுவதால் எதிர்த்தரப்பினர் மீது அனுதாபம் ஏற்படத் தொடங்கியுள்ளது. வெளிப்படையாகக் கூறப்பட்ட பலபெரிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் மிக சாதாரணமாகக் காணப்படுகின்றன. இதற்கு முக்கிய காரணம், அரசுக்குள்ளேயே காணப்படும் பிரிவினையாகும். ஒரு தரப்பு ஆதரவளிக்கிறதென்றால், மற்றொரு தரப்பு பல நடவடிக்கைகளில் இறங்கி அதனை முறியடித்து விடுகின்றது.

> அரசு தரப்பு புலனாய்வாளர்களின் கணிப்பின்படி காலிமுகத்திடலில் கூடிய மக்கள் தொகை ஒரு இலட்சத்துக்கு மேலிருக்கும். காம்பெல்பார்க்கில் நடந்த ஐ.தே.க கூட்டத்துக்கு 45 ஆயிரம் பேர் குழுமியிருப்பார்கள். அதே சமயம் கெட்டம்பே மைதானத்தில் சிறிசேனவின் கூட்டத்துக்கு கூடிய மக்கள் தொகை 40 ஆயிரமாக இருக்கலாம். இந்த இரண்டு கூட்டங் களுக்கும் வந்திருந்த மக்கள் தொகைகளை ஒன்றாகப் பார்த்தாலும் காலிமுகத் திடலில் கூடியவர்களின் தொகைக்கு ஈடாகமாட்டாது.

திங்கட்கிழமை இரவு காலிமுகத்திடலில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டி ருந்தார்கள் என்ற செய்தி அரசுத் தலைவர்களைஆட்டம்காணச் செய்தது. இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நாங்கள் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதை விடுத்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதற்கான காலம் ஏற்பட்டுள்ளது என்றார், பெயர் குறிப்பிட விரும்பாத அமைச்சர் ஒருவர்.

### காலிமுகத்திடலில் கூடிய மக்கள்

அளவையாளர் நாயகம் பி.எம்.பி. உதயகாந்தவின் கருத்துப்படி, காலி முகத்திடலானது பக்கத்திலுள்ள வீதிகளையும் சேர்த்து 18 எக்கர் விஸ்தீரணம் கொண்டது. கம்பெல் பார்க் (யு.என்பி. மேதினக் கூட்டம் நடந்த இடம்) 3.5 ஏக்கர் விஸ்தீரணம் மட்டுமே கொண்டது. மைத்திரி பிரிவு சுதந்திரக் கட்சிக் கூட்டம் நடைபெற்ற கெட்டம்பேயிலுள்ள முனிசிப்பல் விளையாட்டுத்திடல் 2.5 ஏக்கர் விஸ்தீரணம் மட்டுமே கொண்டது. இந்த ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடத்தின் விஸ்தீரணத்தை வைத்தே அங்கு கூடிய மக்கள் தொகையை இலகுவாக மதிப்பீடு செய்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. காலிமுகத்திடலை எதிர்த்தரப்பினரால் முழுமையாக நிரப்ப முடியாமல் போகும் என்று சிறிசேனவும், விக்கிரமசிங்கவும் ஏன் கருதினார்கள் என்பதையும் இது விளக்குவதாய் உள்ளது.

அரசு தரப்பு புலனாய்வாளர்களின் கணிப்பின்படி காலிமுகத்திடலில் கூடிய மக்கள் தொகை ஒரு இலட்சத்துக்கு மேலிருக்கும். கம்பெல் பார்க்கில் நடந்த ஐ.தே.க கூட்டத்துக்கு 45 ஆயிரம் பேர் குழுமியிருப்பார்கள். அதே சமயம் கெட்டம்பே மைதானத்தில் சிறிசேனவின் கூட்டத்துக்கு கூடிய மக்கள் தொகை 40 ஆயிரமாக இருக்கலாம். இந்த இரண்டு கூட்டங்க ளுக்கும் வந்திருந்த மக்கள் தொகைகளை ஒன்றாகக் கூட்டிப் பார்த்தாலும் காலிமுகத்திடலில் கூடியவர்களின் தொகைக்கு ஈடாகமாட்டாது.

காலி முகத்திடலில் அபரிமிதமான கூட்டம் கூடியமை மட்டுமல்ல, அரசு சார்பு தரப்பினருக்கு ஏற்பட்டிருக்கும் கவலைக்கு காரணம். கூட்டத்துக்கு வந்தவர்கள் எல்லாம் கூட்டு எதிரணிக்குத்தான் வாக்களிப்பார்கள் என்பதில்லையென்று சிலர் ஆறுதல் கூறிக் கொண்டாலும், சுதந்திரக் கட்சி அமைச்சர் ஒருவர் கூறியது போல் அரசுக்கு எதிரான மனமாற்றம் மக்கள் மத்தியில் உருவாகியிருக்கிறது என்பதுதான் யதார்த்தம். வேறு வார்த்தையில் கூறுவதானால், சிறிசேன-விக்கிரமசிங்க கூட்டு செல்வாக்கு இழந்து விட்டது என்பதாகும். அது மட்டுமின்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மாற்றீடாக ராஜபக்சவினரால் தோற்றுவிக்கப்பட்டுள்ள லங்கா பொதுஜன கட்சியானது நிலை கொள்ளத் தொடங்கிவிட்டது. அந்தவகையில் சிறிசேனவின் தலைமையிலான பிரிவு ஒரு பின்னடைவு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது பெரிய பிரிவு, சிறிய பிரிவு என்றவகையில் நாடு முழுவதும் பிரியத் தொடங்கிவிட்டது. பெரிய பிரிவு ராஜபக்சவையும், சிறிய பிரிவு சிறிசேன வையும் ஆதரிப்பதாக உள்ளமையால், ஐ.தே. கட்சியின் மத்தியில் உள்ளகப் பிரச்சினைகள் இருந்தாலும், அதுபலமானகட்சியாகநிலைத்திருக்கும் என்று தோன்றுகின்றது.

மேதின காலிமுகத்திடல் கூட்டம் முடிவடைந்த கையோடு முன்னாள் அரச தலைவர் ராஜபக்சவின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களில் 42 பொலிஸாரை மீளப்பெற்றுக் கொள்வதற்கான உத்தரவை சிறிசேன விடுத்திருக்கிறார்.

இது ஒரு அரசியல் பழிவாங்கல் என்று முன்னாள் அரச தலைவர் ராஜபக்ச கண்டித்திருக்கிறார். ராஜபக்ச குடும்பத்தினர் தொடர்பாக விசாரணைகள் முடிவுற்றுள்ள வழக்குகளைத் தொடர்ந்து நடத்துமாறானபணிப்புரைகளும் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

> “ கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் காலி முகத்திடலில் நடந்த கூட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. அரச தலைவர் சிறிசேனவின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஐ.தே.க. மேதினக் கூட்டத்தில் தம்மைப் பற்றிக் குறை கூறப்பட்டதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன பிரச்சினை கிளப்பினார். அமைச்சர் ராஜித சேனாரத்னவால் தம்மைப்பற்றி அசிங்கத் தனமான கருத்து வெளிப் படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இதன்போது குறுக்கிட்ட அரச தலைவர் அமைச்சர் சரத் பொன்சேகாவும் சில சர்ச்சையான கருத்துக்களை வெளியிட்டிருந்தார் என்று குறிப்பிட்டார்.

**அமைச்சர்கள் முரண்பாடு**

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் காலி முகத்திடலில் நடந்த கூட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. அரச தலைவர் சிறிசேனவின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், ஐ.தே. கட்சியின் மேதினக் கூட்டத்தில்.வைத்து அமைச்சர் ராஜிதசேனாரத்ன தம்மைப்பற்றி அசிங்கத்தனமான கருத்து வெளியிட்டதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன பிரச்சினை கிளப்பினார். இதன்போது குறுக்கிட்ட அரச தலைவர், அமைச்சர் சரத்பொன்சேகாவும் சில சர்ச்சையான கருத்துக்களை வெளியிட்டிருந்தார் என்று குறிப்பிட்டார். மேதின ஐ.தே.கட்சி கூட்டத்தில் பேசிய போது ராஜித சேனாரத்ன பின்வருமாறு கூறினார். சில சிக்கலான விடயங்களைக் கவனிக்க சரத்பொன்சேகாவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அண்மையில் அரச தலைவர் குறிப்பிட்டிருந்தார். சரத் பொன்சேகா வரப்போகிறார் என்று கேள்விப்பட்டதும் ராஜபக்சக்களுக்கு பயம் பற்றிக் கொண்டுவிட்டது. ஜோன் என்று ஒருவர் இருக்கிறார்; எங்களுடனிருக்கும் ஜோன் அமரதுங்கவை நான் கூறவில்லை. அந்தப் பக்கத்தில் இருக்கும் ஜோனைக் குறிப்பிடுகிறேன். அவர் பெரிதும் கவலைக்குள்ளாகிவிட்டார். அவர் ஒரு சமயம் இரத்தினபுரிக்குச் சென்று தாம் மகிந்தவுடன் சேரப் போவதாகக் கூறுவார். பிறகு அமைச்சரவைக் கூட்டத்துக்கும் வருவார். அவர் ஒரு காலை அந்தப் பக்கம் வைத்துக் கொண்டிருக்கிறார். இவர்களையெல்லாம் நீதியின் முன் நாம் கொண்டு வருவோம். அதே மேதினக் கூட்டத்தில் சரத்பொன்சேகா பேசியபோது போரை நாங்கள் வென்ற இரண்டு வாரங்களின் பின்னர் அப்போதைய ஐ.நா.செயலளர் நாயகம் பான்கீமூனுடன் ராஜபக்ச இரகசிய உடன்படிக்கையொன்றில் போர்குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பதாக கையொப்பம் இட்டார். ஆனால் பின்னர் கூறினார், போர்வீரர் எவராவது விசார ணைக்குட்படுத்தப்பட்டால் தாம் மின்சாரக் கதிரையை எதிர்கொள்ளவும் தயாராய் இருப்பதாக. இந்த மாதிரியான துரோகங்களுக்காக அவர் அவருடைய சால்வையாலேயே தூக்கிலிடப்பட வேண்டும். மின்சாரக் கதிரை யில் அமரச் செய்ய வேண்டியதில்லை. அமைச்சர் செனவிரட்ன கூறுகையில் தமக்கு ராஜபக்சவுடனேயோ அல்லது அவரது குழுவினரோடேயோ எதுவிதத் தொடர்பும் கிடையாது. சேனாரத்னவின் கருத்து தவறானது என்றார். இந்த மாதிரி தனிப்பட்ட தாக்குதல்களை அமைச்சர்கள் நிறுத்த வேண்டும் என்ற விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார். வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர கூறுகையில், “எமது அக்கறை ராஜபக்ச மீது இருக்கலாகாது. நாம் எதைக் செய்ய வேண்டுமோ அதைச் செய்தாக வேண்டும்" என்றார்.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் சரத்பொன்சேகா ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்களைத் தாம் ஆதரிக்கவில்லையென்று கூறிய அரச தலைவர், அவை குறித்துத் தாம் கவலைப்படுவதாகவும் தெரிவித்தார். இந்தக் கட்டத்தில் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம கருத்துத் தெரிவிக்கையில், ஐ.தேசியக்கட்சி அவைத் தலைவர் என்ற முறையில் தாமோ தமது கட்சியோ குறித்த அமைச்சர்களின் கருத்துக்களை அங்கீகரிக்கவில்லை என்றார். கெட்டெம்பே மேதினக் கூட்டத்தில் அரச தலைவர் பேசிய போது, சிறிலங்கா சுதந்திரக்கட்சியைத் தாம் இப்போது ஜனநாயகக் கட்சியாக மாற்றியுள்ளார் என்றார்.

அந்தக் காலத்தில் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்துள்ளேன். அமைச்சரவையில் எவராவது குரல் எழுப்பக் கூடியதாக இருக்கவில்லை. இப்பொழுது கட்சி 'திறந்த' கட்சியாக விளங்குகின்றது. குடும்ப உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்குவதற்காக நான் வரவில்லை. கட்சியின் இளைஞர் அணியில் இப்போது இளவரசர்கள் இல்லை. பரிசுத்தமான ஜனநாயகக் கட்சியாக நாம் முன்னேற வேண்டும். ஊழலற்ற வீண்விரயம் களவு மற்றும் குடும்ப அரசியல் அற்ற கட்சியாக நாம் உயரவேண்டும்.இந்த விழுமியங்களை நான் இப்போது உருவாக்கியுள்ளேன் என்றார். பொதுவில் அரசு சார்பில் தலைமை அமைச்சரும், அரசதலைவரும் எதிர்கொண்டுவரும் சவால்கள் அதிகரித்தபடி இருக்கின்றன.

பொருளாதார மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான பிரச்சினைகளை எதிர்நோக்கும் அதே சமயம் மக்கள் மனங்களைவென்றெடுப்பதும் முக்கிய பிரச்சினைகளாக இருவருக்கும் இப்போது தோற்றமளிக்கின்றன.



## ஆசிரியருக்கான கடிதம்


## தன்வினை தன்னைச் சுடும்

பண்டைய கால போர் நடவடிக்கைகளின்போது “பூமராங்” என்ற பெயரிலான ஆயுதமொன்று பாவனையில் இருந்ததாகக் கூறப்படுவதுண்டு. எதிரியை இலக்கு வைத்து ஏவப்படும் அது எதிரியைத் தாக்கிச் சேதம் விளைவித்துவிட்டு மீண்டும் அதை ஏவிய வீரரது கைகளையே வந்தடையுமாம். நாட்டின் இன்றைய அரசியல் களத்திலும் அதிகாரத் திமிரில் அரசியல் தலைவரொருவர் மேற்கொள்ளும் அநியாயச் செயற்பாடு, கால மாற்றத்தில் பின்னரொரு சமயம் அவரையே பாதிக்கும் நிலை ஏற்படுவது காலத்தின் நியதியாகச் கொள்ளத்தக்கது.

தமது உயிருக்கு விடுதலைப்புலி உறுப்பினர்களால் அச்சுறுத்தல் நிலவும் நிலையில், முன்னாள் அரசதலைவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புத் தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களது எண்ணிக்கையை தற்போதைய அரசு வேண்டுமென்றே குறைத்துள்ளதாகக் குற்றம் சாட்டி வருகிறார் முன்னாள் அரசதலைவர் மகிந்த. இத்தனைக்கும் விடுதலைப்புலிகளை முற்றுமுழுதாகத் தாம் அழித்தொழித்து விட்டதாக வீரம் பேசிவந்தவர் அவர். தாம் அரசதலைவராகச் செயற்பட்ட வேளையில் முன்னாள் அரசுத்தலைவரான சந்திரிகாவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களது எண்ணிக்கையைக் குறைத்ததன் மூலம் விடுதலைப் புலிகளது இலக்காகவிருந்த சந்திரிகாவுக்கு உயிர் அச்சுறுத்தலுடன் வாழும் நிலையை உருவாக்கி வைத்தவர்அவர். அதிகாரம் தமது கைகளில் இருந்த திமிர் காரணமாக அன்று தாம் சந்திரிகாவுக்கு ஏற்படுத்திய அவமரியாதையை இன்று அவர் நேரடியாக இன்றைய அரசிடமிருந்து எதிர்கொள்ள நேர்ந்துள்ளமை இயற்கையின் நியதியாகக் கொள்ளத்தக்கது. வேண்டுமானால் அரசியலில் இதுவெல்லாம் சகஜமப்பா என்று கூறி மனதைச் சமாதானப்படுத்திக்கொள்ள இயலும்.

ப.பிரதீபன், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 50 வீதமான கழிவுடன் உல்லாசம் அனுபவியுங்கள்

*கொமர்ஷல் கிரடிட் காட் வாடிக்கையாளர்களுக்கான அனுகூலம்*

இலங்கையின்எந்தப்பகுதியாகஇருந்தாலும்கொமர்ஷல் வங்கியின் கிரடிட் காட்டினை கொண்டுள்ள வாடிக்கையாளர்கள் பிரபலமான ஹோட்டல்களில் 50 வீதம் வரையிலானபணச்செலுத்துகைக்கழிவுடன்தங்கியிருக்கும் வாய்ப்புக்களை கொமர்ஷல் வங்கி ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் வங்கியின் 'ஈஸி வகேஷன்' திட்டத்தின் தற்போதைய அறிவிப்பின் படியாக 24 ஹோட்டல்களில் இந்தக்கழிவுகள்வழங்கப்படவுள்ளதுடன்விஸாஅல்லது மாஸ்டர்காட் மூலம் கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது இந்தக் கழிவுகள் வழங்கப்படுமெனவும் வங்கி அறிவித்துள்ளது.

குறிப்பாக, ஏர்ள்ஸ் றீஜன்ட் கண்டி, பண்டனஸ் பீச் றெசோர்ட் அன்ட் ஸ்பா, சூரியா றெசோர்ட்ஸ், சென்டாரா சீசேன்ட் றெசோர்ட்ஸ் அன்ட் ஸ்பா, த றெயின் பொரஸ்ட் எகோலொட்ஜ், சித்தாலேபஆயுள்வேதஹெல்த்றெசோர்ட் மற்றும் ஆதித்யா ஹோட்டல்களில் மே மாதம் 31 ஆம் திகதி வரை இந்தக் கழிவு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏனைய 17 ஹோட்டல்களிலும் எதிர்வரும் ஜுன் மாதம் 30ஆம்திகதிவரைஇந்தக்கழிவுமுறைமைநடைமுறையில் இருக்குமெனச் சொல்லப்படுகிறது. பிரதானமாக ஆலியாறெசோர்ட்அன்ட்ஸ்பா, அவானிபென்தொட்டை, அவானி களுத்துறை, கிளப் ஹோட்டல் டொல்பின், ஹோட்டல் சீகிரிய, மாலுமாலு, மவுண்ட் பேட்டன் பங்களா, திக்வல்லறெசொர்ட் அன்ட் ஸ்பா, த காம் றெசோர்ட் அன்ட்ஸ்பா, தஈடன்றெசோர்ட்அன்ட்ஸ்பா, தபெரடைஸ் றெசோர்ட்அன்டஸ்பா, ஊகாபே, ஊகாஜன்கிள்பீச், சீகிரிய ஜன்கில்ஸ், த புளு வோட்டர், சன் அக்குவா, டறீஒப் லைப் நேச்சர் றிசோர்ட் என்பனவே ஜுன் மாதம் 30 ஆம் திகதி வரையான கழிவுமுறைமைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## 75 மில்லியன் டொலர் இலங்கைக்கு கடன் உதவி

*உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது*

இலங்கைக்கு75மில்லியன்டொலர்கள்கடன்தொகையை நிதி உதவியாக வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

அந்தவகையிலேஇலங்கையில்சிறந்தநிர்வாகத்திறனை ஏற்படுத்தல், பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குதல் போன்ற நலன்புரி திட்டங்களுக்கான முன்னேற்பாடாகவே மேற்படி தொகை மதிப்பீட்டினை உலக வங்கிவழங்கதீர்மானித்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. மேலும் சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனத்தின் ஊடான இந்த கடன் தொகையானது விரைவில் அரசிடம் கையளிக்கப்படவுள்ளது. அத்துடன் மேற்படி கடன் தொகை மதிப்பீட்டின் வழங்கலானது இலங்கையில் சமூக பாதுகாப்புதுறையினை முன்னேற்றம் அடையச் செய்வதற்கானபிரதானகாரணியாகஅமையுமெனஉலகவங்கி எதிர்வுகூறியுள்ளது.

# சீன அரசின் நிதி உதவியோடு வினைத்திறன்மிகு ஆய்வுகூடம் அமைப்பதற்கு நடவடிக்கை

## மருந்துப் பொருள்களின் பரிசோதனைக்கான நிலையமாக அமையவுள்ளது

"மருந்து வகைகளின் வர்த்தக நாமங்களை விற்பனை செய்வதற்குப் பதிலாக மருந்தின் மூலப்பெயருடன் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்"

சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன.



சீனஅரசின்நிதிஉதவியோடு வினைத்திறன்மிகு ஆய்வுகூடம்ஒன்றினைஇலங்கையில்அமைப்பதற்கானநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படிஅமைக்கப்படவுள்ளதான ஆய்வுகூடமானது உயர்தரத்தைக் கொண்ட மருந்துப் பொருள்களின் பரிசோதனைக்கான நிலையமாகச் செயலாற்றவுள்ளதான கருத்துக்கள் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறைஅமைச்சர் ராஜித சேனாரட்னவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அநுராதபுரம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் 2014 பிகுழுவைச்சேர்ந்தமாணவர்களுக்கு கௌரவம் அளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே இந்த விடயங்கள் அவரால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இது குறித்தான கருத்துக்களை வெளியிட்ட அவர், "ஆளணி வள அபிவிருத்தி மீது அரசு அதீத கவனம்செலுத்தியுள்ளது.

மருந்து வகைகளின் வர்த்தக நாமங்களை விற்பனை செய்வதற்கு பதிலாக மருந்தின் மூலப்பெயருடன் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் மூன்றாவது புற்றுநோய் மருந்தைத் தருவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இது நாட்டில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டதான புற்றுநோய்மருந்துவகைகளை விடவும் விலை குறைந்ததாகும். இதற்குத்தேவையான ஆலோசனைகள் தேசிய ஔடத அதிகார சபைக்கு வழங்கப்படவுள்ளன.

அத்துடன்களுத்துறை, மாத்தறை, காலி மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் அமைந்துள்ளதாதியர்பயிற்சிக்கல்லூரிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. ஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு அண்மையில் தாதியர் பீடம் ஒன்றும் அமையவுள்ளது" - என்றார்.

## பன்னாட்டு மரபுகள் 27ஐ நடைமுறைப்படுத்தல் குறித்துக் கவனம்

வரிச்சலுகை வழங்கும் விடயம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கருத்து



இலங்கைக்கு ஜி.எஸ்.பி வரிச்சலுகை வழங்குதல் தொடர்பில் பன்னாட்டுத் தரத்தின் கீழான 27 மரபுகள்நடைமுறைப்படுத்தப்படுகின்றதாஎன்பதுதொடர்பிலேயே தற்போது தாம் கவனம் செலுத்திவருவதான தகவலை ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்படுத்தி யுள்ளது.

குறிப்பாகமக்களின்வாழ்க்கையில்தாக்கம்செலுத்திய நீண்ட கால பிரச்சினைகளுக்குத்தீர்வுகளைவழங்குவதற்காக இலங்கை அரசு முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே இந்த வரிச்சலுகையை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும்தெரிவித்துள்ளது. இதற்காக இலங்கை அரசு முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே இலங்கையின் மனித உரிமைகள், தொழிலாளர்கள் உரிமைகள், சூழல் பாதுகாப்பு மறறும் நல்லாட்சி தொடர்பிலான 27 வகையான பன்னாட்டு மரபுகளைநடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசு கண்டுள்ள முன்னேற்றம் என்பது மட்டுமே கவனத்திற் கொள்ளப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



## ஊழியர் சேமலாப நிதியை முதலிட்டு பெற்ற நட்டங்கள் குறித்து விசாரணை

*மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவிப்பு*

ஊழியர்சேமலாபநிதியத்தினால் இரண்டாம் தரச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டினால் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் 9.5 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடுடையநட்டம்குறித்தான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதான கருத்து மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி யால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றிருந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் சந்தர்ப்பத்திலேயே இந்த விடயங்கள் அவரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்துமேலும்கருத்து தெரிவித்துள்ள அவர், "இந்த விசாரணைகளின் முதற்கட்டமாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மத்திய வங்கியின்உதவிஆளுநர் உள்ளிட்ட இரண்டு அதிகாரிகள் வேறு பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நாள்களில் அவர்களிடமிருந்து விளக்கம்கேட்பதற்கானநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளது" - என்றார்.

# சிறந்தமுகாமையாளர்விருதுநிகழ்வுகள்இலங்கையிலும்அறிமுகம்

கூட்டாண்மைத்துறையில்காணப்படும்சிறந்தமுகாமையாளர்களை இனங்காண்பது, மதிப்பிடுவது, கௌரவிப்பது மற்றும் முன்மாதிரியாகக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுவதான சிறந்த முகாமையாளர் விருது நிகழ்வுகளை இலங்கையிலும் அறிமுகப்படுத்தியுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி சிறந்த முகாமையாளர் விருதுகளின்போதுவழங்கப்படுவதான கௌரவத்தினை சர்வதேச மனிதவளமுகாமைத்துவஆலோசனைகுழுவழங்குவதுடன், இந்தக் குழுவின்மூலமாகப்பங்காளர்நிறுவனங்களின் வினைத்திறன்மிகு இயலுமைகள் மற்றும் வியாபார உள்வாங்கல்கள்போன்றனமேம்படுத்தப்படுவதற்கான அர்ப்பணிப்பு வழங்கப்படுவதாக கூறப்படுகின்றது.

இலங்கையில்தற்போதுஅறிமுகம் செய்யப்பட்டுள்ளதானசிறந்தமுகாமையாளர் விருதுகள் நிகழ்ச்சித் கொலம்போ லீடர்ஷிப் அக்கடமி மற்றும் பீப்பிள்ஸ் பிஸ்னஸ் ஆகியனபிரதான அனுசரணைவழங்குகின்றன. இவற்றுடன்இணைந்தவிதமாக முன்னணி பன்முகத்துறை நிறுவனங்களும் தங்களது பங்களிப்பினை வழங்கவுள்ளன.

சிறந்தமுகாமையாளர்விருதுகளுக்கானவிண்ணப்பங்களின்கோரல் எதிர்வரும் ஜுன் மாதம் 30 ஆம் திகதியுடன்நிறைவடையவுள்ளது.

இந்தநிகழ்ச்சித்திட்டம்குறித்துதெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "விருதுக்காக விண்ணப்பித்திருந்தோரை மதிப்பீடு செய்வதற்காகநியமிக்கப்பட்டுள்ளநடுவர்கள் அவர்களின்நிர்வாகப்பாணி, பெறுபேறுகளில் கவனம் செலுத்தல், நிறைவேற்றல், மக்கள் நிர்வாகம் மற்றும் தலைமைத்துவ ப்பண்புகள் போன்றவற்றில் கவனம் செலுத்துவர்.

அவற்றிலிருந்து சிறந்த முகாமையாளர் தெரிவு செய்யப்படுவதுடன் அபிவிருத்தி செய்து கொள்வதற்கான வழிகாட்டல் வழங்கப்படும். சிறந்த முகாமையாளர் ஒருவர் சிறப்பாகதிகழ்வதுஎவ்வாறுஎன்பதைக் கண்டறிவது இதன் இலக்காக அமைந்துள்ளது.

அதே போன்று உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற ஆய்வு மாதிரிக்கமைவாக முகாமையாளர்களின் வினைத்திறன்பரிசோதிக்கப்படும். பெறுபேறுகள், நிறைவேற்றல், மக்கள், அணி, நிறுவனங்கள்மற்றும் தலைமைத்துவ பண்பு போன்றவற்றைஅடிப்படையாகக்கொண்ட மதிப்பீடுகள் இதில் முக்கியத்துவம் பெறுகிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> துன்பங்கள் வரும்போது சோர்ந்து போகும் நிலையிலிருந்து பெண்கள் மீண்டெழ வேண்டும் ஆண்களால் எதையும் எதிர்கொண்டு வாழ முடியுமானால், பெண்களாலும் அப்படியே வாழ முடியும் என்ற மனோதிடத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

# மாற்றங்களுடன் மாறுவோமா பெண்களே!

உடுவிலூர் கலா

பெண்ணடிமை நிலையிலிருந்து பெண் விடுதலை நோக்கிய பெண் ணியப் பயணமானது இன்று எங்கும் பரந்து வியாபித்துள்ளது. பெண்ணை ஓர் உயிர்ப்பின் தனிமமாக தற்காப்புள்ளவளாக, சுய சிந்தனையுடையவா ளாக, சுய முடிவு எடுப்பவளாக, பழமை வாதக் கொள்கைகளிலிருந்து மீண்டும் நவீனத்துவம் பெற்ற பெண்ணாக உருமாற்றவே பெண்ணியம் தோற்றம் பெற்றதாகக் கூறுகின்றனர். பெண்ணியம் பற்றிய தெளிவான சிந்தனைக் கோட்பாடுகள் பலரிடமும் இல்லாததால் பெண்ணியம் தேவையானதா? என்கிற சிந்தனை எழுகிறது. பெண்விடுதலையின் தொனிப்புக்கள் பேசப்படுகின்ற போதும் இன்னமும் ஒவ்வொரு பெண்ணும்ஏதோஒருவழியில்வேதனையோடு தான் வாழ்கிறாள். பெண்விடுதலை என்பது இன்றோ அல்லது நாளையோ கிடைத்துவிடும் ஒன்றல்ல. அதிகார அடக்கு முறைக்கு எதிராக 19ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற பெண்ணியமானது தன்னுடையதாக உருவகித்துக் கொண்ட பெண்விடுதலைப் போராட்டத்தில் முற்றாக வெற்றி பெறவில்லை.

**பெண் சமத்துவம்**

பெண் சமத்துவம் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆனால், பெண்விடுதலைக்கான அடிப்படைக் கல்வி உரிமை கிடைத்துவிட்டது. கல்வியறிவோடு பெண்கள் நிறையவே சாதிக்கிறார்கள். வரலாற்றுப் புத்தகத்தின் பக்கங்களில் பதிவிடப்படுகின்றனர். ஆனாலும், மனித இனச் சமன்பாடு என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. மனித இனச்சமன்பாடு நோக்கிய பயணத்தில் பெண் பலகட்டங்களில் தன்னை மாற்றியமைக்க வேண்டியவளாகிறாள். பழமைக்கோட்பாடுகள் பலவற்றுக்கு இன்று அடிபணிந்து செல்கிறாள். அவை அனைத்தும் பெண் விடுதலைக்குத் தடைக்கற்கள் எனத்தெரிந்தும், அவற்றைத் தாண்டி முன்னேற மனமின்றித் தத்தளிக்கிறாள்..

இன்னமும் துன்பங்கள் வரும்போது சோர்ந்துபோகும் நிலையிலிருந்து



> கல்விகற்று பணி புரியும் பெண்களால் இன்று பொருளாதாரம் மேன்மை நிலையடைகிறது. ஆனால் காலம் காலமாக அவள் குடும்பச் சுமைகளைச் சுமக்கும் சுமைதாங்கியாகவே வாழ்கிறாள். குடும்பவாழ்வில் தனது விருப்பு வெறுப்புக்களை நிர்மூலமாக்குகிறாள்.

பெண்ணானவள் மீண்டெழ வேண்டும் ஆண்களால் எதையும் எதிர்கொண்டு வாழ முடியுமானால், பெண்களாலும் அப்படியே வாழ முடியும் என்ற மனோதிடத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும். தந்தை வழி மரபுப் பெண்களை இரண்டாம் பாலினமாக அடிமைப் படுத்துகிறது. சொத்துரிமை முதல், நாளாந்தக் கடமைகள் வரை பெண் இரண்டாம் பட்சமே. கல்வி உரிமை கிடைத்த பின்னரே பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன. குடும்பம் என்கிற கட்டமைப்பினுள் பெண் இயங்கும் போது உரிமைகளை இழந்து அடிமையாகவே வாழும் நிலை தொடர்கிறது. சமுதாயத்தில் பெரிய அளவில் வாழ்ந்த பெண்ணும் திருமணத்தின் பின் சமையல் அறைக்குள் முடங்கிவிடுகிறாள். இது ஆணாத்திக்க கொடூரமல்லவா? தன் சுயத்தை இழந்துவிட திருமணம் என்கிற ஆத்மார்த்த உறவு வழிகோலுகிறது. சந்தோசமான திருமண வாழ்விலேயே உயிர்ப்பு இருக்கும். சுயத்தை இழந்து மன அழுத்தங்களோடு வாழும் பெண்கள் எவ்வாறு சந்தோசமாக வாழ்வது?

**அறிவின் செயல்நிலை**

கல்விகற்று பணிபுரியும் பெண்களால் இன்று பொருளாதாரம் மேன்மை நிலையடைகிறது. ஆனாலும் காலம் காலமாக அவள் குடும்பச் சுமைகளை தாங்கும் சுமைதாங்கியாகவே வாழ்கிறாள். குடும்பவாழ்வில் தனது விருப்பு வெறுப்புக்களை தியாகம் செய்கிறாள்.

இணைந்து கொண்ட குடும்பவாழ்வு முறிந்துவிடக்கூடாது என்று பலசமரச சமயோசிதங்களை செய்கிறாள். குடிகாரக் கணவனைக் குடிக்காமல் திருத்தவும், பெண்களோடு தொடர்புள்ள ஆண்களை சமுதாயத்தில் மறைத்து வாழவும், குடும்பவாழ்வில் பெரும் சிரமங்களை சந்திக்கிறாள். அபரிமிதமான அன்பைக் கணவன் மீது செலுத்திக் கணவன் தடம்மாறும்போது, மனதுக்குள் புலம்பு கின்றாள். வெளியே சொன்னால் வெட்கம் விப ரிக்க முடியாத துக்கம் என மனதின் உள்ளேயும்வெளியேயுமாக இருதலைக் கொள்ளி எறும்பின் வாழ்வைச் சித்தரித்துக் கொள்கிறாள்.

பிரசவ காலங்களில் தாய்வீடு செல்லும் போது, தன்னுடை பிரிவு கணவனை இன்னொருபெண்மேல் ஈர்ப்பை ஏற்படுத்தி விடும் என நினைத்து உடல் நலம் தேறாமலே கணவனைத் தேடி ஓடுகின்றாள். இவ்வாறு ஒரு பெண் தான் வாழ்வதற்காக கணவனை இறுகப் பற்றியபடி வாழத்தான் வேண்டுமா? இவை யாவற்றையும் உற்று நோக்கின், உளவியல் ரீதியில் பெண் பெரும் தாக்கத்துக்கு ஆளாகிறாள் என்ற உண்மை புலப்படும்.

**சமூகக் கட்டமைப்பு**

ஆணாதிக்கம் அத்துமீறிப் பெண்களை அடக்குமுறைசெய்வதற்கு ஆணின் வளர்ப்புமுறையும், தந்தை வழிச் சமூக அமைப்பும் பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றது.

சமையல் செய்வதும், படுக்கை விரிப்பதும், குழந்தை பெறுவதும், பணிந்து, குனிந்து நடப்பதும் இயலாத நேரத்தில் பராமரிப்பது என அடங்கி ஆணைச் சார்ந்து வாழ்வதே பெண்ணின் கடமைகளாக சித்திரிக்கப்படு கின்றது. ஆனால் ஆணின் கடமைககளோ குடும்பத்திலும், சமுதாயத்திலும் இறுக்கமாக தக்கவைக்கப்பட்டுள்ளன. இவையும் பெண்ணடிமைமைத் தினத்திற்கு வித்திட்டுள்ளன.

இவை யாவும் அன்றுதொட்டு இன்று வரை பெண்கள் வேதனையுடன் மௌனிக்கும் செயல்கள்.

பெண்களே தமது அடிமைநிலையை உணர்ந்து பெண்விடுதலை நோக்கி நேரிய சிந்தனைகளுடன் பயணிக்க வேண்டும். பெண்ணடிமைக்கான நடைமுறைச் சட்டதிட்டங்கள் உரிமையுடன் மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றம் கட்டாய தேவையாகின்றது. மாற்றம் இன்றேல் விடுதலை இல்லை. குடும்ப, சமூக, ஆணாதிக்க கோட்பாட்டுக்குள் முடங்கி வாழ்வதால்பெண்ணுக்குவிடுதலையோ அன்றி விமோசனமோ கிடைக்கப் போவதில்லை.

மனம் விரும்பி மாற்றத்துக்குள் பிரவேசித்தால் மட்டுமே பெண்ணியம் அடுத்த கட்ட நகர்வுக்குச்செல்லமுடியும். இல்லையேல் பெண்விடுதலைக்காக காலம் காலமாக ஒப்பாரி வைக்கும் நிலையே தொடரும். மாறுவோமா பெண் களே... பெண் விடுதலை நோக்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




அதிர்ஷ்டத்தை அதிகம் நம்பாத நீங்கள், உழைப்பால் உயர்ந்தவர்கள். குருபகவான் உங்களுடைய ராசிக்கு 5ஆம் இடத்தில் நீடிப்பதால் தொலை நோக்குச் சிந்தனையால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெரிய பதவியில், நல்ல நிலையில் இருக்கும் நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். எதிர்பார்த்து ஏமாந்துப் போன தொகையும் கைக்கு வரும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் உங்களை மதிக்கத் தொடங்குவார்கள்.

பூர்வீக சொத்தை வர்ணம் பூசுவது, விரிவுப்படுத்துவது, அழகுப்படுத்துவது போன்ற முயற்சிகள் நல்ல விதத்தில் முடிவடையும். கோவில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். 27ஆம் திகதிவரை உங்கள் ராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்று அமர்ந்திருப்ப தால் தோற்றப் பொலிவுக் கூடும். புதிதாக மடிக்கணினி, கைப்பேசி, ஆடியோ, வீடியோ சாதனங்களெல்லாம் வாங்கி மகிழ்வீர்கள். உங்கள் ரசனைக் கேற்ற நல்ல வீடு அமையும். வீடு மாறுவீர்கள். சாதுர்யமாகப் பேசி சில முக்கிய காரியங்களை முடிப்பீர்கள்.

உங்களுடைய வார்த்தைக்கு மதிப்புக் கூடும். உங்களுடைய ஆலோசனைகளையும் குடும்பத்தில் உள்ளவர்கள் ஏற்பார்கள். சூரியன் சாதகமாக இல்லாததால் வேலைச்சுமை அதிகமாகும். பெற்றோரின் ஆரோக்யத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் தாமதம் வேண்டாம். உங்கள் ராசிக்கு 7இல் சனி நிற்பதுடன், சப்தமாதிபதி செவ்வாயும் சாதகமாக இல்லாததால் கணவன்மனைவிக்குள் சிலர் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்வார்கள். சாலைகளை கடக்கும் போது கவனமாக இருங்கள்.

மறதியால் விலை உயர்ந்த ஆபரணங்கள், மொபைல் போன் இவற்றையெல்லாம் இழந்துவிடாதீர்கள். உடன்பிறந்தவர்களுடன் வீண் விவாதங்கள் வந்துப் போகும். வீடு, மனை வாங்குவது, விற்பதில் அலட்சியம் வேண்டாம். கன்னிப் பெண்களே! உயர்கல்வியில் முன்னேற்றம் உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை நல்ல விதத்தில் முடியும். காதல் விவகாரத்தில் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கேது 10 இல் தொடர்வதால் உத்யோகத்தில் பொறுப்புகள் அதிகமாகிக் கொண்டேப் போகும். ஆனால் சின்ன சின்ன சலுகைகள் கிடைக்கும். கலைத் துறையினரே! தள்ளிப் போன வாய்ப்புகள் கூடி வரும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

868 - சீனாவில் டயமன் சூத்ராவின் பிரதிகள் அச்சிடப்பட்டன. இதுவே அச்சிடப்பட்ட, பிரதிகளில் தொன்மையானதாகும்.

1672 - நெதர்லாந்து, பிரான்சின் 14 ஆம் லூயியினால் ஆக்கிரமிக்கப்பட்டது.

1812 - லண்டன் பொதுச் சபையில் (நாடாளுமன்ற கீழ்சபை) பிரதமர் ஸ்பன்சர் பேர்சிவல், ஜோன் பொலிங்கம்மால் படுகொலை செய்யப்பட்டார்.

1833 - நியூபவுண்லாந்துக்கு அப்பால் பனிப் பாறையில் மோதுண்டு லேடிஒப்த லேக் என்னும் பெயரைத் தாங்கிய பாய்க்கப்பல் விபத்துக்குள்ளா கியதில் பயணிகள் மற்றும் மாலுமிகள் அடங்கலாக 265 பேர் உயிரிழந்தனர்.

1867 - லக்ஸம்பேர்க் சுதந்திரமடைந்தது

1927 - சலனப்படக்கலை மற்றும் விஞ்ஞான அக்கடமி உருவாக்கப்பட்டது

1945 - இரண்டாம் உலகப் போரில் ஒகினாவா கரைக்கப்பால் ஜப்பானிய சிறப்புத் தற்கொலைத் தாக்குதல் மூலம் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் தாக்கப்பட்டதில் 346 மாலுமிகள் கொல்லப்பட்டனர். ஆயினும், சேதமடைந்த கப்பல் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

1949 - இரண்டாவது தடவையாகவும் சியாம் உத்தியோகபூர்வமாகதனது பெயரை தாய்லாந்து என பெயர்மாற்றியது.

1949 - இஸ்ரேல், ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.

1995 - அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் நிபந்தனையோ, காலவரம்போ இன்றி அணு வல்லமையுள்ள நாடுகள் ஒப்பமிட்டன.

1996 - மியாமிலிருந்து விமானமொன்று புறப்பட்டவேளை, முறையற்ற விதத்தில் பொதிகள் கையாளப்பட்டதில் விபத்துக்குள்ளாகியதால் அதிலிருந்த 110 பேர் உயிரிழந்தனர்.

1998- இந்தியாவின் போக்ரானில் நிலத்தின் கீழ் மூன்று அணு குண்டுச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

2000- நாடாளுமன்றத் தேர்தலில் தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் நிலையில் கென்சர்வேடிக் கட்சியும், லிபரல் டெமக்ரற் கட்சியும் இணைந்துநடத்திய பேச்சையடுத்து கூட்டரசு ஐக்கியராச்சி யத்தில் உருவானது டேவிட் கமரோன் தலைமை அமைச்சரானார்.

2013 - துருக்கியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 52 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

**நாளை**

**சித்திரை-29**
வெள்ளிக்கிழமை -12.05.2017
திதி: துதியை முழுவதும்
நட்சத்திரம்: அனுசம் மு.இ. 07.46
சுபநேரம்:05.54-07.24 வரை
ராகுகாலம்:10.24-11.54 வரை

# மக்ரோனின் வெற்றி தெரிவிப்பது என்ன?

பிரான்சின் அதிபர் தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வலதுசாரி வேட்பாளரான மரின் லி பென்னைத் தோற்கடித்து பிரான்சின் அதிபராக மாறியுள்ளார் லிபரல் கட்சியின் வேட்பாளரான மக்ரோன். மக்ரோனின் வெற்றியின் மூலம் பிரான்ஸ் நாட்டு மக்கள் அகதிகள் மட்டில் மிகுந்த கருணையுடன் உள்ளனர் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.


பிரான்ஸின் பரிஸ் நகரில் கடந்த சில காலமாக தொடர்ந்து தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பிரான்சின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக தீவிரவாதம் உருவெடுத்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அகதிகளுடன் அகதிகளாக நுழைந்த ஐ.எஸ். ஆயுததாரிகளே இத்தகைய தாக்குதல்களுக்கு முக்கிய காரணமாக உள்ளனர் என்று பொதுவான கருத்துக்கள் உள்ளன. இதை மரின் லி பென் தனது தேர்தல் பரப்புரையின்போது அச்சாணியாகக் கையாண்டார்.

சட்டவிரோதக் குடியேறிகள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள், மத்திய கிழக்கு நாடுகளில் இருந்துவரும் அத்தனை அகதிகளுக்கும் தஞ்சம் அளிக்காமல் ஆண்டுக்கு 10 ஆயிரம் அகதிகள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள், இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும், தேவையற்ற மசூதிகள் இடிக்கப்படும், தேசிய நலத்திட்டங்களில் பிரான்ஸ் மக்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும் போன்றன லி பென்னின் பரப்புரை முழக்கங்களாக அமைந்தன.

கடந்த வருட இறுதிப் பகுதியில் அமெரிக்க அதிபர் ட்ரம்பும் இவ்வாறான தேர்தல் பரப்புரைகளைக் கையாண்டு வெற்றிபெற்றிருந்தார். இஸ்லாமியப் பயங்கரவாதத்தை அடிக்கொருதடவை உச்சரித்து வெற்றிபெற்றிருந்தார். எனவே லி பென், ட்ரம்ப்பை பின்பற்றியிருக்கலாம். ஆனால் அகதிகளை நிராகரித்து நாட்டைப் பலப்படுத்துவதென்பதை பிரான்ஸ் மக்கள் ஏற்கவில்லை. அங்கேதான் அவர்கள் அமெரிக்கர்களிடம் இருந்து வேறுபடுகின்றனர்.

ஆனால் மக்ரோன் அகதிகளை ஆதரிக்கும் போக்கை வெளிப்படுத்தினார். மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர்ச்சூழலையும் மனிதகுலத்துக்கு நிலவும் நெருக்கடி நிலையையும் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தினார். அகதிகளை ஆதரித்து நாட்டைப் பலப்படுத்துவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதே மக்ரோனின் முக்கிய இலக்கு. அது மக்களால் செவிமெடுக்கப்பட்டுள்ளது. 39 வயதேயான அவர் வெற்றி பெற்றதன் மூலம் பிரான்சின் இளம் அதிபர் என்ற சிறப்பையும் பெறுகிறார்.





சிரியா, ஈராக் ஆகிய நாடுகளில் இதுவரை காலமும் நடைபெற்றுவந்த இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான போர் தற்போது இரட்டிப்பாகியுள்ளது. அகதிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மனிதகுலம் அங்கு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு அந்த மக்களுக்குத் தேவைப்பட்டன. கனடா, ஜேர்மனி போன்ற நாடுகள் அகதிகளை இருகரம் நீட்டி அழைத்துநின்றன. பிரான்ஸ் அகதிகளை ஆதரிக்கவில்லை என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் தனது நிலைப்பாட்டில் அதாவது அகதிகளை ஆதரிப்பதில் சிறிது பின்னடிப்பைக் காட்டியது.

மக்ரோனின் வெற்றியுடன் அந்த நாடு அகதிகளை இனிவரும் காலங்களில் மேலும் ஆதரிக்கும் என்று பொதுவான கருத்துள்ளது.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நோர்வே போன்ற நாடுகள் அகதிகள் மட்டில் முழுவதுமாகக் கைவிரித்துள்ளன. இந்த நிலையில் மக்ரோனின் வெற்றி இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் திருப்புமுனை என்று சொல்லிக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகுபலி 2 வெற்றி ராஜமவுலியின் தந்தை பெருமிதம்



உலகம்முழுவதும்மிகப்பெரியவரவேற்பைப்பெற்றுள்ள 'பாகுபலி2', திரையிட்ட இடங்களில் எல்லாம் வசூல் மழை பொழிந்து வருகிறது.

இந்தப் படம் திரையிடப்பட்ட 9 நாள்களில் ரூ.1000 கோடி ( இந்திய) வசூல் செய்து சரித்திர சாதனை படைத்து இருக்கிறது. இந்தியப்படம்ஒன்று இந்த சாதனைபடைத்து இருப்பது இதுவேமுதல்முறையாகும்.

'டைட்டானிக்', 'அவதார்', 'ஹாரிபாட்டர்', 'லார்ட் ஆப் ரிங்ஸ்' உள்ளிட்ட சில படங்கள் மட்டுமே ரூ.1000 கோடி(இந்திய)வசூல்செய்தன. அந்தப்பட்டியலில் 'பாகுபலி2'படமும்சேர்ந்து இருப்பது இந்தியதிரை உலகினரை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது.

'பாகுபலி', 'பாகுபலி2' படத்தின் கதையை எழுதியவர் இயக்குநர் ராஜமவுலியின் தந்தை விஜயேந்திர பிரசாத் தெரிவித்ததாவது:


பாகுபலி 2 இன் வெற்றி எதிர்பார்த்ததுதான் என்றாலும், 9 நாள்களில் ரூ.1000 கோடி (இந்திய) வசூலித்து மிகப்பெரிய சாதனைபடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப்படம் இவ்வளவு பெரிய சாதனை படைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. ஒரு தெலுங்கு சினிமா எல்லை கடந்து உலகம் முழுவதும் வெற்றி பெற்று இருக்கிறது. இதை ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த படம் என்று பார்க்காமல் எல்லோருக்குமான படம் என்று அனைவரும் ரசிக்கிறார்கள். இது இந்த படத்துக்குக் கிடைத்த பெருமை.

இந்தப்படத்தை இயக்கிய ராஜமவுலி, நடித்த நடிகர், நடிகைகள், பங்கேற்ற தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவருக்கும் இந்தப் பெருமை சொந்தமானது. இந்தச் சாதனையைப் படைக்க உதவிய ரசிகர்களுக்கு நன்றி. என்றார்.













இறந்த பின் சொர்க்கம் போக
ஆசையில்லை. நான் பிறக்கும் முன்பு
நான் வாழ்ந்ததே சொர்க்கத்தில்தானே!
தாயின் கருவறையில்!



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரவளர்ச்சியால்வருமானம் அதிகரிக்கும். வீடு, வாகன வகையில் செலவு ஏற்படும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**இடபம்**: அன்றாடப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் இலக்குநிறைவேறகால அவகாசம்தேவைப்படும். மிதமான லாபம் கிடைக்கும் வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** எதிர்கால நலன் குறித்த சிந்தனை மேலோங்கும். நண்பர்களின் ஆலோசனை நன்மைக்கு வழி வகுக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**கடகம்:** உறவினர் ஆதரவுடன் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பிள்ளைகளின்செயற்பாடுபெருமைதரும்.

**சிங்கம்:** மனதில் தற்பெருமை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான அளவில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர். போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம்.

**கன்னி:** வாழ்வில் மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாக்கவேண்டும். லாபம் சுமாராகஇருக்கும். பெண்களுக்கு, அக்கம்பக்கத்தினருடன்கருத்துவேறுபாடுஉருவாகலாம்.

**துலாம்:** உங்கள் பேச்சில் சாமர்த்தியம் நிறைந்திருக்கும். விடாமுயற்சியால்தாமதித்த பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும்.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழித்து வருமானம் பெருகும். குடும்ப வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வீர்கள். இயன்ற அளவில் தான, தர்மம் செய்வீர்கள்.

**தனுசு:** சிலர் சுயநல நோக்கத்துடன் உங்களை அணுகுவர். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிடலாம். அளவான பண வரவு கிடைக்கும். பெண்கள்பணிச்சுமைக்குஆளாகலாம்.

**மகரம்:** உடல்நலத்தில்அக்கறைகொள்வது நல்லது. தொழில், வியாபாரம்லாபம்மிதமாக இருக்கும். பிள்ளைகளின் செயற்பாடு மனதிற்கு ஆறுதல் அளிக்கும். உறவினரால் உதவி உண்டு.

**கும்பம்:** நண்பர்எதிர்பார்த்த உதவிசெய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்தி அளிக்கும். வீடு, வாகனம் புதிதாக வாங்க வாய்ப்பு உண்டு. விரைவில் பிள்ளைகளின் வழியில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** அறிமுகமில்லாதவரிடம் குடும்ப விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரால் பாராட்டப்படுவர்.

# சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | 9 | 5 | |
| | 3 | | | 8 | | | | |
| | | 5 | | | | | 2 | |
| 8 | 5 | | | 6 | | | 1 | |
| 7 | | 9 | | | | | | |
| | 1 | | | | | | | |
| | | | 9 | | | 8 | | 6 |
| | | | 8 | 5 | | 3 | 6 | |
| | | | | | 3 | | | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 2 | 4 | 5 | 6 | 8 | 7 | 1 |
| 4 | 1 | 8 | 3 | 7 | 9 | 2 | 5 | 6 |
| 7 | 5 | 6 | 2 | 1 | 8 | 4 | 3 | 9 |
| 2 | 4 | 3 | 9 | 6 | 7 | 5 | 1 | 8 |
| 1 | 6 | 7 | 8 | 3 | 5 | 9 | 2 | 4 |
| 5 | 8 | 9 | 1 | 2 | 4 | 7 | 6 | 3 |
| 3 | 9 | 1 | 7 | 4 | 2 | 6 | 8 | 5 |
| 8 | 2 | 5 | 6 | 9 | 1 | 3 | 4 | 7 |
| 6 | 7 | 4 | 5 | 8 | 3 | 1 | 9 | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும்1–9வரையானஎண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்ல வார்த்தைகள்

ஒரு அழகான காட்டில் ஒரு காகமும் புறாவும் நண்பர்களாக இருந்தன. இரை தேடும் போதும், மற்றைய நேரங்களிலும் இரண்டும் ஒன்றாகவே சுற்றித் திரியும். ஒரு நாள் காகம் புறாவிடம் "நான் கூடு கட்டப் போகிறேன். அதுவும் இதுவரை எவரும் கட்டியிருக்க முடியாத அழகான கூடொன்றைக் கட்டப் போகிறேன்" என்றது. "கூடு கட்டுவது சரி. எங்கே கட்டப் போகிறாய்?" என வினவியது புறா. "வேறு எங்கு? நாம் எப்போதும் உட்கார்ந்து விளையாடுவோமே அந்த இடத்தில்தான்" என்றது காகம். புறா "என்ன சொல்கிறாய் நண்பா?. அந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடம். அதுவும் மின் கம்பத்தில் மின்சாரக் கசிவும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. காற்று அடித்தால் உன் குஞ்சுகளும், கூடும் விழுவதற்கும் வாய்ப்புள்ளது. இந்த அழகான காட்டில் எவ்வளவு பலமான மரங்களும் மரக்கிளைகளும் உள்ளன. இங்கேயே கூட்டைக் கட்டிக் கொள். அதுதான் உன் குஞ்சுகளுக்கும் நல்லது" என்றது. காகமோ "மனிதர்களும் வாகனங்களும், நீண்ட தெருக்களில் நடமாடும் அழகை, அங்குள்ள உயரமான மின்கம்பங்களில் இருந்தால் தான், நன்கு ரசிக்க முடியும். என் குஞ்சுகளும் என்னுடன் அந்தக் காட்சிகளை ரசிக்கட்டுமே" என்றது. புறா மீண்டும் மீண்டும் மறுப்புத் தெரிவிக்கவே, காகம் கோபமடைந்து. "இதோ பார். என் கூட்டை எங்கு அமைக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்" என்று கொஞ்சம் காரமாகக் கூறி புறாவின் அறிவுரையை அலட்சியம் செய்தது. புறா மௌனமாக அவ்விடம் விட்டு பறந்து போனது.

காகம் குறித்த மின் கம்பத்திலேயே குச்சிகளைச் சேகரித்து அழகான கூட்டைக் கட்டியது. முட்டையிட்டு 3 குஞ்சுகளையும் பொரித்தது. சந்தோஷமாக தன் குஞ்சுகளுடன் கீழே மானிடரின் போக்குவரத்து செயற்பாடுகளை வேடிக்கை பார்த்த படி பொழுதைக் கழித்தது. நண்பனான புறா சொன்னதை இடையிடையே நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொள்ளும். தினமும் காலையில் இரை தேடிக் கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டி மகிழும். இப்படியே சிறிது காலம் சென்றது.

ஒரு நாள் காகம் வழக்கம் போல வெளியே இரை தேடிச் சென்றது. அப்போது மழை ஆரம்பிக்க, கூடவே பலமான காற்றும் வீசத் தொடங்கியது. உடனடியாக கூட்டுக்குச் செல்ல முடியாத நிலை காகத்துக்கு. அது ஒரு சாப்பாட்டுக் கடையின் தாழ்வாரத்தில் ஒதுங்கி நின்று மனதுள் குஞ்சுகளின் நிலை என்னவோ ஏதோ என பதறிக் கொண்டிருந்தது. திடீரென காற்றும் மழையும் நின்று போயின. காகம் வேகமாகப் பறந்து மின்கம்பத்தை அடைந்தது. அங்கே கூடும் இல்லை; குஞ்சுகளும் இல்லை, அதிர்ச்சியடைந்த காகம் அங்கிருந்து கீழே பார்த்தது. அந்தோ... பரிதாபம். அங்கே கூடும் சிதைந்து மூன்று குஞ்சுகளும் வாகனச் சில்லுகளுக்குள் அகப்பட்டு இறந்து கிடப்பதைக் கண்டது. நெஞ்சு பதற காகம் கீழே பறந்து வந்தது. குஞ்சுகளை எடுத்து மார்போடு அணைத்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கியது. அதன் உறவுகள் எல்லாம் அந்த கம்பத்தின் கீழ் நின்று இறக்கைகளை அடித்து அழுது கொண்டிருந்தன.

அப்போது நண்பனின் நிலையறிந்து ஓடோடி வந்த புறாவைக் கட்டிக் கொண்டு பெருங்குரலெடுத்து அழுதது காகம். "என்னை மன்னித்து விடு. என் முட்டாள் தனத்தால் உன் சொல்லையும் மீறி நடந்து கொண்ட எனக்கு கிடைத்த தண்டனையைப் பார்த்தயா?" என வாய்விட்டழுதது. "சரி இனிமேலாவது புத்திசாலித்தனமாக நடந்து கொள்" என்று காகத்துக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தது புறா.

**நல்ல கருத்துகளை எவர் கூறினாலும் அதனை ஏற்று வழிநடந்தால் வாழ்க்கையில் நல்லதே நடக்கும்.**

# வெசாக் பண்டிகை (விசாகப் பெருநாள்)

- பௌத்த மக்களின் பிரதான பண்டிக்கைகளில் வெசாக் பண்டிகை முதன்மையானதாகும்.
- ஒவ்வொரு வருடமும் வைகாசி பூரணை தினத்தில் இது கொண்டாடப்படுகிறது.
- வெசாக் தினத்தில் கௌதம புத்தரின் வாழ்வின் மூன்று முக்கிய சம்பவங்கள் சிறப்பித்து கொண்டாப்படுகின்றன. அவை
  - லும்பினியில் சித்தார்த்தரின் பிறப்பு (இன்றை நேபாளம்)
  - புத்த பெருமான் புத்த காயாவில் ஞானம் பெற்றமை.
  - புத்த பெருமானின் பரி நிர்வாண நிலை (சமாதியடைதல் இறப்பு)



- இம் மூன்று நிகழ்வுகளும் மே மாதம் பூரணை நாளன்று நிகழ்ந்ததாக பௌத்தர்கள் நம்புகின்றார்கள்.
- இந்த நாளில் புத்தரின் இந்த வரலாற்று நிகழ்வுகளைச் சித்திரிக்கும் மாபெரும் அலங்கார தோரணங்கள், பந்தல் அலங்காரங்கள் நகர் பகுதிகளின் பிரதான வீதிகள், சந்திகளில் அமைக்கப்பட்டிருக்கும். இந்த வரலாற்றுக் கதைகள் ஒலிபெருக்கிகள் மூலம், கவிதை வடிவிலும் உரை வடிவிலும் ஒலிபரப்புச் செய்யப்ப டும்.
- வீடுகளிலும் வெளியிடங்களிலும் வெசாக் கூடுகளும், அலங்கார வெளிச்சக் கூடுகளும் அமைக்கப்பட்டிருக்கும்.
- சீன கலாசார முறையிலமைந்ததாக் கூறப்படும் இந்த அலங்கார தோரணங்களையும், வெளிச்சக் கூடுகளையும் கண்டுகளிக்க பெருந்தொகையான மக்கள் கூடுவர்.
- விகாரைகளில் சமயக் கிரியைகளும் கலாசார நிகழ்வுகளும் நடைபெறும்.
- வீதிகள் தோறும் அன்னதான நிகழ்வுகள், தண்ணீர்ப் பந்தல் உபசாரங்கள் என்பன நடைபெறும்.

# ஒரு கடிதம் எழுதுவோம்

1. கடிதம் எழுதத் தொடங்கு முன்பு கடிதத் தாளின் வலது பக்க மேல் மூலையில் எமது முகவரி (வீட்டிலக்கம், வீதிப் பெயர், ஊர் பெயர்) எழுதும் அன்றைய திகதி என்பன எழுதப்படல் வேண்டும். வீதிப் பெயர், ஊர் பெயர் எழுதும் போது அடுத்தடுத்து காற் புள்ளிகளும் (,) திகதி எழுதிய பின்பு நிறுத்தற் குறியும் (.) இட வேண்டும்.
2. பின்னர் கடிதத்தாளில் முகவரியின் திகதி எழுத்தப்பட்டதற்கு சற்று கீழே இடது பக்கத்தில் எவருக்கு கடிதம் எழுதுகிறோமோ அவரை விளித்து அதாவது அன்புள்ள நண்பா/மாமா/சகோதரி/என எழுதி அதன் பக்கத்தில் காற்புள்ளி (,) இட வேண்டும்.
3. இதனைத் தொடர்ந்து நலம் கூறி, நலம் வின வும் பகுதி அமையும்.
4. அடுத்த பகுதி கடிதத்தின் உடல் எனப்ப டும். இது கடிதம் கூறப் போகும் விடயத்தை அல்லது செய்தியைக் கொண்ட தாக அமையும். கடிதத்தில் என்ன விடயத்தைத் தெரிவிக்க விரும்புகிறோமோ அவ்விடயம் சுருக்கமாக எழுதப்பட வேண்டும்.



5. கடிதத்தின் இறுதிப் பகுதியில், கடிதத்தை எந்த உறவு முறையில் விளித்து எழுதினோமோ அந்த உறவுக்கேற்ப தாளின் வலது பக்கத்தில் எழுதி அதன் கீழ் கையொப்பம் இட வேண்டும்.
6. பெற்றோருக்கு எழுதி முடிக்கும் போது , அன்பு மகன்/ அன்பு மகள் / நண்பனுக்கு எழுதும் போது அன்பு நண்பன்!, மூத்த வர்களுக்கு எழுதும் போது உங்கள் அன்புத் தம்பி / தங்கை, இளையோருக்கு எழுதும் போது உன் அன்பு அண்ணன் / அக்கா என்று எழுதி முடிக்கலாம்.
7. மேலதிகாரிகளுக்கு எழுதும் போது தங்கள் உண்மையுள்ள / பணிவுள்ள என்று எழுதி முடிக்கலாம்.
8. பொதுவாக கடிதம் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் வகையில் எழுதப்பட வேண்டும்.




நீரில் வாழும் பிராணி சீல். இது குட்டி போட்டு பாலூட்டும் பாலூட்டிகள் வகுப்பைச் சேர்ந்தது. குளிர்ந்த நீருள்ள வட துருவக் கடற்பகுதிகளில் இவை அதிகமாகக் காணப்படுகின்றன.

நீந்துவதற்கு ஏற்ற உடலமைப்புக் கொண்டவை. இவற்றின் கால் விரல்கள் மெல்லிய தோலினால் இணைக்கப்பட்டுள்ளன. நிலத்தில் நடப்பதற்கும் இந்தக் கால்கள் உதவியாக உள்ளன. சீல்களில் பல வகைகள் உண்டு. இவை கூட்டங் கூட்டமாக வாழுகின்றன. பெண் சீல்களை விட ஆண் சீல்கள் பெரியவை. சில ஆண் சீல்கள் 6 மீற்றர் நீளம் உள்ளன. இவை பொதுவாக பழுப்பு நிறமானவை. கறுப்பு நிறத்திலும் காணப்படுகின்றன. குளிர் காலத்தில் இவை கடலில் நெடுந் தொலைவு செல்லும். கோடை காலத்தில் முன்பு வாழ்ந்த அதே இடத்துக்கு வந்து சேரும். இவை நீரில் வாழ்ந்தாலும் நிலத்தில் தான் குட்டி போடும். மீன், நண்டு, நத்தை முதலியன சீல்களின் உணவு. எஸ்கிமோ மக்கள் சீல்களின் இறைச்சியை உணவாகக் கொள்கின்றனர். இவற்றின் தோலை ஆடையாகப் பயன்படுத்துவர். இவை பெருமளவில் வேட்டையாடப்படுவதால் இவற்றின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கிறது. இவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு பல நாடுகள் ஒன்று கூடி சீல்களை வேட்டையாடுவதற்கு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. சீல்களை எளிதில் பழக்கி எடுக்கலாம்.





# கொக்கோ

வெப்பமும் மழையும் அதிகமாக உள்ள மத்திய கோட்டுப் பிரதேசங்களில் கொக்கோ மரங்கள் நன்கு வளர்கின்றன. இந்த மரம் சுமார் 9 மீற்றர் உயரம் வளரும். ஒரு மரத்தில் ஆயிரக் கணக்கில் பூக்கள் மலரும். இதில் ஓர் அதிசயம் என்னவென்றால் கிளைகளில் மட்டுமன்றி அடிமரத்திலும் பூக்கள் பூக்கும். ஆனால் பெரும்பாலான பூக்கள் உதிர்ந்து விடும். ஒரு மரத்தில் 20 அல்லது 30 பூக்களே காய்களாக ஆகின்றன.

காய்கள் முற்றிப் பழுத்தவுடன் அவற்றைப்பறித்து உள்ளிருக்கும் விதைகளைச் சேகரிப்பார்கள். இவ்விதைகளை நன்றாகக் கழுவி, உலர வைத்து பக்குவமாக வறுப்பார்கள். இவ்வாறு வறுப்பதால் இவற்றுக்கு ஒருவித நிறமும் மணமும் உண்டாகும். வறுத்த விதைகளை உடைத்து புடைத்து ஒடு வேறு பருப்பு வேறாகப் பிரித்து பருப்பை இயந்திரத்தில் இட்டு அரைப்பார்கள். அரைக்கும் போது சூடேறி பருப்பு இளகும். இதனுடன் பால் சர்க்கரை முதியவற்றைச் சேர்த்து மீண்டும் அரைப்பார்கள்.

இளகிய கொக்கோ திரவத்தை மீண்டும் இயந்திரத்தில் இட்டு அழுத்தும் போது கொக்கோ வெண்ணெய் என்ற கொழுப்புப் பொருளும் கிடைக்கிறது. மருந்து, வாசனைப் பொருள், சோப்பு முதலியன செய்யவும் இதனைப் பயன்படுத்துவர். கொழுப்பு நீக்கிய கொக்கோவைத் தூளாக்கி பானங்கள், சுவையான இனிப்புபண்டங்கள் (சொக்லட்) தயாரிக்கப் பயன்படுத்துவர்.






## மிருகக் காட்சிசாலையில் பார்த்த மிருகங்களின் பெயர்களை எழுதுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

## இன்று...

திகள் 4 மோடியின் பாதுகாப்புக்காகவும் போக்குவரத்துக்கும் ஏற்கனவே கொழும்புக்கு வந்துள்ளன.

இன்று மாலை 6 மணிக்கு நரேந்திர மோடி கொழும்பை வந்தடைவார். அவரை வானூர்தி நிலையத்தில் வைத்து இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்கவுள்ளார். வெசாக் நிகழ்வில் தலைமை விருந்தினராக மோடி கலந்து கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் வெசாக் நிகழ்வில் மோடி கலந்துகொள்வார்.

அதன் பின்னர் மோடி நாளை கண்டிக்குச் செல்லவுள்ளார். அங்கு தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபடுவார். பின்னர் இந்தியா அரசின் நிதி உதவியில் நவீன வசதிகளுடன் டிக்கோயா வைத்தியசாலையில் நிர்மாணிக் கப்பட்ட கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

(த-4)

## பொலி...

சம்பவம் தொடர்பில், சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் விசாரணை அறிக்கை கோரியுள்ளார்.

எவ்வித முன்னேற்பாடுகளும் இன்றி இது போன்ற சுற்றிவளைப் புக்கு செல்வதற்கான தேவை உட்பட சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை மூன்று நாள்களுக்குள் தனக்கு வழங்குமாறு அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.

அறிக்கையைத் தயார் செய்வதற்காக மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லத்தீப்பை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நியமித்துள்ளார்.

பிலியந்தலையில் வங்கிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில்,
முதலாம் மாடியில் கடை வாடகைக்கு
உண்டு. (960 சதுர அடி)
(அலுவலக பாவனைக்கு உகந்தது)

**077 441 3579**

### வேலைவாய்ப்பு

யாழ். நகரிலுள்ள முன்னணி நிறுவனம்
ஒன்றிற்கு Office Admin தேவை.
ஆங்கிலம், IT தகைமையுடையோர்
தொடர்பு கொள்ளவும்.

**075 661 6461**

### தேவை

அரைக்கும் ஆலையில் பழகவிரும்புபவர்,
பொதியிடல்,பில்கிளாக் உதவியாளர்
என்பனவற்றுக்கு பெண்பிள்ளைகள் தேவை.
தொடர்பு. 077 991 2304

### ஜேர்மன் (Deutsch) மொழி

பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம்
**Level - A1, A2 இற்கானது**
மாலைநேரம்-கிழமை நாள்களிலும்
பகல்நேரம்-சனி மற்றும் ஞாயிறு
ஆசிரியர்
திருமதி வ.சிவன்யா
(Qualified German Teacher
by Goethe institude)

தொடர்பு இல. 077 318 4463
முகவரி இல.15, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

### இலவச UK கற்கைநெறிகள்



**Fundermental Certificates**
- Business Management
- Human Resources
- Project Management
- Online Marketing
- English Grammar

**Introductory Certificates**
- Caregiving (நோயாளர் பராமரிப்பு)
- E-commerce
- Marketing Management
- Spoken English
- Teaching English

சுவடி நிறுவகம்
076 838 4466

பதிவுசெய்யும் ஒழுங்கின்படி
அனுமதி வழங்கப்படும். சான்றிதழ்
கட்டணம் மட்டுமே உண்டு.

### TALENT SEARCH - 2017

*For music lovers of any age*

Conducted by the Western Music Society of St. John's College, Jaffna
in partnership with YMCA Jaffna and
organized by the Talent Search 2017 Committee

Venue — Peto Hall, St. John's College, Jaffna
Date — Saturday, 13th May 2017
Time — 4:30 pm

**300/=, 500/=, 1000/=**

'Creating a space to excel in Western Music'

**Tickets can be Purchased at the college gate till Friday 4.00 pm**

## மரண அறிவித்தல்



| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 02 . 04 . 1956 | 07 . 05 . 2017 |

### திருமதி இராசபூபதி மாணிக்கசிவம்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசபூபதி மாணிக்கசிவம் (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சிவபாக்கியம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சசிக்குமார் மற்றும் சுரேஸ்குமார் (UK), றமேஸ்குமார் , கேதீஸ்குமார் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பகீரதி (UK), வினோஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிதா (UK), மதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2017) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்



எமது அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய மாண்புமிகு அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்.

**திருமதி இராசம்மா மார்க்கண்டு**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின்பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் எமது துயரங்களையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

இயக்குநர்,ஆசிரியைகள் ,மாணவிகள்
யாழ் . கலாலயா பயிற்சியகம் , 19,விக்ரோரியா வீதி,யாழ்ப்பாணம்

## நீங்கா நினைவுகளுடன் ஆண்டு ஒன்று



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 . 04 . 1952 | 11 . 05 . 2016 |

### சின்னத்தம்பி கருணானந்தன் (ஆனந்தம்)

அன்புடனும் பாசத்துடனும்
எல்லோரிடமும் சிரித்த முகத்துடனே பழகும்
எங்கள் சகோதரனே ஆனந்தம்
நீங்கள் வாழ்ந்த காலங்கள் எல்லாம்
எங்கள் வீட்டிலும் ஆனந்தம் தான்
ஆண்டொன்று ஆனதுவோ
நீங்கள் எமைவிட்டுச் சென்று ஆனாலும்
எமை விட்டு நீங்கிவிடுமோ உம் நினைவுகள்

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

நீங்கா நினைவுகளுடன்
சகோதரர்கள்.

## துயர் பகிர்கின்றோம்




| கணபதிப்பிள்ளை விநாசித்தம்பி | திருமதி நாகபூசணி விநாசித்தம்பி |
|---|---|

எமது வித்தியாலய ஆசிரியர் வி.முருகதாஸ் அவர்களின் பாசமிகு பெற்றோர்

கணபதிப்பிள்ளை விநாசித்தம்பி திருமதி நாகபூசணி விநாசித்தம்பி ஆகியோரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
**கிளி/இரணைதீவு றோ.க.த.வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்



### ஜோசப் ஜோர்ஜ்

யாழ். மருதடி வீதியைப்பிறப்பிட மாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் ஜோர்ஜ் 26.04.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஜோசப் சொர்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் ராஜமலர் அவர்களின் அன்புக்கணவரும் நிக்ஷன் (லண்டன்), ஜோன்சன் (லண்டன்), டெனிஷன் (லண்டன்), றிற்றர்சுதர்ஷன், சுஜாதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தில்லை தேசிகன் (சுவிஸ்), அனு(லண்டன்), கௌரி(லண்டன்), ஜஷ்மின் (லண்டன்) காலஞ்சென்ற நிகிலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.05.2017) வியாழக்கிழமை பி.ப 01.00 மணியளவில் St.Joseph's R C Church ,Wingfield Avenue, Worksop S81 0SF, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் Thievesdale Community Centre, Thievesdale Lane, Worksop S81 0XS, UK என்னும் இடத்தில் உறவினர், நண்பர்களுடனான ஒன்று கூடல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஜோ.றிற்றர் சுதர்சன் (மகன்)
077 966 7286, 077 662 0883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 பரீட்சைத் தொடர் - 08



## சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள்

## பாராட்டுப் பெறும் புலமைசாலிகள்



யாழ்-கிளிநொச்சிமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்கௌரவ ஈ.சரவணபவனின்பூரணஅனுசரணையுடன் கடந்தமார்ச்மாதம் ஒளிஅரசிமூலம்இடம்பெற்றதேசியரீதியிலானதரம் – 5தபால் மூலமான பரீட்சைத் தொடரில் [திருத்தற் சேவையுடன்] உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமைசாலிகளை சுடர் ஒளி, ஒளிஅரசி, புலமைச் சுடர் குழுமத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| பெயர் | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| மு. மக்கி மஸ்னவி | கம்.திஹாரி தா. ஆ.பாடசாலை. | 186 |
| வி.அபிராஜ் | யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலயம் | 183 |
| அபிசாந் | யா/நெல்லியடி அ. த.க.பாடசாலை | 178 |
| செ.செல்வானந்தம் | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 175 |
| ச.ரொமாஹா | கொ/நல்லாயன் ம.மகா வித்தியாலயம் | 175 |
| த. சங்கீர்த் | யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | 175 |
| ந. அநபாயன் | யா/ உடுப்பிட்டி -அ.மி.கல்லூரி | 174 |
| த.வியூசன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 173 |
| பி.அபிஷித் | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் | 173 |
| ப.நதுசா | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 172 |
| பா. சந்தியா | தி.ஸ்ரீ சண்முக இ.ம.கல்லூரி | 170 |
| ம்.ஆராதனா | உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 170 |
| வீ.கலைவாணி | யா/வல்வை அ.மி.த.க.பாடசாலை. | 170 |
| பா.பண்ணிலா | யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | 169 |
| க. தாரிகன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 168 |
| ஜ. பதுஷன் | மா/ஸ்ரீ குமரன் ஆ.பாடசாலை. | 167 |
| அ. ரெறோன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 167 |
| சா.கிருத்திகா | யா/உடுவில் ம.கல்லூரி. | 165 |
| த.ஹேசிகா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 165 |
| பி.ஔசதன் | ஜோதிபுரம், உடுப்பிட்டி | 165 |
| ச.ரந்துர்சன் | மற்ஸ் ஹோல் - வவுனியா | 164 |
| கே.நீரூபிகா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 164 |
| M.F.I Safqi Ahamed | மற்ஸ்ஹோல் - வவுனியா | 163 |
| கோ. ஹர்சிகா | மற்ஸ் ஹோல் - வவுனியா | 163 |
| து.துவாரகன் | கிளி/குமுழமுனை அ.த.க.பாடசாலை | 162 |
| H.A.M. ரிஸ்மி | மற்ஸ் ஹோல் - வவுனியா | 161 |
| யோ.சௌமியா | யா/வல்லை அ.மி.த.க பாடசாலை | 161 |
| ச.கிருஷிகன் | யா/ உடுப்பிட்டி அ.மி.க. பாடசாலை | 159 |
| அ. திவானுஜா | யா/ உடுவில் ம.கல்லூரி | 159 |
| ர.பாவனா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 159 |
| சி.போஷிகன் | மா/ ஸ்ரீ குமரன் ஆ.பாடசாலை | 159 |
| தி. ஷகிந் | மற்ஸ்ஹோல் வவுனியா | 158 |
| தி.ஷஜீலா | மற்ஸ் ஹோல் - வவுனியா | 158 |
| த.தக்சஜன் | யா/ உடுப்பிட்டி அ.மி.க. | 157 |
| ம. அபிலாஷினி | யா/ கோ.நாவலர் த.வித்தியாலயம். | 157 |
| பொ.சாதனா | யா/நெல்லியடி.மெ.மி.த.க.பாடசாலை | 156 |
| யோ.நிருத்திகா | யா/நெல்லியடி.மெ.மி.த.க.பாடசாலை | 156 |
| ம.அர்ச்சயா | மற்ஸ் ஹோல் - வவுனியா | 156 |
| ம.உ.முகம்மது முட்சிப் | மட்/மம.அறபா வித்தியாலயம் | 156 |
| க.கம்சிகா | யா/பொலிகண்டி இ. த.க.பாடசாலை | 156 |
| து.நிருஷன் | யா/ உடுப்பிட்டி அ.மி.க. | 154 |
| ச.அட்சயன் | மற்ஸ்ஹோல் -வவுனியா | 154 |
| ம.ஜென்சிகா | கிளி/குமுழமுனை அ.த.க.பாடசாலை | 154 |
| ம.கார்த்திகன் | யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை | 154 |
| ரா.சிறிகாந் | சைவ மங்கையர் வித்தியாலயம் | 154 |
| டே.த.ஆதவன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 153 |
| க.அஸ்வினி | கொ/விவேகானந்தர்க் கல்லூரி | 153 |
| ர. நிர்ஜா | கொ/ இராமநாதன்.இ.ம.க | 153 |
| ஜ.தரணிகா | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் | 153 |
| ச.சயன் | யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை | 153 |
| பா.டனுசியா | சைவ மங்கயர் வித்தியாலயம் | 152 |
| ம.கனிஷா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 152 |
| செ.டிசாயினி | மற்ஸ் ஹோல் - வவுனியா | 152 |
| வி.மீரஜா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 152 |
| சி.அகார்ஷன் | மற்ஸ்ஹே ஹோல்- வவுனியா | 151 |
| பா. அபிசாளினி | மற்ஸ்ஹோல் - வவுனியா | 151 |
| சி.ஹஷ்மிதன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 150 |
| ஞா.ஸாகரி | யா/நெல்லியடி.மெ.மி.த.க.பாடசாலை | 150 |
| த.மோசிகா | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 150 |
| அ.அ.பாத்திமா அஸ்னா | அல்.முபாரக். க.வித்தியாலயம் | 149 |
| க.மதுரா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 149 |
| த.நிலுக்ஷன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 149 |
| பைஸர் ருகையா ஹானி | சாஹிரா ம.வித்தியாலயம் | 149 |
| சபியா - பாத்திமா | மகளிர் கல்லூரி | 149 |
| க. அனார்த்தனன் | யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | 149 |
| பி.கானுஜன் | யா/கொக்குவில் இ.ஆ.பாடசாலை | 148 |
| சு.மகிழ்நிலா | யா/கைதடி வி. வித்தியாலயம் | 148 |
| சு.அஷ்வதன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 148 |
| சு.தபுஷாலினி | யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் | 148 |
| தி.அருங்கிரன் | யா/வல்லை அ.மி.த.க பாடசாலை | 148 |
| தி.அஜேய் | கொ/விவேகானந்தா கல்லூரி | 148 |
| பா.துனுஜா பத்தூல் | அக்/அஸ் - ஸிறாஜ் க.பாடசாலை | 147 |
| ம.சொவ்யா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 147 |
| பா.சதுர்சனா | சைவ மங்கயர் வித்தியாலயம் | 146 |
| ஈ.தர்சன் | யா/மூளாய் சை.பிரகாச வித்தியாலயம் | 145 |
| சி.அபிரேகா | யா/ஏழாலை சைவ.சன். வித்தியாலயம் | 145 |
| அ.ரிதுசிகா | மற்ஸ் ஹோல் - வவுனியா | 145 |
| சி.அனோஜன் | யா/நெல்லியடி.மெ.மி.த.க.பாடசாலை | 145 |
| வி.ரோகித் பிரசாத் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 145 |
| ஜெ.மதுகரன் | யா/ மூளாய் சை.பிர.வித்தியாலயம் | 144 |
| ஜெ.டினோசன் | யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | 144 |
| சே.கிருஷியன் | வ/வவுனியா விபுலா. கல்லூரி | 144 |
| பு.நிருஞ்சபா | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 144 |
| க.தேன்மொழி | மு/ விநாயகபுரம் அ.த.க.பாடசாலை | 143 |
| ந.பாத்திமா பாஷா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 143 |
| க.கோபிகா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 143 |
| சி.அகல்ஜன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 143 |
| அ.சேகன் | வத்தளை R.C.T.V | 143 |
| கி.டேஷினியா | கொ/நல்லாயன் ம.மகா வித்தியாலயம் | 143 |
| கா.அடிக்ஷனா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 142 |
| உ.அவிர்ஷாஜினி | மற்ஸ்ஹோல் - வவுனியா | 142 |
| ஸ்ரீ.சுடர்சி | மற்ஸ்ஹோல் - வவுனியா | 142 |
| க.கோகுலன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 142 |
| வி.ஸஜீவன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 142 |
| இ.ஜித்தீஸ் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 141 |
| கி.புவிஷா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 141 |
| இ.ரதுமஷா | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 141 |
| பா.கிருஷா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 141 |
| உ.கீர்த்திகா | யா/அ.மி.த.க.பாடசாலை | 141 |
| ஜெ.சமர்வாணன் | கிளி/குமுழமுனை அ.த.க.பாடசாலை | 140 |
| இ.பிரணவி | கொக்குவில் இந்து.ஆ.பாடசாலை | 140 |
| சோ.சஜிந்தா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 140 |
| ம. கிருஷாளன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 140 |
| கி.பாதுஷன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 140 |
| அ.யாழரசி | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 140 |
| ச.நிக்சயா | கொ/கணபதி இந்து ம.ம.வித்தியாலயம் | 140 |
| ஜெ. நிதர்ஷன் | மற்ஸ்ஹோல் -வவுனியா | 139 |
| நி.பிரியந்த் | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | 139 |
| பி.பிறேமிதாஸ் | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 139 |
| ஸ்ரீ.டிலக்சினி | மற்ஸ்ஹோல் - வவுனியா | 139 |
| ச.டிலக்ஸிதா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 138 |
| சு. ஷர்வின் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 138 |
| வி.கிசோர் | றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் | 138 |
| இ.அன்டனிராஜ் | நல்லாயன் கன்னியர் மடம் | 138 |
| க.அனுரேகா | யா/கோ. நாவலர் த.வித்தியாலயம் | 137 |
| ச.நேருஜன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 137 |
| அ.சபரீசன் | வத்தளை R.C.T.V | 137 |
| த.அபூர்வன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 136 |
| சு.மதுமிலன் | மற்ஸ்ஹோல் -வவுனியா | 136 |
| ந.அபர்ணா | யா/விட.கமலாசனி வித்தி வித்தியாலயம் | 136 |
| பா.நிவேதிகா | சைவ மங்கையர் வித்தி வித்தியாலயம் | 136 |
| த.லாவன்ஜா | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 136 |
| செ.ஆர்த்திகன் | யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை | 136 |
| தி.கபிஷன் | மற்ஸ்ஹோல் வவுனியா | 135 |
| ரா.ஸருஜன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 135 |
| த.சாருஜன் | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் | 135 |
| ர.ரகுராம் | யா/உடுப்பிட்டி ம.கல்லூரி | 134 |
| ஜெ.கலையகன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 133 |
| கு.சயந்தவி | மற்ஸ்ஹோல் - வவுனியா | 133 |
| கோ.ஜதுசன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 133 |
| ந.அமீஷ்கா | யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை | 133 |
| ச.சேமினா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 132 |
| கு.ரிந்திஜா | கொ/புனித அன்னம்மாள் ம.மகா வித்தியாலயம் | 132 |
| வி.விபுசன் | மற்ஸ்ஹோல் - வவுனியா | 131 |
| ஜெ.சங்கவி | மற்ஸ்ஹோல் - வவுனியா | 131 |
| ச.கவிப்பிரணவன் | உவேஸ்லி | 131 |
| த.அணுபிரணவி | வத்தளை R.C.T.V | 131 |
| செ.ஜதுசனா | மற்ஸ்ஹோல் - வவுனியா | 130 |

உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் அருகிலுள்ள 'உதயன்' 'சுடர் ஒளி' முகவரிடம் ஒளிஅரசி சஞ்சிகையை பெறுவதன் மூலம் பங்குபற்றலாம். மேலதிக தொடர்புகளுக்கு 0718628351 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.



**முக்கிய குறிப்பு:** பிரபல சிங்கள ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களின் சரியான தமிழ் மொழி பெயர்ப்பு தமிழ் பேசும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைப்பது மிக அரிதாக உள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு இப்பரீட்சைத் தொடர் எமது பரீட்சைப் பிரிவால் நடத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப் பரீட்சைத் தொடருக்குக்கு பூரண அனுசரணையை வழங்கி வரும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ. சரவணபவனுக்கு தரம் 5 கல்விச் சமூகத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 0718628351 / 0714273035

பொறுப்பாசிரியர், பரீட்சைப் பிரிவு,
சுடர் ஒளி, ஒளி அரசி, புலமைச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவில்...

எடுங்கள்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் யாழ்ப்பாண வணிகர் கழகம் கோரியுள்ளது.

இது தொடர்பாகக் கடிதம் ஒன்றை வணிகர் கழகம் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளது.

கடந்த காலங்களில் உதாசீனம் செய்யப்பட்ட பலாலி விமான நிலையமும் காங்கேசன் துறை துறைமுகமும், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுச் சுமுகமான கூட்டரசு நிலவும் இந்தக் காலத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

பலாலி வானூர்தி நிலையத்தைப் பிராந்திய வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசுக்கு அதிக சிரமங்கள் தேவையில்லை. போர் ஏற்படுவதற்கு முன்பாகவே குறித்த வானூர்தி நிலையம் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. அபிவிருத்திக்கான நிலப்பரப்பையும் கொண்டுள்ளமை மேலும் வசதியாகவுள்ளது. பலாலி வானூர்தி நிலையத்தைப் பிராந்திய வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்தால் எமது மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

1. பெருமளவு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிள்ளைகள் தொகையும் கணிசமாக அதிகரித்து வெளிநாடுகளில் சுமார் 10 லட்சத்திற்கும் மேல் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று அறியப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு மாகாணத்தைப் பூர்வீகமாக கொண்டவர்கள். கலாசார ரீதியாகவும் தொடர்ந்து தொடர்புகளைப் பேணி வருகிறார்கள். பலாலி வானூர்தி நிலையத்தைப் பிராந்திய வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்தால் புலம் பெயர்ந்தவர்கள் பெருமளவு பயண நேரத்தைச் சேமிக்கக்கூடியதாக இருக்கும். நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவும் இதன் மூலமாக பொருளாதார வளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் சிறப்பாக முகம் கொடுக்க முடியும் என்று நிச்சயமாகக் கூறமுடியும்.

வடக்கு மாகாணத்தில் இதனால் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியானது வடக்குகிழக்கு மாகாணங்கள் மட்டுமன்றி வடமத்திய மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெருமளவு பங்கு செலுத்தும் வாய்ப்பும் அதிகமாக தென்படுகிறது.

2. புலம்பெயர் தமிழ் மக்கள் மட்டுமன்றி ஏனைய உல்லாசப் பயணிகளும் பெருமளவில் வடக்கு மாகாணத்துக்கு வருகின்றனர். இங்கு வாழும் மக்களின் கலை கலாசார விடயங்களில் அவர்கள் அதிகளவு ஆர்வம் கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. பலாலி வானூர்தி நிலையத்தின் அபிவிருத்தி இந்தப் பிராந்தியத்தின் சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியுடன் மட்டும் நோக்காது தேசிய பொருளாதாரத்திற்கு நாம் செலுத்தும் பங்கையும் கணிசமாக அதிகரிக்கும் வாய்ப்பையும் நாம் புறந்தள்ளலாகாது.

3. வடக்குகிழக்கு மாகாணங்களில் வேலையில்லாப் பிரச்சினையால் அவர்கள் விரக்தி நிலையில் இருப்பதனையும் காணமுடிகின்றது. இவ்வாறான இளைஞர்களுக்கு சுற்றுலாத்துறையில் அதிக வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும். வடக்குகிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கமும் செயற்றிட்டமும் பலாலி வானூர்தி நிலையத்தின் மேம்பாட்டுடன் இணைந்ததாகவே இருக்க முடியும்.

புலம் பெயர்ந்த மக்கள், தாங்கள் உண்ணும் உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களையும் இங்கிருந்து மிகவும் விருப்பத்துடன் வாங்கிச் செல்கிறார்கள். பலாலி வானூர்தி நிலையம் மூலமாக உள்ளூர் உற்பத்திகள் பெருமளவு ஏற்றுமதியாகும்.

5. நாட்டில் புதிதாக ஒரு வானூர்தி நிலையத்தைத் திறப்பதாயின் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களாவது செல்லும். இதுவரை பூரணமான பயனைப் பெற்றுக்கொள்ளாததும் அதிகளவு நன்மைகளை நாட்டுக்கு வழங்கக்கூடியதுமான பலாலி வானூர்தி நிலையத்தை நாம் இன்னும் கண்டுகொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது. வசதிகளை நாம் துரிதமாகப் பயன்படுத்தினால் ஒரு வருடத்திற்குள்ளாகவே பன்னாட்டுத் தரம் வாய்ந்த பிராந்திய வானூர்தி நிலையமாக இதனை அரசினால் தரமுயர்த்த முடியும். இதற்கு உதவ இந்தியா முன்வரும். ஏற்கனவே இந்திய அதிகாரிகளால் இதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. தற்போது பலாலி வானூர்தி நிலையம் இரண்டரைக் கிலோ மீற்றர் வரையிலான ஓடுபாதையைக் கொண்டிருந்தாலும் இலகுவாக மூன்றரைக் கிலோ மீற்றராக நீடிப்பதற்குத் தேவையான அரச காணிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

8. தனியார் காணிகளோ, வேறு காணிகளோ சுவீகரிக்கவேண்டிய தேவை ஏற்படாது.

9. இந்த வானூர்தி நிலையம் பிராந்திய வானூர்தி நிலையமாக தரமுயர்த்தப்படின் தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையிலான சிறப்பு வானூர்தி நிலையமாகவும் அதிகளவு மக்கள் குடாநாட்டுக்கு நேரடியாக வந்துசெல்லக்கூடியதாகவும் அமையும். நாட்டுக்குத் தேவையான அன்னியச் செலாவணி பெருமளவில் கிடைக்கும்.

10. பலாலி வானூர்தி நிலையம் கடலோடு இணைந்ததாக இருப்பதும் அருகில் காங்கேசன் துறைமுகம் அமைந்திருப்பதும் எமக்கு கிடைக்கப் பெற்ற பெரிய செல்வங்கள். எனவே இந்தத் துறைமுகத்தையும் பலாலி வானூர்தி நிலையத்தையும் இனியும் காலம் தாழ்த்தாது துரிதமாக அபிவிருத்தி செய்து மக்களின் பயன்பாட்டுக்கும் பொருளாதார வர்த்தக தேவைகளுக்கும் பயன்படுத்த அரசு ஆவன செய்யவேண்டும்.

11. இந்த அபிவிருத்திகளை இனியும் நாம் உதாசீனம் செய்தால் எமது பிராந்தியத்தின் பொருளாதார வர்த்தக வளர்ச்சியில் தேக்க நிலமை ஏற்படும்.. அதிகரித்துச் செல்லும் வேலையில்லாப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாத நிலமை ஏற்படும். இளைஞர்கள் மத்தியில் விரக்தி நிலமை ஏற்பட்டு அவர்கள் மீண்டும் வெளிநாடுகளை நோக்கிச் செல்ல எத்தனிப்பர். இதனால் நாட்டுக்குத் தேவையான மனித வலுவை நாம் மேலும் மேலும் இழக்க வேண்டி ஏற்படலாம்.

12. இதனைப் பொதுமக்களுக்கான வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்யாவிடின் எதிர்காலத்தில் இது இராணுவ மற்றும் விமானப் படையின் வானூர்தி நிலையமாக மாற்றமடையும்.

14. காங்கேசன்துறைமுகம் வர்த்தக நடவடிக்கைக்காகத் திறந்து விடப்படல் வேண்டும். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் தற்போது கொழும்புத் துறைமுகம் மூலமே இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகம் செய்கின்றார்கள். இதனால் வீண் செலவும், தூரமும் அதிக நாள்களும் செல்கிறது. ஆகவே காங்கேசன் துறைமுகத்தை வர்த்தக நடவடிக்கைக்காக திறந்துவிடல் வேண்டும்.

பொருளாதாரத்தில் புத்துணர்ச்சி பெற்ற புதிய பிராந்தியமாக வடபிராந்தியம் எழுச்சிபெற இது எமக்கு ஒரு வாய்ப்பாக கருதுகின்றோம். இதுதொடர்பில் தாங்கள் இலங்கை அரசுடனும் இந்தியத் தலைமை அமைச்சருடனும் உரையாடி விரைவாக நடவடிக்கை எடுப்பீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது.

இதன் பிரதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ. சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி. ஸ்ரீதரன், ஐ. சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகம் என்பனவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (த-48)

## ஒரே...

தேசிய சங்கத்தின் தலைவர் அமைச்சர் திகாம்பரமும் நாளை வெள்ளிக் கிழமை ஒரே மேடையில் அமரவுள்ளனர்.

இலங்கைக்கு இன்று பயணம் மேற்கொள்ளும் இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி நாளை காலை ஹற்றனுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நோர்வூட் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடையிலிருந்து மலையக மக்களுக்காக அவர் சிறப்புரையாற்றவுள்ளார். இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹற்றன், கிளங்கன் வைத்தியசாலையையும் திறந்து வைக்கவுள்ளார். இதனால், ஹற்றன் எங்கும் வரலாறுகாணாத வகையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. புலனாய்வு அமைப்புகளும் உசார்நிலையில் இருக்கின்றன.

பிரமுகர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள மேடையில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் மனோ கணேசன், அமைச்சர் பி.திகாம்பரம், கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன், ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம் ஆகியோரும் அமரவுள்ளனர்.

மலையகத்தில் ஏதேனும் ஒரு நிகழ்வுக்குத் திகாம்பரத்தை அழைத்தால் அதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பங்கேற்பதைத் தவிர்ப்பதும் அதேபோல் தொண்டமானை அழைத்தால் திகாம்பரம் அணி அந்த நிகழ்வைப் புறக்கணிப்பதும் வழமையான சம்பவங்களாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## கூட்டமைப்பின்...

கிழமை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் செயற்படுத்துவதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ள முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு வேலைத்திட்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தலைமையிலான குழுவின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, ஒரு வீட்டுக்கு 1.5 மில்லியன் ரூபா எனும் அடிப்படையில் 6 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்குப் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைச் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் 6 ஆயிரம் முன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை அமைப்பது தொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மறுவாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காகச் சிமெந்துக் கற்கள் பாவித்து நிர்மாணிப்பதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ள 59 ஆயிரம் வீடுகள் அமைப்பதைச் செயற்படுத்தும் முறை தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு உயர் அதிகாரிகள் கொண்ட குழுவை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

வடக்குகிழக்கில் 60 ஆயிரம் முன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு வீடு 21 லட்சத்தில் (2.1 மில்லியன்) அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இரண்டு வீடுகள் முன்னோடியாக அமைக்கப்பட்டன. இதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. தற்போது 6 ஆயிரம் வீடுகளை, தலா 15 லட்சம் ரூபாவில் (1.5 மில்லியன்) அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (த-5)

## புதிய...

னாட்டு இராஜதந்திரிகள் ஊடாகக் கொழும்பு அரசுக்கு அழுத்தங்கள் பிரயோகிக் கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கடந்த மாதம் 25 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்ட வரைவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்துள்ளது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மிக மோசமான வரைவாக இது அமைந்துள்ளதாக அது சாடியுள்ளது.

மேலும் பயங்கரவாதச் சட்டவரைவு கடந்த ஆண்டு வெளியாகியபோது அதில் 4 திருத்தங்களைக் கூட்டமைப்பு முன்வைத்திருந்தது. அவற்றில் ஓர் திருத்தம் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய திருத்தங்கள் புறம் தள்ளப்பட்டன.

இந்த நிலையில், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பன்னாடுகளால் அங்கீகரிக்கக் கூடிய வகையில் இல்லை. உலக நாடுகளில் உள்ள பயங்கரவாதம் தொடர்பான சட்டங்களை மீறிய வகையில், மக்கள் சுதந்திரத்தை ஒடுக்கும் வகையில் கொழும்பு அரசு தயாரித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் கண்டித்துள்ளனர்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும், இராஜதந்திரிகள் அழுத்தங்களைக் கொடுத்துள்ளனர். (த-5)

## நெதர்லாந்துக்...

அந்த நாட்டு, அரசு இலங்கையிடம் உதவி கோரியுள்ளது.

நெதர்லாந்து தேசியக் கொடியுடன் பயணிக்கும் வணிகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் இரு நாட்டு அரசுகளுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இதற்கான யோசனையைப் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்தார். இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது. மேற்குலகம் உள்ளிட்ட நாடுகளின் வணிகக் கப்பல்கள் ஆபிரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுக்குச் செல்லவேண்டுமானால் இலங்கையின் எல்லைக்குட்பட்ட பகுதியிலேயே பயணிக்கவேண்டும். அந்த எல்லையைத் தாண்டிய பகுதியிலேயே கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் அதிகமாக இருக்கின்றது. எனவேதான், நெதர்லாந்து அரசு தாம் முன்னெடுத் துவரும் பாதுகாப்பு நடவடிக்கைக்கு மேலதிகமாக இலங்கையின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், ஆயுதம் தாங்கிய இலங்கைப் படையினர் குறித்த கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குவர். இதற்குரிய கட்டணத்தைக் கப்பல் கம்பனிகள் செலுத்தும். (த-5)

## ஆயர்...

திரிபால சிறிசேன வழங்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

சில நாள்களின் முன்னர் பொது நிகழ்வு ஒன்றில் பேசிய யாழ். ஆயர் மேதகு ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனம் குறித்து காரசாரமாக விமர்சித்தார்.

"பல்கலைக்கழகப் பேரவையால் முதலாவதாக நபராகத் தெரிவு செய்யப்பட்டவர் இருக்கத்தக்கதாக, அரசியல்வாதிகளின் கால்களில் போய் வீழ்ந்தவர் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இப்படி நியமனம் பெற்றவரை மாணவர்கள் மதிப்பார்களா? விரிவுரையாளர்கள் மதிப்பார்களா? கல்வியின் நிலை எங்கே போகிறது"என்று காட்டமாகக் கருத்துத் தெரிவித்திருந்தார் ஆயர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த புதிய துணைவேந்தர் ஆர். விக்னேஸ்வரன், "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவில் முதலிடத்தில் இருந்தவருக்குக் கிடைக்கவேண்டிய பதவியை நான் அரசியல்வாதிகளின் காலில் வீழ்ந்துதான் பெற்றுக்கொண்டேன் என அண்மையில் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஆதாரமில்லாமல் குற்றம்சாட்டியிருந்தார். ஆயரின் இந்தக் கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்" என்றார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

துணைவேந்தர் தெரிவுக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. அதில் முதலாவது இடத்தில் பேராசிரியர் சற்குணராஜாவும் இரண்டாவது இடத்தில் நானும் இருந்தோம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அரச தலைவருக்கு எமது பெயர் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அதேநேரத்தில் நாங்கள் பல்கலைக்கழகத்தில் இணைந்த காலத்திலிருந்து எமது செயற்பாடுகள் தொடர்பாகப் புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கைகளும் அரச தலைவருக்கு முன் வைக்கப்பட்டன. அந்த அறிக்கை முதலாமிடத்தில் இருந்தவருக்குப் பாதகமாகவும் எனக்குச் சாதகமாகவும் இருந்தமையால் முதலாம் இடத்தில் இருந்தவர் தட்டுப்பட்டு இரண்டாவதாக இருந்த எனக்குத் துணைவேந்தர் நியமனம் கிடைத்தது.

பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக இருந்த யாழ்ப்பாண ஆயருக்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவு முறைகள் தொடர்பில் விளக்கம் இல்லையா? முன்னைய காலங்களில் மூன்றாமிடத்தில் இருந்தவர்கள் துணைவேந்தராக நியமிக்கப்படும் போது அவர் அமைதியாக இருந்தது ஏன்?

ஒரு மதத்தின் குரு முதல்வராக இருந்து கொண்டு தரவுகளை ஆராயாமல் இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்துவது மரியாதைக்குரியதல்ல. தனக்கு ஏற்ற வகையில் அவர் கருத்துக்களை முன்வைப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றார். (உ-8)

## அமைச்சரவை...

யுள்ளார்.

இந்த நிலையிலேயே, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை மாற்றம் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதையும் பேசவில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ். பளுதூக்கல் சங்கத்துக்கு பெண்கள் பிரிவில் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்ட பளுதூக்கல் சங்கம் நடத்தும் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான பளுதூக்கல் தொடரில் பெண்களுக்கான 58 கிலோ எடைப் பிரிவில் யாழ்ப்பாணம் பளுதூக்கல் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்த பா.மேரிரதினா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா உள்ளக விளையாட்டரங்கில் இந்தப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. பா.மேரிரதினா 88 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் பளுதூக்கல் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்த யு.ஜினோ ஜலஸ்ரிக்கா 63 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.குமுதாஞ்சலி 58 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)





## பருத்தித்துறை செயலகத்துக்கு தட்டெறிதலில் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாஸ்ராஜ் தங்கப் பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது.
இதில் ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாஸ்ராஜ் 36.31 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
அதே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி.ஜதார்த்தன் 32.72 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.தேவகுமார் 30.22 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம108)

### ஆண்கள் பிரிவு


## 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் காரைநகருக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் காரைநகர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.கிருஸ்ணரூபன் தங்கப் பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று தடகளத் தொடர் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக இடம்பெற்ற ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் காரைநகர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.கிருஸ்ணரூபன் 36 நிமிடங்கள் 35 செக்கன்கள் 9 விநாடிகளில் ஓடி தங்கபதக்கத்தைப் பெற்றார். கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எம்.கிருபாகரன் 38 நிமிடங்கள் 10 செக்கன்கள் 9 விநாடிகளில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சஜித்குமார் 38 நிமிடங்கள் 35 செக்கன்கள் 7 விநாடிகளில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-422-108)



## குண்டுபோடுதல் போட்டி; தெல்லிப்பழை சாதித்தது

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான குண்டுபோடுதலில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.தரண்யா தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. பெண்களுக்கான குண்டுபோடுதல் போட்டி நேற்று நடைபெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.தரண்யா 7.65 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
வேலணைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சுஜீபா 7.53 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். யூலி சிந்துஜா 6.57 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-108)



யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியும் நேற்று நடைபெற்றது. (ம-[illegible])

## தங்கம் வென்றார் கிருசாந்தி

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்ட பளுதூக்கல் சங்கம் நடத்தும் தமது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான பளு தூக்கல் தொடரில் 53 கிலோ எடைப் பிரிவில் யாழ்ப்பாண பளுதூக்கல் சங்கத்தைச் சேர்ந்த ஈ.கிருசாந்தி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் 53 கிலோ எடைப் பிரிவில் 73 கிலோ பளுவைத் தூக்கி கிருசாந்தி தங்கம் வென்றார். எஸ்.மேரிடியாலினி 63 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினர். (ம-422)

## பெண்கள் பிரிவு 10,000 மீற்றர் ஓட்டத்தில் சாதித்தது சண்டிலிப்பாய்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்கள் பிரிவு 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.மஞ்சு தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.மஞ்சு 58 நிமிடங்கள் 13 செக்கன்கள்.21 விநாடிகளில் ஓடி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ.கீர்த்திகா ஒரு மணித்தியாலயம் 4 நிமிடங்கள் 8 செக்கன்களில் ஓடி வெள்ளிப் பதக்கத்தையும் சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. சத்தியராணி ஒரு மணித்தியாலயம் 7 நிமிடங்கள் 29 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-108)

## யாழ்ப்பாண பளுதூக்கல் சங்கம் பதக்க வேட்டை

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாண மாவட்ட பளுதூக்கல் சங்கம் நடத்தும் தமது அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான பளுதூக்கல் தொடரில் 48 கிலோ பெண்களுக்கான பிரிவில் அதி[illegible] அள்ளியது யாழ்ப்பாண பளுதூக்கல் சங்கம்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. யாழ்ப்பாண பளுதூக்கல் சங்கத்தைப் பிரதி நிதித்துவம் செய்த ஏ.ஆன்பியூலா 72 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஏ.திசாலினி 68 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், ஈ.வெனிஸ்ஜெனிபர்வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீளம் பாய்தலில் நல்லூர் அபாரம்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான நீளம் பாய்தலில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சதீசன் தங்கப் பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சதீசன் 6.58 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார். யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த யு.டி. ஜோய் 6.53 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.நிந்துஜன் 6.42 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-108)




# ஆவரங்கால் மத்தி, இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 11
நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் கலைமதியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.
நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதியது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கலைமதி அணி வெற்றி பெற்றது. சரிவில் இருந்து மீண்டு ஆக்ரோசமாக விளையாடிய ஆவரங்கால் மத்திய அணி அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:16, 25:20, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23-108)

# 162 கிலோ பளுவைத்தூக்கி தங்கம் வென்றார் வி.ஆசிகா




யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாண மாவட்ட பளுதூக்கல் சங்கம் நடத்தும் பளுதூக்கல் தொடரில் 162 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்றார் வி.ஆசிகா.
யாழ்ப்பாணம் துரையப்பா உள்ளக விளையாட்டரங்கில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. யாழ் பளுதூக்கும் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்த வி.ஆசிகா 63 கிலோ எடைப் பிரிவில் 162 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தை பிரதிநிதித்துவம் வி.அன்னலட்சுமி 52 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் எஸ்.பிரசாந்தி 50 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
பெண்கள்பிரிவில்சிறந்தவீராங்கனையாகவும் ஆசிகா தெரிவானார். (ம-422)




# நீளம் பாய்தல் போட்டி: கரவெட்டிக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான நீளம் பாய்தலில் பெண்கள் பிரிவில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஆரணி தங்கப் பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கான நீளம் பாய்தலில் கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஆரணி 4.97 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சாத்விகா 4.70 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சஜந்தினி 4.65 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-108)

# முப்பாய்ச்சலில் நல்லூரிடம் தங்கப்பதக்கம்


யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான முப்பாய்ச்சலில் பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ.நர்மதா 10.07 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எம்.மதுசாளினி 9.79 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சாத்வீகா 9.77 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-108)

# சமநிலை!

யாழ்ப்பாணம், மே 11
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தின ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமி டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (ம-23)

# இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், மே 11
உரும்பிராய் சரஸ்வதி வி.கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)



யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியும் நேற்று நடைபெற்றது. (ம-108)

# 400 மீற்றர் ஓட்டத்தில் நல்லூர் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 400 மீற்றர் ஓட்டத்தில் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சதீசன் தங்கப் பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இந்தப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.சதீசன் 53 செக்கன்கள் 3 விநாடிகளில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.
சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.விதுசன் 53.9 செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும், யாழ்ப்பாண பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.செந்தூரன் 54 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம-108)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு அணிக்கு கோக்லி தலைவர்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் விற்றோரி தெரிவுசெய்துள்ள கனவு அணிக்கு இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்த அணியில் கிரிக்கெட் உலகம் கண்ட ஆகச் சிறந்த தலைவர்களான பொண்டிங், ராவிட், வோர்ண், கலிஸ் உள்ளிட்டோர் இருந்த போதிலும் கோக்லிக்கு தலைமைத்துவம் கொடுக்கப்பட்டமை சில அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

விற்றோரியின் கனவு அணி - கோக்லி (தலைவர்), பொண்டிங், ராவிட், வில்லியர்ஸ், சச்சின், சங்கக்கார, கில்கிறிஸ்ட், வோர்ண், முரளிதரன், மெக்ராத், கலிஸ்.

இந்த அணியில் கிரிக்கெட் உலகம் கண்ட ஆகச் சிறந்த வீரர்களான லாரா, விவ் ரிச்சட்ஸ் போன்றோருக்கு இடம்கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# ரெய்னா ஏமாற்றம்!

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணிக்கு தேர்வாகாதமை குறித்து தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார் சுரேஸ் ரெய்னா.

அதிரடி வீரரான ரெய்னா, இந்திய அணியில் இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நீக்கப்பட்டார். அதன்பின்னர் அணிக்குத் திரும்புவதற்கு கடும் முயற்சிகளை எடுத்தபோதிலும் எவையும் கைகூடவில்லை. நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் ரெய்னா மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். இதனால் மினி உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் அவருக்கு இடம்கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் ரெய்னா நீக்கப்பட்டார். இதையடுத்தே அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மினி உலகக்கிண்ணத் தொடர் தனிச் சிறப்பு வாய்ந்தது. அந்தத் தொடரில் இடம்பெற வேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். எனவே வாய்ப்புக் கிடைக்காதமை ஏமாற்றமே என ரெய்னா மேலும் தெரிவித்தார். (ம)

# ஜொனியன்ஸ் அணி இறுதியில்

யாழ்ப்பாணம், மே 11

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் ஜொனியன்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டார்வின் 76 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிருந்தாபன், கஜீபன் இருவரும் தலா 3 இலக்குகளையும், சஞ்சேயன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 28 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து ஓர் இலக்கால் வெற்றிபெற்றது. (ம-23)



# அய்யரின் அதிரடியால் டெல்லி அபார வெற்றி

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் நிர்ணயித்த 196 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை அய்யரின் அதிரடியின் உதவியுடன் எட்டியது டெல்லி.

இந்த இரு அணிகளும் தொடரில் இருந்து வெளியேறிவிட்டதால் ஏனைய ஆட்டங்களில் உள்ள எதிர்பார்ப்பு இந்த ஆட்டத்தில் இருக்கவில்லை. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பைத் தெரிவுசெய்தது டெல்லி.

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் 5 இலக்குகள் இழப்புக்கு 195 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பின்ஞ் 69 ஓட்டங்களையும், கார்திக் 40 ஓட்டங்களையும், இசான் கிசான் 34 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் சமி, கம்மின்ஸ், மிஸ்ரா, பிரீத் வைட் நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லிக்கு முன்னணி வீரரான அய்யர் சிறந்த ஆட்டத்தை வழங்கினார். சாத்தியமற்றதாக இருந்த இலக்கை தனது அதிரடியின் மூலம் சாத்தியமாக்கினார். 33 பந்துகளில் அய்யரின் அரைச்சதம் பதிவானது. அவர் 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அய்யர் ஆட்டமிழந்த போது 4 பந்துகளில் 7 ஓட்டங்கள் பெறவேண்டும் என்ற நிலை இருந்தது. அடுத்தடுத்து பவுண்டரிகளை விளாசி அணியை வெற்றிபெற வைத்தார் மிஸ்ரா. (ம)

VACANCIES at IIS CITY CAMPUS

01. POST OF RECEPTIONIST

We are looking for the service of a proactive, well groomed and highly motivated receptionist.

Ideal Candidate Should Have :

- Hands on experience in front -desk operations.
- High attention to detail.
- Excellent telephone etiquettes and knowledge in customer service practices.
- Preferably a female below 35 years of age.

02. POST OF MARKETING ASSISTANT

We are looking for committed, dynamic & smart marketing personnel with significant achievements.

Ideal Candidate Should Have :

- Possess good communication and interpersonal skills.
- Relevant educational background.
- Experience and knowledge in marketing will be an added advantage.

If you are interested, Please send your CV indicating the post applied to the below mail address
hr@iis.edu.lk
on or before 17.05.2017

மேலதிக விபரங்களுக்கு:
Director - Human Resource
IIS City Campus,
200, Sivan Pannai Road, Jaffna.

TEL: 071-777-5666 / 021-222-8060 E-Mail : info@iis.edu.lk

## மரண அறிவித்தல்



### ஜேசுதாசன் திரேசம்மா

பேராலய வீதி (கதிற்றல் ) பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜேசுதாசன் திரேசம்மா நேற்று (10.05.2017) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற ஜேசுதாசனின் அன்பு மனைவியும் ஜோன்சன் (ஜேர்மன்), ஜஸ்மின் யூலியட்(OLR பாடசாலை ஆசிரியர்) ஜெனிற்றா, எமிலியா (சுவிஸ்), ஜெறாட் ,றொபின்சன்(சுவிஸ்), அன்ரனிற்றா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் தேவசகாயராசா, ராஜன்வாமதேவன் (சுவிஸ்) அண்ணாத்துரை (சுவிஸ்) , ஜெனோவா(ஜேர்மன்), ஆதிஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 13.05.2017 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். பேராலயத்தில் நடைபெற்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார் கெய்ல்

## தொடர்ச்சியான தோல்விகளின் எதிரொலி

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் தொடர்சியான தோல்விகளின் எதிரொலியாக ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார் பெங்களூர் வீரர் கிறிஸ் கெய்ல்.

இதுவரை 13 ஆட்டங்களில் விளையாடியுள்ள பெங்களூர் 10 ஆட்டங்களில் தோல்வியடைந்துள்ளது. ஐ.பி.எல். வரலாற்றில் அந்த அணியின் மோசமான பெறுதி இதுவே. இதையடுத்தே கெய்ல் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.



"எங்களது அணியின் ஆட்டம் மிகவும் மோசமானதாக இருந்தது. தொடர்ந்து தடுமாற்றங்களை வெளிப்படுத்தினோம். அணி தொடர்ந்து தோல்வியடைந்தாலும் ஏராளமான ரசிகர்கள் மைதானத்துக்கு வந்து தமது ஆதரவை எமக்குத் தெரிவித்தனர். அவர்கள் எதிர்பார்த்தை எம்மால் கொடுக்க இயலவில்லை. அதற்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்'' என கெய்ல் மேலும் தெரிவித்தார்.

பெங்களூர் அணித்தலைவர் கோக்லி, முன்னதாக ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டிருந்தார். பெங்களூருக்கு இன்னும் ஒரேயொரு ஆட்டம் மட்டுமே எஞ்சியுள்ளது. அந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றாலும் தரப்படுத்தலில் பெங்ளூர் கடைசி இடத்திலேயே தொடரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org